www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மே 2008
ரூ. 7.00








## நேபாளம்:
## வீழ்ந்தது மன்னராட்சி! மலர்கிறது மக்களாட்சி!

படிப்பகம்

www.padippakam.com

# "ஒகேனக்கல் கர்நாடகத்துக்குச் சொந்தம் – என கன்னட இனவெறியைத் தூண்டி ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தடுக்கும் பாரதிய ஜனதா கட்சியைத் தமிழகத்திலிருந்து விரட்டியடிப்போம்!"

## — தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டங்கள்

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்துக்கு எதிராகக் கன்னட வெறியைக் கிளப்பும் சதியைத் திட்டமிட்டே துவங்கியிருக்கிறது பாரதிய ஜனதா கட்சி. வரவிருக்கும் மாநில சட்டமன்றத் தேர்தலில் ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்தில் அம்மாநில முதல்வரும் பா.ஜ.க. தலைவருமான எடியூரப்பாதான் திட்டமிட்டே கன்னட இனவெறியைத் தூண்டி விட்டிருக்கிறார். ஆனால், தமிழகப் பகுதியில் நிறைவேற்றப்படும் இந்தத் திட்டத்தை எதிர்ப்பதற்கு சட்டரீதியாகவோ, தார்மீக ரீதியாகவோ கர்நாடக அரசுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

எனவேதான், இத்திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடவும் திட்டமிட்டே கன்னட இனவெறியைத் தூண்டவும் முயற்சிக்கிறது பாரதிய ஜனதா. ஒகேனக்கல் மட்டுமின்றி, ஒசூரும் எங்களுக்கே சொந்தம் என்று கன்னட வெறியர்கள் தமிழ்த் திரைப்பட அரங்குகளையும் பேருந்துகளையும் தாக்கினர். தமிழ் பத்திரிகைகள் விற்கக் கூடாது, தமிழர் கடைகளை மூட வேண்டும் என்று நாளுக்கொரு ஆணை பிறப்பித்தனர்.

இவையெல்லாம் பொதுவாக கன்னட வெறி அமைப்புகளின் நடவடிக்கைகள் என்று கூறப்பட்டாலும், இவற்றுக்கெல்லாம் அடிக்கொள்ளியாக இருந்து இந்தப் பிரச்சினையை முதன் முதலில் தூண்டி விட்டதும், விசிறி விடுவதும் ஆர்.எஸ்.எஸ்., பாரதிய ஜனதா கும்பல்தான். பா.ஜ.க. தூண்டிவிடும் இந்த மதவெறிக்கு மறைமுகமாக ஆதரவு தருவதையே தனது கொள்கையாக வைத்திருக்கும் காங்கிரசு, இந்தக் கன்னட இனவெறிக்குத் துணை நிற்கிறது.

ஒகேனக்கல் பிரச்சினையில் மட்டுமின்றி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன கும்பல் தமிழ் மக்களுக்கும் தமிழகத்துக்கும் எதிராகவே இருந்து வருகிறது. அண்மையில் சேது சமுத்திர திட்டத்துக்கு எதிராக ராமன் பாலம் என்றொரு புரட்டைக் கிளப்பி, ஊடகங்கள் மூலம் அதனைப் பரப்பி, அதற்கு உச்சநீதி மன்றத்திலும் தடை வாங்கியிருக்கிறது. தில்லைப் போராட்டத்தில் தமிழுக்கு எதிராகவும், தீட்சிதப் பார்ப்பனர்களுக்கு ஆதரவாகவும் ஆர்.எஸ்.எஸ். கும்பல்தான் களத்தில் நிற்கிறது.

பாபர் மசூதி இடிப்பு, மும்பை கலவரம், குஜராத் இனப்படுகொலை என எத்தகைய கொலை பாதகங்களையும் செய்வதற்கு அஞ்சாத இப்பார்ப்பன பாசிஸ்டுகள்தான் இப்போது தேர்தல் ஆதாயத்துக்காக கன்னட இனவெறியைத் தூண்டுகின்றனர். இவர்கள்தான் உண்மையிலேயே பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள்.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



பென்னாகரத்தில்...


சென்னையில்...



திருப்பூரில்...


ஒசூரில்...



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 23

**இதழ் 7**

மே 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ.7.00
ஆண்டுசந்தா: ரூ.90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561


## நேபாளம்:

# வீழ்ந்தது முடியாட்சி! மலர்கிறது மக்களாட்சி!

நேபாள நாட்டில் முன்னேறி வரும் புதிய ஜனநாயகப் புரட்சியின் முதற்கட்டமாக அந்நாட்டின் மன்னராட்சியை வேரோடு பிடுங்கி எறிவதில் இறுதி வெற்றியை நேபாளக் கம்யூனிச (மாவோயிச)க் கட்சி நெருங்கியிருக்கிறது. இது போர்த் தந்திர முக்கியத்துவம் வாய்ந்த செயல்தந்திர வெற்றியைக் குறிக்கிறது. நேபாளப் புரட்சியின் வெற்றி அந்நாடு மட்டிலான முக்கியத்துவம் கொண்டதாக மட்டும் இருக்காது. உலக அளவிலான வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாக இருக்கும். அதுமட்டுமல்ல; சித்தாந்த ரீதியிலான முக்கியத்துவம் உடையதாகவும் அமையும்.

சோவியத் ஒன்றியம், சீனா உட்பட முன்னாள் சோசலிச நாடுகளில் பாட்டாளி வர்க்க அரசுகள் வீழ்த்தப்பட்டு மீண்டும் முதலாளித்துவம் மீட்கப்பட்டு விட்டன. சோவியத் சமூக ஏகாதிபத்தியம், அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகளுக்கிடையிலான உலக மேலாதிக்கப் போட்டியில் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் முறியடிக்கப்பட்டு, உலகம் முழுவதும் அமெரிக்கத் தலைமையிலான ஒற்றைத் துருவ உலக மேலாதிக்கம் நிறுவப்பட்டுள்ளது. ஏகாதிபத்திய மேலாதிக்க உலகமயமாக்கலின் கீழ் பின்தங்கிய - மூன்றாம் உலகநாடுகளில் மறுகாலனியாதிக்கம் நிறுவப்பட்டு வருகிறது. ''கம்யூனிசம் தோற்றுப் போய்விட்டது, (முதலாளிய) ஜனநாயகமே சிறந்த அரசியல் அமைப்புமுறை, சுதந்திரமான சந்தைப் பொருளாதாரமே சிறந்த பொருளாதார அமைப்பு முறை என்று நிரூபிக்கப்பட்டு விட்டது; வேறு விதமாகச் சொன்னால் 'சித்தாந்தம் முடிவுக்கு வந்துவிட்டது' அதாவது முதலாளித்துவ-ஏகாதிபத்திய சித்தாந்தம் தவிர வேறு எந்த சித்தாந்தமும் இருக்க முடியாதவாறு - எல்லாவற்றுக்கும் சமாதி கட்டி விட்டோம்'' என்று இட்லரின் நாஜி, முசோலியின் பாசிசத்தை விடவும் வக்கிரவெறியோடு ஏகாதிபத்திய மேலாதிக்கவாதிகள் எக்காளமிட்டார்கள்.

உலகெங்கிலும் உள்ள போலி கம்யூனிஸ்டுகள் அனைவரும் ஏகாதிபத்திய மேலாதிக்கவாதிகளின் இந்த ''சித்தாந்தம் முடிவுக்கு வந்துவிட்டது'' என்ற பிரகடனத்தைக் கண்டஞ்சி, பயபீதியில் நடுங்கிப் போய், தமது வாலை பின்னங்கால்களுக்கு இடையே மடித்துக் கொள்ளும் நாய்களைப் போல மார்க்சிய - லெனினிய சித்தாந்தப் பசப்புகளையெல்லாம் கைவிட்டனர். ஏகாதிபத்திய எதிர்ப்பு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் போன்ற வாசகங்களைத் தமது கட்சித் திட்டத்திலிருந்து நீக்கி விட்டனர். ஏகாதிபத்திய தொண்டு நிறுவனங்கள் உலக சமூக மன்றம் (WSF) என்ற பெயரில் ஒன்றுகூடி முன்வைத்த ''மாற்று உலகம் ஒன்றுண்டு'' எனும் மலட்டுத்தனமான முழக்கத்தை அவர்களின் நிழலின் கீழ் நின்று கொண்டு தாமும் அதையே ஒப்பாரிப் பாடலாக ஒலித்தனர்.

இவ்வாறான பாதகமான சூழலில், உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கு எதிரான தாக்குதல் செயல்தந்திரத்தை ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகள் தொடுக்கும் சமயத்தில், கடந்த பத்தாண்டுகளாக ''கம்யூனிசமே வெல்லும்!'' என்ற செம்பதாகையை உயர்த்திப் பிடித்து, நேபாளப் பிற்போக்கு ஆளும் கும்பலுக்கு எதிராக மக்கள் யுத்தப் பாதையில் நேபாள கம்யூனிச (மாவோயிச)க் கட்சியினர் வெற்றிகரமாக முன்னேறிக் காட்டினார்கள். இதன் மூலம் காலனிய, அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் நீண்டகால மக்கள் யுத்தப் பாதை என்ற மாவோ சிந்தனையின் பொருத்தப்பாட்டையும், ஏற்றத்தாழ்வான வளர்ச்சிப் போக்குக் காரணமாக ஏகாதிபத்திய உலகக் கட்டமைப்பு என்ற சங்கிலியின் பலவீனமான கண்ணியில் புரட்சி வெடிக்கும் என்ற லெனினியக் கோட்பாட்டையும் நிரூபித்துக் காட்டினார்கள்.

பிழைப்புவாதம் மற்றும் திரிபுவாதத்தின் பின்னே ஒளிந்து கொண்டு இனவாதம், மொழிவாதம், மனிதநேயம், சமூகநீதி, முன்-பின் நவீனத்துவம் என்று பல வண்ண தொண்டு நிறுவன சீர்திருத்தவாதங்கள் புரிந்தவர்கள் எல்லாம் ''இனி மண்ணுக்கேற்ற கோட்பாடுகள் வகுத்துக் கொண்டு செயல்படவேண்டும்; பாட்டாளி வர்க்கப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகிய மார்க்சிய-லெனினிய மூலவர்கள் முன்வைத்த மரபுவழி கோட்பாடுகள் எல்லாம் காலாவதியாகி விட்டன'' என்று முடங்கிவிட்ட நிலையில், நேபாள மாவோயிஸ்டுகள் உறுதியுடன் நின்றார்கள்; மார்க்சிய-லெனினிய மாவோ சிந்தனையின் அனைத்தும் தழுவிய செவ்வியல் கோட்பாடுகள் மற்றும் போதனைகளின் இன்றைய புரட்சிக்கான பொருத்தப்பாட்டை நிரூபித்துக் காட்டினார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



நேபாளக் கம்யூனிஸ்டுக் கட்சி (மாவோயிஸ்டு)-யின் தலைவர் தோழர் பிரசந்தா.

நேபாள அரசியல் நிர்ணயசபைக்கான நடந்து முடிந்த தேர்தலில் நேபாள மாவோயிஸ்டு கட்சி அடைந்துள்ள வெற்றி, அதற்கு முன்பு அதன் சண்டை நிறுத்தம் மற்றும் இடைக்கால அரசில் பங்கேற்பு ஆகியவற்றை மட்டும் மேலோட்டமாகப் பார்க்கும் சில போலி புரட்சியாளர்கள், போலி முற்போக்குகள், போலி ஜனநாயக அரசியல் அறிஞர்கள் யானையைத் தடவிப் பார்த்த குருடர்களைப் போல பிதற்றுகிறார்கள்.

''நேபாள மாவோயிஸ்டுகள் பத்தாண்டுகளாக மக்கள் யுத்தப் பாதையில் ஆயுதப் போராட்டத்தை நடத்தி, பல மாவட்டங்களில் மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தபோதும், சண்டை நிறுத்தத்தை அறிவித்து, ஆயுதங்களைப் பூட்டி வைக்கவும் புரட்சிப் படைகளை முகாம்களில் அடைத்து வைக்கவும் ஒப்புக் கொண்டு, தேர்தல்களில் பங்கேற்பது சமரச-சரணடைவுப் பாதைக்குப் போவதையே குறிக்கும்'' என்கிறார்கள், இந்திய மாவோயிஸ்டுகள் உட்பட 'இடது' சந்தர்ப்பவாதிகள். ''ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி மக்கள் ஜனநாயக அரசமைப்பை நிறுவுவதற்குப் பதிலாக, ஏகாதிபத்திய ஆதரவு முதலாளித்துவக் கட்சியான நேபாளக் காங்கிரசு மற்றும் திரிபுவாதக் கம்யூனிஸ்டுகளுடன் கூட்டணி அமைத்து இடைக்கால அரசிலும் அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்களிலும் பங்கேற்பது வலது சந்தர்ப்பவாதச் சரிவாகும்'' என்றும் சாடுகிறார்கள்.

நேபாளத்தின் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு பருண்மையான அரசியல் நிலைமைகள், அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டங்களுக்கு இடையிலான உறவு, புரட்சியில் பாட்டாளி வர்க்கத் தலைமை கடைப்பிடிக்க வேண்டிய போர்த்தந்திரம் மற்றும் செயல்தந்திரக் கோட்பாடுகளுக்கான மார்க்சிய-லெனினிய வழிகாட்டும் நெறிமுறைகள் ஆகியவை பற்றிய தமது ஒட்டாண்டித்தனத்தைத் தான் மேற்கண்ட விமர்சனத்தின் மூலம் 'இடது' சந்தர்ப்பவாதிகள் வெளிப்படுத்துகிறார்கள். புரட்சியின் முன்னேற்றத்தை ஆயுதபலம், படைபலத்தை மட்டும் கொண்டு எடைபோடுவதும், இராணுவப் பாதையில் மட்டும் வழிநடத்துவதும் எல்லாத் தருணங்களிலும் அரசியல் பலத்தையும், அரசியல் போராட்டங்களையும் புறக்கணிப்பதும் மார்க்சிய-லெனினிய நடைமுறையாக இருக்க முடியாது. அதுவும் எவ்வித அடிப்படையும் காரணமுமின்றி ஆட்சியாளர்களுடன் அமைதிப் பேச்சு வார்த்தை மற்றும் சண்டை நிறுத்தம் என்று ஒரு முறையல்ல இரண்டுமுறை போனவர்கள் இவ்வாறு வறட்டுவாதம் புரிவது வேடிக்கையாக உள்ளது.

உலக மேலாதிக்கத்தை நிறுவியுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம், இந்திய பிராந்திய துணை வல்லரசு மற்றும் இந்திய இந்துத்துவ பாசிஸ்டுகள் உட்பட உலகப் பிற்போக்கு சக்திகள் அனைத்தும் ஒன்றுதிரண்டு தாங்கிப் பிடித்தும்கூட, நேபாள பாசிச மன்னராட்சி நீடித்திருக்க முடியாமல் வேரறுந்து வீழும் தருணம் வந்துவிட்டது; அதை வேரோடு பிடுங்கி எறிவதற்கான அகநிலை, புறநிலைக் கூறுகள் ஒன்றுதிரண்டு விட்டன; நேபாளப் புரட்சியின் மையம் கிராமப்புறங்களில் இருந்து நகர்ப்புறங்களுக்கு மாறிவிட்டது. மன்னராட்சிக்கு எதிரான மக்கள் விடுதலை படையின் கிராமப்புற ஆயுதந்தாங்கிய போராட்டம் என்பதிலிருந்து, நாடு தழுவிய மக்கள் பேரெழுச்சி என்ற அரசியல் போராட்டம் வெடிப்பதற்கான காலம் கனிந்து விட்டது. தக்க தருணத்தில் பொருத்தமான அரசியல் முழக்கத்தை முன்வைத்து, மக்கள் எழுச்சிக்குத் தலைமை தாங்கத் தவறுவதுதான் புரட்சிக்குத் துரோகமிழைக்கும் 'வலது' சந்தர்ப்பவாதச் சமரச சரிவாக இருந்திருக்கும். இதையெல்லாம் மார்க்சிய-லெனினிய விவேகத்துடன் மிகச் சரியாக மதிப்பீடு செய்து, செயல்பட்டது, நேபாள மாவோயிசக் கட்சி.

''பாட்டாளி வர்க்கம்' எதேச்சதிகார ஆட்சியின் எதிர்ப்பை வன்முறையைப் பயன்படுத்தி ஒடுக்கும் பொருட்டும், முதலாளிய ஊசலாட்டத்தைச் செயலிழக்கச் செய்து முடக்கும் பொருட்டும் விவசாய மக்கள்திரளுடன் கூட்டுச் சேர்ந்து ஜனநாயகப் புரட்சியை முழுமையாகவும் இறுதிவரையும் நிறைவேற்ற வேண்டும். முதலாளிய எதிர்ப்பை வன்முறையைப் பயன்படுத்தியும், விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளிகளின் ஊசலாட்டத்தை செயலிழக்கச் செய்து முடக்கவும் பாட்

**நேபாளப் புரட்சியின் வெற்றி அந்நாடு மட்டிலான முக்கியத்துவம் கொண்டதாக மட்டும் இருக்காது. உலக அளவிலான வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாக இருக்கும். அதுமட்டுமல்ல; சித்தாந்த ரீதியிலான முக்கியத்துவம் உடையதாகவும் அமையும்.**

டாளி வர்க்கம் மக்கள்திரளின் அரைப்பாட்டாளிப் பிரிவினருடன் கூட்டுச் சேர்ந்து சோசலிசப் பரட்சியை நிறைவேற்ற வேண்டும்'' என்று 1905-ஆம் ஆண்டே லெனின் போதித்தார். இந்த மார்க்சிய-லெனினிய அரசியல் போர்த்தந்திர அணுகுமுறையும் கோட்பாடும்தான் நேபாளத்தில் முன்னேறிவரும் புதிய ஜனநாயகப் புரட்சியில் நேபாள மாவோயிச கட்சியால் ஆக்கப்பூர்வமான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

நேபாள முதலாளிய வர்க்கம், நேபாள முடியாட்சியை வேரோடு பிடுங்கி எறியும் ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்பதில் எப்போதுமே உறுதி காட்டியதில்லை. ஒருடல் இரு தலையென்று தன்னோடு ஒட்டியிருக்க வேண்டியதுதான் என்கிற முறையில்தான் முடியாட்சி என்று கருதியே வந்திருக்கிறது. முடியாட்சிக்கு முடிவுகட்டி, ஒரு அரசியல் சட்ட நிர்ணயசபை மூலம் மக்களின் ஜனநாயக குடியாட்சியை


படிப்பகம்

www.padippakam.com

நிறுவுவதற்கான மக்கள் எழுச்சி இயக்கம் வெடிக்கும் போதெல்லாம், நேபாள காங்கிரசு தலைமையிலான நேபாள முதலாளிய வர்க்கம் துரோகமிழைத்து முடியாட்சியுடன் சமரசம் செய்து கொண்டு அரசியல் சட்ட அமைப்பின் படியான மன்னராட்சியை நிறுவுவதற்குத்தான் எத்தணித்தது. முதலாளிய ஜனநாயகத்துக்கான கோரிக்கையைக்கூட கைவிட்டு, மன்னராலும் பழைய பிரபுத்துவத்தாலும் திணிக்கப்பட்ட அரசியல் கட்சிகளற்ற பஞ்சாயத்து ஆட்சி முறை போன்ற அதிகாரமில்லாத அரசியல் சட்ட அமைப்பை ஏற்றுக் கொண்டது. பின்னர், மன்னராலேயே பெயரளவுக்கான அந்த ஆட்சி அமைப்பும் தூக்கியெறிப்பட்டு எதேச்சதிகார ஆட்சியே பல ஆண்டுகள் நீடித்தது. 1990-களில் நடந்த மக்கள் எழுச்சி மூலம் பலகட்சி நாடாளுமன்றம் நிறுவப்பட்டு, பின்னர் அதுவும் கலைக்கப்பட்டது. இறுதியாக, 2000-ஆம் ஆண்டு அரண்மனை மன்னர் குடும்பப் படுகொலைகளைகளுக்குப் பின், ஞானேந்திராவின் பாசிச மன்னராட்சி நிறுவப்பட்டது.



அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் மாவோயிசப் புரட்சியாளர்கள் அடைந்த வெற்றியைக் கட்சியின் ஆதரவாளர்களும், மக்களும் கொண்டாடுகின்றனர்.

மன்னராட்சிக்கு எதிராக நீண்டகால மக்கள் யுத்தத்தை நடத்துவது, மாபெரும் மக்கள் எழுச்சியைக் கட்டியமைப்பது என்ற இருவேறு அணுகுமுறைகளைக் கொண்டிருந்த புரட்சிகர மார்க்சிய-லெனினிய இயக்கம், நேபாள மாவோயிசக் கட்சி மற்றும் நேபாளக் கம்யூனிச கட்சி (ஐக்கிய மையம்) ஆகிய இரண்டு பிரிவுகளாக இயங்கி வந்தது. மன்னராட்சிக்கு எதிராக 2006 ஏப்ரலில் மக்கள் எழுச்சி வெடித்தபோது இவையிரண்டும் கூட்டுச் சேர்ந்து அரசியல் நிர்ணய சபை மற்றும் மக்கள் ஜனநாயக குடியரசு முழக்கத்தை முன்வைத்து தலைமையேற்றன. இவ்விரு பிரிவினரும் முறைப்படி ஐக்கியப்பட்டு 2008 அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் வெற்றிப் பெற்றுள்ளனர். எல்லைக்கப்பால் இருந்து சமூக விரோத-பாசிசக் கூலிப் படையை ஏவி, இனவெறியைத் தூண்டி நேபாளப் புரட்சியை சீர்குலைக்கும் மன்னராட்சியை உயிர்ப்பிக்கும் ஏகாதிபத்திய, இந்திய விரிவாக்க - இந்துத்துவ சக்திகளின் சதிகளை முறியடித்தனர்.

முதலாளித்துவ மன்னராட்சி என்பதிலிருந்து முதலாளித்துவ ஜனநாயக ஆட்சியை ஏற்கும்படி நேபாள காங்கிரசு தலைமையிலான நேபாள முதலாளிகள் நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். இதுவரை நேபாள வரலாறு காணாதவாறு அந்நாட்டு உழைக்கும் மக்கள், தேசிய இனச் சிறுபான்மையினர், பழங்குடியின மக்கள் அனைவரும் வாக்குரிமை பெறுமாறு அரசியல் நிர்ணயசபை மற்றும் மக்கள் ஜனநாயகக் குடியரசு முழக்கங்களை முன்வைத்து மக்கள்திரள் இயக்கங்களை கட்டியுமைத்ததோடு, நேபாளப் புரட்சியில் ஊசலாட்ட - சமரச சரணடைவு சக்திகளை தனிமைப்படுத்தி முடக்குவதிலும், அரசியல் நிர்ணய சபையில் மிகப் பெரிய அளவில் நிலைநாட்டிக் கொள்வதிலும், நோபள மாவோயிஸ்ட் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

ஆனால், அதேசமயம் உள்ளேயும் வெளியேயும் இருந்து வரும் மேலும் பல சவால்களை எதிர்கொண்டு முறியடித்து நேபாள புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இந்தியா, சீனா ஆகிய இரு துணை வல்லரசு நாடுகளுக்கிடையே பூகோள ரீதியில் சிக்கியுள்ள சின்னஞ்சிறு நாடு நேபாளம். உலக நாடுகளை உருட்டி மிரட்டியும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் தேவைப்படும் போதெல்லாம் பல நாடுகள் மீது படையெடுத்து, ஆக்கிரமித்து உலக மேலாதிக்கம் செலுத்தும் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏற்கெனவே தனது பயங்கரவாதப் பட்டியலில் முத்திரைக் குத்தி சேர்க்கப்பட்டுள்ள நேபாள மாவோயிஸ்டுகளின் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயக அரசு நேபாளத்தில் அமைவதை சகித்துக் கொள்ளாது. அது, பின்தங்கிய பொருளாதார அமைப்பைக் கொண்டுள்ள நேபாளத்திற்கு எதிராக ஏகாதிபத்திய உலகமயமாக்கம் என்ற பொருளாதாரத் தாக்குதலை தொடுப்பதற்கும், அவசியமானால் ஆக்கிரமிப்புப் படைகளை ஏவி தாக்குதல் தொடுப்பதற்கும் எப்போதும் எத்தணித்துக் கொண்டேயிருக்கும். நேபாளத்திலும், வீழ்த்தப்படும் பிற்போக்கு மற்றும் போலி கம்யூனிச சக்திகளும் பன்மடங்கு பலத்துடன் திருப்பித் தாக்கி, நேபாளப் புரட்சியை பின்னிழுப்பதற்குத் தன்னாலான முயற்சிகளையெல்லாம் செய்யும்.

இத்தகைய சவால்களை முறியடிப்பதற்கு தகுந்த செயலுத்திகளை வகுத்து புரட்சியை வழிநடத்துவதற்கான மிகப் பெரிய பொறுப்பில் நேபாள மாவோயிசக் கட்சி உள்ளது. அதன் செயலுத்திகளை கொச்சைப்படுத்தி, உலக நாடுகளிலுள்ள புரட்சிகர இயக்கங்களின் இடது-வலது சந்தர்ப்பவாதிகள்கூட சாடக் கூடும். இதற்கு மாறாக, இன்றைய உலகப் புரட்சியின் ஒளிவிளக்காக திகழும் நேபாளப் புரட்சியில் நேபாள மாவோயிசக் கட்சி மேற்கொள்ளும் புதிய முயற்சிகளை மார்க்சிய-லெனினிய ஒளியில் பரிசீலித்து, அதன் முன்னெடுப்புகளை ஆக்கப்பூர்வமான முறையில் ஆதரிக்க வேண்டியது உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் கடமையாகும். ●


படிப்பகம்

www.padippakam.com

பத்திரிகை செய்தி:

## நேபாளம்:

# இதுவன்றோ ஜனநாயகத் தேர்தல்!

**தேர்தல் முறைகேடுகளோ, வன்முறைகளோ இன்றி நடந்து முடிந்துள்ள நேபாளத் தேர்தல், அமெரிக்க-இந்தியச் சதிகாரர்களின் முகங்களில் கரியைப் பூசிவிட்டது.**

நேபாளத்தில் 10.2.2008 அன்று நடைபெற்ற அரசமைப்பு நிர்ணய சபைக்கான தேர்தலில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) சார்பில் 10 வழக்குரைஞர்கள் சர்வதேசப் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். நேபாள நாட்டின் தேர்தல் ஆணையத்தின் அழைப்பின் பேரில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் 856 பார்வையாளர்கள், நேபாளத்தில் தேர்தல் நடைபெற்ற எல்லாத் தொகுதிகளுக்கும் அனுப்பப்பட்டனர். சர்வதேசப் பார்வையாளர்களின் கண்காணிப்பில் நடைபெற்ற இந்தத் தேர்தல் அமைதியாகவும், முறைகேடுகள் இன்றியும் நடைபெற்றது என்று 856 சர்வதேசப் பார்வையாளர்களும் ஒருமனதாக அறிவித்தனர்.

நேபாளத்தில் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வந்த மன்னராட்சியை அகற்றும் பொருட்டு நடைபெற்றுள்ள இந்தத் தேர்தல், மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தத் தேர்தல் நேபாள மாவோயிஸ்டு கட்சி நடத்திய 10 ஆண்டு கால ஆயுதப் போராட்டம் மற்றும் மக்கள் இயக்கம் தோற்றுவித்த சாதனை என்று கூறுவது மிகையல்ல. மன்னராட்சியை அகற்றுவது, அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்துவது என்ற இரு கோரிக்கைகளுமே மாவோயிஸ்டுகளால் மட்டுமே முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் ஆகும்.

எனினும், இந்தத் தேர்தலை அமைதியான முறையில் நடத்துவதற்கு மாவோயிஸ்டுகள் அனுமதிக்க மாட்டார்கள் என்ற பொய்ப்பிரச்சாரத்தை அமெரிக்க அரசு கட்டவிழ்த்துவிட்டிருந்தது. இதனையொட்டி, இத்தேர்தலைக் கண்காணிக்கும் பொருட்டு அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டரின் தலைமையில் நூற்றுக்கணக்கான தேர்தல் பார்வையாளர்களும் வந்திருந்தனர்.


தேர்தலில் வாக்காளர்கள் ஒவ்வொருவரும் இரண்டு வாக்குகளைப் பதிவு செய்தனர். ஒன்று, அரசமைப்பு நிர்ணயசபை உறுப்பினரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கானது. மற்றொன்று, விகிதாச்சார அடிப்படையில் கட்சிகளின் பெரும்பான்மையைக் கண்டறிவதற்கானது. இந்த முறையில், வெகுஜன வாக்கெடுப்பின் அடிப்படையில் அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களால் அரசியல் சட்டம் இயற்றப்படுவது என்பது இந்தியா உள்ளிட்ட பல ஜனநாயக நாடுகளிலும் நடந்ததில்லை. அந்த வகையில் நேபாளத்தில் நடைபெற்றுள்ள இந்தத் தேர்தல், அரியதொரு நிகழ்வாகும்.

மன்னராட்சியின் கீழ் இதற்கு முன் நடைபெற்றுள்ள தேர்தல்களில் நேபாளத்தின் மாதேசி உள்ளிட்ட பல தேசிய சிறுபான்மையினர்களுக்கும் ஒடுக்கப்பட்ட பழங்குடி மக்கட் பிரிவினருக்கும் வாக்குரிமை மறுக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்படவேண்டும் என்பது மாவோயிஸ்டுகளின் மிக முக்கியமான கோரிக்கையாகும். அதன் அடிப்படையில் இந்தத் தேர்தலில்தான் முதன்முறையாக நேபாளத்தின் எல்லாக் குடிமக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையிலும் இத்தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தது.

இத்தேர்தல் மூலம் நேபாள மன்னராட்சி அகற்றப்பட்டால் உலகின் ஒரே இந்து அரசு இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தினால், இந்தியாவைச் சேர்ந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர், இந்திய எல்லையை ஒட்டியுள்ள நேபாளப் பகுதிகளில், மாதேசி இனத்தினர் மத்தியில் கலகத்தைத் தூண்டி விட்டனர். தேர்தல் பிரச்சாரம் செய்ய வந்த நிராயுதபாணிகளான மாவோயிஸ்டுகள் 20-க்கும் மேற்பட்

**(இடது படம்) மனித உரிமைப் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாகத் தேர்தல் பார்வையாளராக பங்கெடுத்துக் கொண்ட வழக்குரைஞர் இராசு (வலது), மற்றும் சர்வதேசப் பார்வையாளர்களுள் ஒருவராகக் கலந்து கொண்ட முன்னாள் அமெரிக்க அரசுத் தலைவர் ஜிம்மி கார்டர். (வலது படத்தில் டீ-சர்ட் அணிந்திருப்பவர்).**







படிப்பகம்

www.padippakam.com



**சந்தேகத்திற்கோ, முறைகேடுகளுக்கோ இடமளித்து விடாதபடி, திறந்தவெளியில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடி.**

டோரைப் படுகொலையும் செய்தனர். இந்தத் தேர்தலைப் புறக்கணிப்பதாகவும் அறிவித்திருந்தனர். எனினும் மாதேசி பகுதிகள் உள்ளிட்ட எல்லாப் பகுதிகளிலும் இத்தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் பார்வையாளர்கள் குழு காத்மாண்டு, சித்வான், பீர்கஞ்ச், ஜனக்பூர், பிராட்நகர், நேபாள்கஞ்ச், புட்வால், போக்ரா ஆகிய முக்கிய பகுதிகளைச் சேர்ந்த, 25 தொகுதிகளில் 200-க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளைப் பார்வையிட்டது. பார்வையிட்ட எந்த வாக்குச்சாவடியிலும் வன்முறையோ, முறைகேடுகளோ, கள்ள வாக்குகள் குறித்த புகார்களோ கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. நேபாளம் முழுவதும் அமைதியாகவே தேர்தல் நடந்தது. ஒரே ஒரு தொகுதியில் நேபாள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குண்டர்கள், மாவோயிஸ்டு தொண்டர்கள் 8 பேரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். மாவோயிஸ்ட் கட்சியின் தேர்தல் அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டது. சில வாக்குச்சாவடிகளில் மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மாவோயிஸ்டுகள் யாரையும் கொன்றதாகப் புகார் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் நடைபெறும் நாடாளுமன்ற-சட்டமன்றத் தேர்தல்களில் வழமையாக நடைபெறும் கள்ளவாக்கு, வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்தல், சாராயம், வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவது, வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுப்பது, மிரட்டுவது போன்ற அராஜகங்கள் - சீரழிவுகள் எதுவும் நேபாளத் தேர்தலில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரம்மாண்டமான விளம்பரங்கள், ''டிஜிட்டல் பானர்''கள், ஆடம்பர அணிவகுப்புகள், தலைவர்களின் ''கட்-அவுட்''டுகள் போன்ற எதையும் நேபாளத்தில் காண முடியவில்லை. சுவரெழுத்துக்களும் கட்சிக் கொடிகளும் தவிர வேறு விளம்பரங்கள் எதுவும் இல்லை. நீண்ட வரிசைகளில் பொறுமையாகக் காத்திருந்து மக்கள் வாக்களித்தனர். பாதுகாப்புப் பணி என்ற பெயரில் போலீஸோ, இராணுவமோ அதிகம் ஈடுபடுத்தப்படவில்லை. நேபாள இராணுவமும், மாவோயிஸ்டுகளின் மக்கள் இராணுவமும் ஐ.நா. சபையின் கட்டுப்பாட்டில் முகாம்களில் இருத்தப்பட்டிருந்தன.

வாக்குச்சாவடிகள், பள்ளிகள் அல்லது கட்டிடங்களுக்குள் அமைக்கப்படவில்லை. மாறாக, எல்லா வாக்குச்சாவடிகளும் திறந்த வெளியிலேயே இருந்தன. மக்கள் வாக்குச் சீட்டில் முத்திரையிடும் இடத்தில் மட்டும் சிறிய தடுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேர்தலில் யாரும் இரகசியமாக முறைகேடு எதிலும் ஈடுபட முடியாது என்பது இவ்வாறு உத்திரவாதம் செய்யப்பட்டிருந்தது.

சாலை வசதி மற்றும் போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவான பின்தங்கிய நாடு நேபாளம். கூடுதலாக, தேர்தல் முறைகேடுகளைத் தடுக்கும் பொருட்டு தேர்தல் நாட்களில் நேபாளம் முழுவதும் வாகனப் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டிருந்தது. இந்நிலையிலும் 65% முதல் 75% வரை வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது என்பது, மன்னராட்சியை அகற்றுவதிலும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதிலும் மக்களுக்கு இருந்த ஈடுபாட்டைக் காட்டுகிறது.

நாங்கள் பார்வையிட்ட சித்வான் மாவட்ட பீம்நகர் வாக்குச்சாவடியில், முதல் வாக்களிக்கும் உரிமையை மாவோயிஸ்ட் இயக்கத்தில் இணைந்து 'மன்னராட்சிக்கு எதிராகப் போராடி உயிர்நீத்த தியாகத் தோழர் சலீமின் குடும்பத்திற்கு அந்தப் பகுதி மக்கள் வழங்கினர் என்பது நெகிழ வைப்பதாக இருந்தது. கிராமப்புறங்களில் தொடங்கி தலைநகர் காட்மண்டு வரை எல்லாப் பகுதிகளிலும் மாவோயிஸ்டுகளுக்கு அனைத்துத் தரப்பு மக்கள் மத்தியிலும் இருந்த செல்வாக்கு

**நேபாள அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் ஜனநாயக முறைப்படி நடந்ததை விளக்கி மனித உரிமைப் பாதுகாப்பு மையம் சார்பாக 15.04.08 அன்று சென்னையில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பு.**






படிப்பகம்

வெளிப்படையாகக் காணக்கூடியதாக இருந்தது. தலைநகர் காட்மண்டுவில் நேபாள அரசின் இராணுவத்தினருக்கான வாக்குச்சாவடி ஒன்றில் 187 வாக்குகள் மாவோயிஸ்டுகளுக்கு அளிக்கப்பட்டிருந்ததை நேபாளப் பத்திரிகைகள் செய்தியாக வெளியிட்டிருந்தன.

தற்போது நடைபெற்றுள்ள இந்தத் தேர்தலில் மாவோயிஸ்டுகள் தனிப் பெரும்பான்மை என்ற அளவிற்கு வெற்றி பெற்று வருகின்றனர். எனினும் தற்போது அமையவிருப்பது ஒரு இடைக்கால அரசாங்கம் மட்டுமே. 2010-ஆம் ஆண்டு வரை இந்த இடைக்கால அரசு ஆட்சியில் இருக்கும். அதற்குள் அரசியல் நிர்ணய சபை, நேபாளத்துக்கான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும். பின்னர் அந்த அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில், நேபாளக் குடியரசின் முதல் தேர்தல் நடைபெறும்.

சர்வதேச தேர்தல் பார்வையாளர்களை மாவோயிஸ்டுக் கட்சித் தலைவர் தோழர் பிரசண்டா 12.4.08 அன்று சந்தித்தார். தாங்கள் தனிப்பெரும்பான்மை பெற்றாலும், பிற கட்சிகளுடன் இணைந்த ஒரு கூட்டரசை அமைப்பதற்கே விரும்புவதாக அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இத்தனைக்குப் பிறகும், அமெரிக்க அரசு நேபாள மாவோயிஸ்டு கட்சியைப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில்தான் இன்னமும் வைத்திருக்கிறது. நேபாள மன்னராட்சி அகற்றப்படக் கூடாது என்பதற்காக அமெரிக்க அரசு தொடர்ந்து முயன்று வருகிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நேபாளத்தில் ஒரு ஜனநாயக மக்கள் குடியரசு அமைவதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபடும் என்பதில் ஐயமில்லை.

உலகெங்கும் பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவது, ஜனநாயகத்தை சீர்குலைப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்க அரசு, நேபாளத்திலும் தனது கைவரிசையைக் காட்டும். அமெரிக்க அரசின் இந்த நடவடிக்கையை இந்திய அரசு வெளிப்படையாகக் கண்டிக்க வேண்டும். மன்னராட்சியைத் துடைத்து அகற்றுவதற்கு நேபாள மக்கள் நடத்தும் போராட்டத்துக்கு இந்திய மக்கள் துணை நிற்க வேண்டும் என்று கோருகிறோம்.

**மனித உரிமைப் பாதுகாப்பு மையம்,**
**தமிழ்நாடு.**
15.4.08

# தனியார்மயம்... தாராளமயம்... உலகமயம்... ...போதைமயம்!


**சென்னையில் பி.பி.ஓ., கால் சென்டர் நிறுவனங்கள் பெருகுவதற்கு ஏற்ப, போதை மருந்துப் பழக்கமும் அதிகரித்து வருகிறது.**

பல ஆண்டுகளாகவே சீமைச் சாராய விற்பனையில் கொடிகட்டிப் பறந்து வரும் தமிழகம், **"இப்பொழுது"** போதைப் பொருள் புழக்கத்திலும், விற்பனையிலும் சாதனை படைக்கத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, தமிழகத் தலைநகர் சென்னை, பிற ஆசிய நாடுகளுக்குப் போதைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் மையமாக மாறியிருக்கிறது.

மேலே பயன்படுத்தப்பட்டுள்ள இப்பொழுது என்ற வார்த்தைக்குப் பதிலாக, தாராளமயத்திற்கு பின்பு எனப் பயன்படுத்துவதுதான் துலக்கமானதாக இருக்கும். தாராளமயத்திற்கு முன்பு, போதைப் பொருட்களை பிற நாடுகளுக்கு கடத்திச் செல்லும் வழியாகத் தான் சென்னை பயன்படுத்தப்பட்டது. தாராளமயத்திற்குப் பின்பு, சென்னை விற்பனை மையமாக "வளர்ச்சி" அடைந்திருக்கிறது. உலகமயம் வாரி வழங்கியுள்ள முன்னேற்றம் இது.

சென்னையின் உள்ளூர் சந்தையின் மதிப்பு ரூ. 100/- கோடி என்றும்;

**சிற்பங்களில் மறைத்துக் கடத்தும்பொழுது, சென்னை விமான நிலையத்தில் பிடிபட்ட ஹெராயின் போதைப் பொருள்.** (நன்றி: இந்தியா-டுடே).





படிப்பகம்

www.padippakam.com

''ஏற்றுமதி'' வர்த்தக மதிப்பு ரூ.20/- கோடி முதல் ரூ. 40/- கோடி வரை இருக்கும் என்றும் மதிப்பிடப்படு கிறது. தமிழகத்தில் இருந்து ஈழத் திற்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் ''கடத்தப்படுவதை''ப் பற்றி அலறி எழுதும் பத்திரிகைகள், இந்தப் போதை மருந்து கடத்தல் பற்றி அடக்கியே வாசிக்கின்றன.



பணக்கார மேட்டுக்குடி கும்பல் பயன்படுத்தும் ஹெராயின் தொடங்கி சாதாரண நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பயன்படுத்தும் கீட்டமைன் வரை, அனைத்துப் போதைப் பொருட்களும் சென்னை யில் ''தட்டுப்பாடு'' இன்றிக் கிடைக் கிறதாம். போதை மருந்துகளுக்குப் பெயர்போன கோவாவில் கிடைக் கும் சரக்கைவிட, சென்னையில் கிடைக்கும் சரக்கு தரமானதாக இருப் பதாகக் கூறப்படுகிறது. ''தரம்'' இல் லாவிட்டால், சந்தைப் பொருளாதாரத் தில் தாக்குப் பிடிக்க முடியாதே!

**போதைப் பொருளை வாங்க அதனை விற்பவரைத் தேடி இருளடைந்த சந்து பொந்துகளுக்குள் அலைய வேண்டிய அவசியம் இன்று இல்லை. செல்ஃபோனும், ஆன்லைன் வர்த்தக முறையும் போதைப் பொருள் விற்பனையையும் / கடத்தலையும் மிகவும் ''ஹை-டெக்'' ஆக மாற்றிவிட்டது.**

கீட்டமைன் - ஒரு இரண்டுங் கெட்டான் சரக்கு. நாய்களுக்கு வலி நிவாரண மருந்தாகக் கொடுக்கப் படும் இதனைப் போதையேற்றிக் கொள்ளவும் பயன்படுத்தலாம். தலை வலி மாத்திரையை வாங்குவது போல, ஆங்கில மருந்துக் கடைகளி லேயே இதனை எளிதாக வாங்கிக் கொள்ள முடியும். கீட்டமைன், மற்ற போதைப் பொருட்களைவிட விலை மலிவானது என்பதோடு, இது தடை செய்யப்பட்ட போதைப் பொருள் பட்டி யலில் கொண்டு வரப்படவில்லை; மருந்தாக மட்டுமே பட்டியல் இடப்பட் டுள்ளது. எனவே, இதனை பயன்படுத் தும்பொழுதோ / கடத்தும் பொழுதோ பிடிபட்டால் தண்டனை குறைவா கத்தான் கிடைக்கும். இந்தச் சட்டபூர்வ சலுகையால் கீட்ட மைன் உள்ளூர் புழக்கத்தி லும், கடத்தலிலும் முன்னணி யில் உள்ளது.

அந்தக் காலம் போல, போதைப் பொருளை வாங்க அதனை விற்பவரைத் தேடி இருளடைந்த சந்து பொந்து களுக்குள் அலைய வேண்டிய அவசியம் இன்று இல்லை. செல்ஃபோனும், ஆன் லைன் வர்த்தக முறையும் போதைப் பொருள் விற்பனையையும் / கடத்தலையும் மிகவும் ''ஹை-டெக்'' ஆக மாற்றிவிட் டதாகச் சுங்கத்துறை அதிகாரிகள் புலம் புகிறார்கள். இந்த ''முன்னேற்றம்'' கார ணமாக, சென்னையில் போதைப் பொருளுக்கு அடிமையாகும் இளை ஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாக வும்; நாளொன்றுக்கு 20 பேரை மருத்து வமனையில் உள்நோயாளியாக அனு மதித்து சிகிச்சை அளிப்பதாகவும் சென்னை - டி.டி.கே. புனர்வாழ்வு மருத்துவமனையைச் சேர்ந்த அனிதா ராவ் குறிப்பிடுகிறார்.

**கோவை நகரில் பிடிபட்ட போதை மருந்து கடத்தல்காரன்.**



முன்பெல்லாம் தறிகெட்டுப் போன சில பணக்கார வீட்டு இளை ஞர்கள்தான் போதைப் பொருட்க ளுக்கு அடிமையாகிக் கிடப்பார்கள். இன்றோ, கால்செண்டரும், பி.பி.ஓ.வும் பெருகிய பிறகு, ''ஆச்சா ரமான'', கட்டுப்பாடான நடுத்தர வர்க்கத்து குடும்பங்களைச் சேர்ந்த ஆண்/பெண் - இரு பாலரிடமும் கூட போதை பழக்கம் தொற்றிக் கொண்டு விட்டது.

பி.பி.ஓ., மென்பொருள் நிறுவ னங்களில் வேலை பார்க்கும் ஊழியர் களின் வேலை களைப்பைப் போக்கி, அவர்களின் மனநிலையை உற்சாக மாக வைப்பதற்காக நடத்தப்படும் ''பார்ட்டி''களில், போதைப் பொருட் களுக்குத்தான் முதலிடம். இந்தியா -டுடேயின் மொழியில் சொன்னால், ஐ.டி.துறை சென்னையில் போதை புரட்சியை ஏற்படுத்தி விட்டது. இந்தக் கொண்டாட்டங்கள் தனிப்பட்ட முறையில் நடப்பதால், இங்கு யார் வருகிறார்கள், பார்ட்டிகளில் என்ன செய்கிறார்கள், போதை மருந்துகள் எங்கிருந்து கொண்டு வரப்படுகின் றன என்பது வெளியில் தெரியாது எனப் புலம்புகிறது, இந்தியா-டுடே.

ஐ.டி. துறை தனது ஊழியர்களிடம் தொழிற்சங்க உணர்வு வளர்வதைக் காயடித்தது; சமூகத்தில் இருந்து அவர்க ளைக் கலாச்சார ரீதியாக அந்நியப்படுத் தியது; குடும்ப உறவுகளைக் கூடச் சிதைத்துச் சின்னாபின்னாபடுத்தியது; வேலைச் சுமையின் காரணமாக ஊழி யர்களை இளம் வயதிலேயே தீராத நோயாளிகளாக்கியது.

முன்னேற்றம் என்ற போர் வையில், இதனையெல்லாம் நியாயப்படுத்தி வரும் தாராளமயத்தின் ஆதரவாளர் கள், அத்தொழில் இளைஞர்க ளிடம் திணிக்கும் வரைமுறை யற்ற பாலுறவு, போதைப் பழக்கம் போன்ற கலாச்சார சீரழிவுகளைக் கண்டு மட்டும் அலறுகிறார்கள். கடப்பா ரையை முழுங்கிவிட்டு, குத் துதே குடையுதே எனக் கதறுவ தால் என்ன பயன்!

● குப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# விலைவாசி உயர்வு:

# தனியார்மயம் பரப்பும் கொள்ளைநோய்!

**தனியார்மயத்திற்கு ஆதரவாக இருக்கும் ஓட்டுக்கட்சிகளுக்கு, விலைவாசி உயர்வை எதிர்க்கும் அருகதை கிடையாது.**

கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக நீறு பூத்த நெருப்பாக இருந்துவந்த விலைவாசி உயர்வு, இப்பொழுது எரிமலையைப் போல வெடித்திருக்கிறது. அரிசி, கோதுமை, சோளம், சமையல் எண்ணெய், பால் போன்ற உணவுப் பொருட்கள் தொடங்கி, இரும்பு, நிலக்கரி, கச்சா எண்ணெய் போன்ற மூலப் பொருட்கள் வரை அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி தாறுமாறாக உயர்ந்து வருகின்றன. இந்தியா மட்டுமின்றி, ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த அனைத்து ஏழை நாடுகளும் இவ்விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ளன.

சென்னையைச் சேர்ந்த சுமதி, மூன்று-நான்கு வீடுகளில் வேலை பார்ப்பதன் மூலம் மாதம் ரூ. 3,000 வரை கூலி பெறுகிறார். ''தனது மாதாந்திர வருமானம் உயராதபொழுது, விலைவாசி மட்டும் உயர்ந்து கொண்டே செல்வதாக''க் கவலைப்படும் சுமதி, ''இவ்விலை உயர்வைச் சமாளிக்கத் தனது குடும்பத்தின் உணவுத் தேவைகளைச் சுருங்கிக் கொண்டதாக''க் கூறுகிறார்.

வங்காள தேசத்தில், ஒரு கூலித் தொழிலாளி உணவுக்காக இரண்டு கிலோ அரிசி வாங்க வேண்டும் என்றால், தனது தினக்கூலியில் சரிபாதியை அரிசிக்கு மட்டுமே ஒதுக்க வேண்டிய அளவிற்கு விலைவாசி உயர்ந்துள்ளது.

ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள ஏழைநாடான ஏமனில், ஒரு ''லோஃப்'' ரொட்டியின் விலை, தொழிலாளர்களின் தினக்கூலியில் கால் பாகத்தை முழுங்கி விடுகிறது.

இந்த விலை உயர்வினால், பல்வேறு ஏழை நாடுகளைச் சேர்ந்த 10 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே தள்ளப்படுவார்கள் என உலக வங்கியே எச்சரித்திருக்கிறது.

எனினும் மன்மோகன் சிங்-ப.சிதம்பரம் கும்பலைப் பொருத்தவரை விலைவாசி உயர்வு என்பது ஒரு பிரச்சினையே அல்ல. ''பொருளாதார வளர்ச்சி இருக்கும்பொழுது, விலைவாசி உயரத்தான் செய்யும்'' என்ற பொருளாதார சூத்திரத்தைக் கூறி அவர்கள் இக்கொள்ளைநோயை நியாயப்படுத்தியும் வருகிறார்கள். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுத்தால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் என அவர்களும், தரகு முதலாளிகளும் பீதியூட்டுகிறார்கள். மேலும், ''மக்களிடம் பணப்புழக்கம் அதிகமாகி, அவர்கள் பொருட்களை வாங்கிக் குவிப்பதால்தான், (அதிக கிராக்கி, குறைந்த வரத்து என்ற அடிப்படையில்) அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்வதாக''க் கூறி, பழியை மக்களின் தலையில் சுமத்துகிறார்கள். விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார், ''தென்னிந்திய மக்கள் அதிகமாக சப்பாத்தி சாப்பிடத் தொடங்கியதையடுத்துதான், கோதுமைக்கு பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக''க் கூறியிருக்கிறார்.

அமைப்பு சாராத் தொழிலாளர்களின் வேலை மற்றும் வாழ்க்கை நிலைகளைப் பற்றி ஆராய்வதற்காக அரசால் நியமிக்கப்பட்ட அர்ஜுன் சென்குப்தா கமிட்டி, ''77 சதவீத இந்தியக் குடும்பங்கள், நாளொன்றுக்கு இருபது ரூபாய்க்கும் குறைவான கூலியைக் கொண்டே பிழைப்பதாக''த் தெரிவித்திருக்கிறது. இந்த இருபது ரூபாய், ஒரு குடும்பத்தின் ஒருநாள் உணவுத் தேவையைக் கூட ஈடுகட்டப் போதாது என்பதை நிரூபிக்க பெரிய ஆராய்ச்சி எதுவும் நடத்த வேண்டிய அவசியமில்லை.

இந்தியாவில் இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் சரிபாதி குழந்தைகள் சத்தான உணவு கிடைக்காமல் சவலைக் குழந்தைகளாக இருப்பதாக இன்னொரு புள்ளி விவரம் கூறுகிறது.

இந்த உண்மைகளை இருட்டடிப்பு செய்துவிட்டு, இந்திய மக்கள் அனைவரும் புளித்த ஏப்பக்காரனைப் போல வாழ்வதாகவும், தாராளமான பணப் புழக்கத்தால் நுகர்பொருள் மோகம் கொண்டு அலைவதாகவும் சித்தரிப்பது, மன்மோகன் சிங் கும்பலின் அயோக்கியத்தனத்தையும், மேட்டுக்குடி வக்கிரத்தையும் தான் வெளிப்படுத்துகிறது.

''சாதாரண மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்தால், விலைவாசி உயர்வு

**சென்னை-மேட்டுப்பாளையத்தில் உள்ள ரேஷன் கடையில் இருப்பு இல்லை எனக் கூறி அரிசி வழங்க மறுத்ததால், கடையை மூடி முற்றுகைப் போராட்டம் நடத்தும் பெண்கள்: இற்றுப் போன பொது விநியோக முறை.**





படிப்பகம்

www.padippakam.com

சுமையாக இருக்காது'' என்றொரு அரிய கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கிறார், தமிழக முதல்வர் மு.க. ஆனால், முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்களோ, ''வாங்கும் சக்தி அதிகரித்தால், அதற்கேற்ப விலைவாசியும் உயர்ந்துவிடும்'' எனப் பீதியூட்டுகிறார்கள். 'கொழுத்த சம்பளம்' தரும் ''பி.பி.ஓ.'' நிறுவனங்கள் பெருத்தபிறகுதான், சென்னையில் நடுத்தர வர்க்கத்தினரைக்கூடப் பதம் பார்க்கும் அளவிற்கு வீட்டு வாடகை எகிறிப் பாய்ந்தது என்பதை இங்கு நினைவுபடுத்திக் கொள்வது நல்லது.

பொருட்கள் விலை மலிவாகக் கிடைக்க வேண்டும் என்றால், தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்க வேண்டும் என்பதுதான் தனியார்மயத்தின் விதி. குறைந்தபட்ச கூலி என அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அடிப்படை சம்பளத்தை ஒழித்துவிட வேண்டும் என்பதுதான் தரகு முதலாளிகளின் விருப்பம். இதுவொருபுறமிருக்க, சாதாரண மக்களை விட வாங்கும்திறன் அதிகம் கொண்ட மாதச் சம்பளக்காரர்களால் கூட இவ்விலைவாசி உயர்வைத் தாங்க முடியவில்லை என்பதல்லவா உண்மை! எனவே மு.க.வின் ''வாங்கும் சக்தி உயர்ந்தால்...'' என்ற ஆலோசனையை, சோகப்படத்தில் சேர்க்கப்படும் மலினமான நகைச்சுவை காட்சியோடுதான் ஒப்பிடமுடியும்.

உணவுப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற ஆலோசனையை முதலாளித்துவப் பத்திரிகைகள் அனைத்தும் வாரி வழங்கியுள்ளன. இந்தியாவில் விவசாய உற்பத்தி வளர்ச்சி அடையாமல், தேங்கிப் போய்விட்டது என்பது உண்மைதான். ஆனாலும், தற்போதைய விலையேற்றத்துக்கு உற்பத்தித் தேக்கத்தை முக்கியக் காரணமாகக் கூறிவிட முடியாது. விவசாய உற்பத்தியைத் தீர்மானிப்பதிலும், விவசாய உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்வதிலும், விநியோகிப்பதிலும் அரசு படிப்படியாகக் கழன்று கொண்டு, அப்பொறுப்பை மெல்ல மெல்லத் தனியார்மயப்படுத்தி வருவதுதான் இந்த விலையேற்றத்துக்குப் பின்னுள்ள அடிப்படையான காரணம்.

உணவுப் பொருள் விலையேற்றத்துக்கு காரணங்களாகச் சொல்லப்படும் ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள வறட்சியும்; கச்சா எண்ணெய் விலை உயர்வும்; உயிரி-எரிபொருள் தயாரிக்க



சிமெண்ட் விலையைக் குறைப்பது தொடர்பாக தமிழக முதல்வர் மு.கருணாநிதியிடம் ஆலோசனை நடத்தும் சிமெண்ட் ஆலை அதிபர்கள்: கொள்ளைக்காரனுக்கு பட்டுக் கம்பள வரவேற்பு.

உணவுப் பொருட்கள் ஒதுக்கப்படுவதும் இரண்டாம்பட்சமானவைதான். விலைவாசி உயர்வுக்கும் தனியார்மயத்துக்கும் இடையேயுள்ள உறவை மூடி மறைப்பதற்காகவே, இந்த இரண்டாம் பட்ச காரணங்களை ஓட்டுக்கட்சிகளும், முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களும் ஊதிப் பெருக்குகின்றனர்.

தனியார்மயம் - தாராளமயத்திற்கு முன்பு, உணவுப் பொருள் உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்பதை இந்திய அரசு கொள்கை அளவிலாவது ஏற்றுக் கொண்டு இருந்தது. உலகமயத்திற்குப் பிறகோ, விவசாய உற்பத்திக்கு முன்னுரிமை தரப்படும் கொள்கை கைவிடப்பட்டு, தேவையென்றால், உணவுப் பொருட்களை அந்நிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொள்ளலாம்; அந்நியச் செலாவணிக் கையிருப்பை அதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது அரசின் நிலைப்பாடாகிவிட்டது. இப்படிப்பட்ட கொள்கையைக் கொண்ட அரசாங்கம், விவசாய உற்பத்தியைப் பெருக்கி, உணவுப் பொருள் தட்டுப்பாட்டையும், விலைவாசி உயர்வையும் கட்டுப்படுத்தி விடும் எனப் பகற்கனவு காண்பவர்களால்தான் நம்ப முடியும்.

தேவைக்கேற்ப உற்பத்தி இருந்தால், விலைவாசி கட்டுக்குள் இருக்கும் என்பது உண்மையானால், சர்க்கரை, சிமெண்ட், இரும்புக் கம்பிகளின் விலைகள் உயர்ந்திருக்கக் கூடாது. ஆனால் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு வெளிச்சந்தையில் ரூ. 13-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ சர்க்கரை இன்று ரூ. 17/- ஆக அதிகரித்து விட்டது. கடந்த ஆண்டு பட்ஜெட்டின் பொழுது ரூ. 190-200/- ஆக இருந்த சிமெண்ட் மூட்டை ஒன்றின் விலை, தற்பொழுது, ரூ. 250/-ஐத் தாண்டிவிட்டது. கடந்த மூன்றே மாதங்களுக்குள் கட்டுமானக் கம்பிகளின் விலை 20 முதல் 24 சதவீதம் வரை அதிகரித்திருக்கிறது. எனவே, உற்பத்திப் பெருகுவதற்கும் சில்லறை விற்பனை விலைக்கும் நேரடித் தொடர்பில்லை என்பது தெளிவாகிறது. மாறாக, உற்பத்தியிலும், விநியோகத்திலும் எந்தளவிற்குத் தனியார் முதலாளிகளின் ஆதிக்கம் ஒழிக்கப்படுகிறதோ, அந்தளவிற்குத்தான் விலைவாசியைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும் என்பதே உண்மை.

•••

சிதறுண்டும், நலிவடைந்தும் இருக்கும் இந்திய விவசாயத்தை, விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுப் பண்ணைகளாக அமைத்து, நவீன வேளாண் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்குவதுதான் மக்கள் நலன்சார்ந்த வழிமுறை. ஆனால், அரசோ, நெல், கோதுமை உள்ளிட்ட அனைத்து விவசாயப் பொருட்களுக்கும் கட்டுப்படியாகக் கூடிய விலையை நிர்ணயிக்க மறுப்பதன் மூலம் விவசாயிகளைப் போண்டியாக்கி, அவர்கள் நிலத்தில் இருந்து வெளியேறுவதைத் துரிதப்படுத்துகிறது. போண்டியாகி நிற்கும் விவசாயிகளை ''ஒப்பந்த விவசாயம்'' என்ற திட்டத்தின் மூலம் தரகு முதலாளித்துவ / பன்னாட்டு நிறுவனங்களின் கொத்தடிமைகளாக மாற்ற முயலுகிறது. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் விவசாயத்தில் முதலாளித்துவ நிறு



படிப்பகம்

www.padippakam.com

வனங்கள் ஆதிக்கம் செலுத்த வழி ஏற்படுத்தித் தருகிறது; பாரம்பரிய விதைகளைப் பாதுகாக்காமல் அழிய விடுவதன் மூலமும், காப்புரிமை என்ற பெயரிலும் விவசாயிகளை விதைகளுக்குப் பன்னாட்டு நிறுவனங்களை அண்டிப் பிழைக்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கி வருகிறது.

விவசாய உற்பத்தியில் திணிக்கப்படும் இத்தனியார்மயத்திற்கு இணையாக உணவுப் பொருள் விநியோகமும் முதலாளித்துவ நிறுவனங்களிடம் தாரை வார்க்கப்படுகிறது. பொது விநியோக முறையைப் பலப்படுத்துவதன் மூலம்தான் உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி, மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை வழங்க முடியும். ஆனால், அரசோ, உணவு மானியத்தைக் குறைப்பதன் மூலம் உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்வதைப் படிப்படியாகக் கைவிடுவது; அதில் தனியாரை அனுமதிப்பது; உணவுப் பொருள் வணிகத்தில் இணைய தள வர்த்தகத்தை அனுமதிப்பது ஆகிய ''சீர்திருத்தங்களின்'' மூலம், உணவுப் பொருள் விநியோகத்தைச் சூதாட்டமாக மாற்றி வருகிறது.

உணவுப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த, அரசு நடத்தும் நெல், கோதுமை கொள்முதலை 1.5 கோடி டன்னில் இருந்து 4 கோடி டன்னாக அதிகரிக்க வேண்டும்'' என்கிறார், அனைத்திந்திய விவசாயிகள் சங்கத்தின் தமிழகத் தலைவர் கே.பாலகிருஷ்ணன். ஆனால், தி.மு.க. அரசோ, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கைவிடப்பட்ட நெல் கொள்முதலை மீண்டும் தொடங்க மறுக்கிறது. அரசியலில் எலியும் பூனையுமாக இருக்கும் மு.க.வும், ஜெயாவும் உலக வங்கியின் கட்டளையை நிறைவேற்றுவதில் பங்காளிகளாக இருப்பதற்கு இதுவொரு சான்று.

மைய அரசோ, 1.5 கோடி டன்னுக்கு மேல் ஒரு மணிகூட கூடுதலாகக் கொள்முதல் செய்ய முடியாது என அடம் பிடிக்கிறது. ரேசன் கடை

**தேவைக்கேற்ப உற்பத்தி இருந்தால், விலைவாசி கட்டுக்குள் இருக்கும் என்பது உண்மையானால், சர்க்கரை, சிமெண்ட், இரும்புக் கம்பிகளின் விலைகள் உயர்ந்திருக்கக் கூடாது. உற்பத்தியிலும், விநியோகத்திலும் எந்தளவிற்குத் தனியார் முதலாளிகளின் ஆதிக்கம் ஒழிக்கப்படுகிறதோ, அந்தளவிற்குத்தான் விலைவாசியைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும்.**

கள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்வதை அனைத்து மக்களுக்கும் விரிவாக்க முடியாது; வறுமைக் கோட்டுக்குக் கீழே / மேலே எனப் பொது விநியோகம் பிரிக்கப்பட்டுள்ளதைக் கைவிட முடியாது என உணவு அமைச்சர் சரத்பவார் அறிவிக்கிறார். 2004-04-இல் 1.68 கோடி டன், 2005-06-இல் 1.48 கோடி டன், 2006-07-இல் 92 இலட்சம் டன் என கோதுமை கொள்முதல் படிப்படியாகக் குறைந்து வருவதை இந்த அறிவிப்போடு இணைத்துப் பார்க்க வேண்டும்.

அதேசமயம், இந்தப் பற்றாக்குறை கொள்முதலைக் காரணமாகக் காட்டி, 2006 மற்றும் 2007-ஆம் ஆண்டுகளில், 75 இலட்சம் டன் கோதுமை அந்நிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. ஒரு குவிண்டால் கோதுமையை ரூ. 1,000/- கொடுத்து உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய (அப்பொழுது) மறுத்த மைய அரசு, அதைவிட ஒன்றரை மடங்கு அதிகவிலையில் புளுத்த கோதுமையைப் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்தது.

காங்கிரசிற்கு முன்பு ஆண்ட பா.ஜ.க.வின் ஆட்சியில் 2.2 கோடி டன் கோதுமை ரேசன் விலையைவிட மலிவாக, ஐரோப்பிய பன்றிகளுக்குத் தீவனமாக ஏற்றுமதி செய்யப்பட்டது. பா.ஜ.க. - காங். அரசுகளின் இந்த இரண்டு நடவடிக்கைகளும், பன்னாட்டு உணவுக் கழகங்களின் நலனுக்கு ஏற்ப, இந்தியாவின் பொது விநியோகமுறை மாற்றியமைக்கப்பட்டு வருவதற்கான ஆதாரங்கள். இதற்கு இணையாகவே, தரகு முதலாளித்துவ நிறுவனங்களும், பன்னாட்டு நிறுவனங்களும் நெல்-கோதுமை போன்ற உணவுப் பொருட்களை நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யவும்; பல சரக்கு சில்லறை வியாபாரத்தில் இறங்கவும் அனுமதிக்கப்பட்டன.

இத்தனியார்மய நடவடிக்கைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற் போல, கடந்த ஐம்பது ஆண்டு காலமாக முன்பேர வர்த்தகத்துக்கு இருந்துவந்த தடை, பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் இறுதியில் (2003-ஆம் ஆண்டில்) முற்றிலுமாக நீக்கப்பட்டது. அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் உள்ளிட்டு 103 பொருட்கள், முன்பேர இணைய தள வர்த்தகம் மூலம், வியாபாரம் செய்வதற்கு அனுமதியும் கொடுத்தது. பா.ஜ.க. அடுத்து வந்த காங். கூட்டணி ஆட்சி, உலக மயக் காலக் கட்டத்தில் முன்பேர வர்த்தகத்தைத் தவிர்க்க முடியாது எனக் கூறி, அச்சூதாட்டத்தைத் தொடர்ந்து நடத்த அனுமதித்தது. கடும் எதிர்ப்புகளுக்குப் பிறகே 2006-ஆம் ஆண்டில் அரிசி, கோதுமை, பருப்பு வகைகளுக்கு





படிப்பகம்

www.padippakam.com

மட்டும் இணைய தள வர்த்தகத்தில் தடை விதிக்கப்பட்டது.

முன்பேர வர்த்தகம், உணவுப் பொருள் கொள்முதலில் தனியாருக்கு அனுமதி, சில்லறை வணிகத்தில் பன்னாட்டு நிறுவனங்களும் தரகு முதலாளிகளும் கூட்டுச் சேர்ந்து நுழைய அனுமதி ஆகிய இந்தத் தனித்தனியான இழைகளை இணைத்துப் பார்த்தால் தான், உணவுப் பொருள் விநியோகம் முன்பு போலன்றி, முதலாளித்துவ நிறுவனங்களின் பிடியில் சிக்கிக் கொண்டுள்ள அபாயத்தின் பரிணாமம் விளங்கும்.

மக்காச் சோளம் முன்பேர வர்த்தகத்தில் நுழைக்கப்பட்ட பிறகு, ஒரு கிலோ மக்காச்சோளத்தின் விலை ரூ. 5/- லிருந்து ரூ. 9/- ஆக அதிகரித்து விட்டதாகக் குறிப்பிடும் தேசிய முட்டை உற்பத்தியாளர் சங்கம், "முன்பேர வர்த்தகத்தில் இருந்து மக்கா சோளத்தை நீக்க வேண்டும்; இல்லையென்றால் அதில் இருந்து தயாரிக்கப்படும் கோழித் தீவனத்தின் விலை உயர்ந்து அடுத்த ஓரிரு மாதங்களில் ஒரு முட்டையின் விலை ரூ. 3 ஆக உயர்ந்துவிடும்" என எச்சரித்துள்ளது. முன்பேர வர்த்தகத்தின் பாதிப்புகள் பற்றி ஆராய மைய அரசால் நியமிக்கப்பட்டுள்ள அபிஜித் சென் கமிட்டி, "விலை உயர்வுக்கும் முன்பேர வர்த்தகத்துக்கும் இடையே தொடர்பு இருப்பதனைக் கண்டறிந்துள்ளதாக" முதலாளித்துவப் பத்திரிகைகளே ஒப்புக் கொள்கின்றன.

அமெரிக்கப் பொருளாதார மந்தம், அமெரிக்க டாலர் சரிவு, பங்குச் சந்தை வீழ்ச்சி - இவற்றால் வர்த்தகச் சூதாடிகளுக்கு இப்பொழுது உணவுப் பொருள் முன்பேர வர்த்தகம்தான் கொழுத்த இலாபம் தரும் சூதாட்டமாக மாறிவிட்டது. பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு முன்பேர வர்த்தகம்தான் காரணம் என வெனிசுலா நாட்டின் பெட்ரோலியத்துறை அமைச்சர் வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டியுள்ளார். பங்குச் சந்தைக்குள் பாய்ந்து வந்த வங்கிகளின் கடன் மூலதனம், இப்பொழுது முன்பேர வர்த்தகத்தில் பாய்கிறது.

பாண்டிச்சேரியில் சமீபத்தில் கடத்தல் அரிசி பிடிபட்டபொழுது, அக்கடத்தல் வியாபாரத்துக்கு இந்தியாவின் தனியார் வங்கியான ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி கடன் வழங்கியிருந்தது அம்பலமானது. இத்தனியார்மய நடவடிக்கைகள், பழைய பதுக்கல் வியாபாரிகளின் இடத்தில், ஐ.டி.சி., கார்கில், ஏ.டபிள்யூ.பி.இந்தியா, பிரிட்டானியா, ரிலையன்ஸ் போன்ற பன்னாட்டு / தரகு முதலாளித்துவ நிறுவனங்களைக் கொண்டு வந்து அமர்த்தியிருக்கிறது.

அதனால்தான் நாடாளுமன்ற நிலைக்குழு 25 விவசாய விளைபொருட்களை முன்பேர வர்த்தகப் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் எனக் கூறிய பிறகும், மன்மோகன் சிங் கும்பல் அந்த ஆலோசனையைக் காதில் போட்டுக் கொள்ளவே மறுக்கிறது.

இரும்பு உருக்காலை அதிபர்களுக்கும், கட்டுமானக் கம்பிகளின் விலை உயர்வுக்கும் தொடர்பில்லை என அத்துறையின் அமைச்சரே சான்றிதழ் அளிக்கிறார்; வர்த்தக அமைச்சர் கமல்நாத், விலை உயர்வைக் காட்டி ஏற்றுமதிக்குத் தடை போடக்கூடாது என முட்டுக்கட்டை போடுகிறார்; நிதியமைச்சர் ப.சிதம்பரமோ விலை உயர்வைக் கட்டுப்படுத்துவது என்ற போர்வையில் உணவுப் பொருட்களின் தாராள இறக்குமதிக்கு அனுமதி கொடுக்கும் சதித்தனத்தில் இறங்கிவிட்டார்.

இவையாவும் விலை உயர்வுக்குக் காரணமான தனியார்மயத்தைக் கைவிடவோ, அல்லது குறைந்தபட்சம் தனியார்மயத்தைக் கட்டுப்படுத்தவோ கூட காங்.கூட்டணி ஆட்சி தயாராக இல்லை என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

கடந்த பதினெட்டு வருடங்களில் உணவு தானியத்திற்கான நிலம் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 0.26 சதவீதம் குறைந்து கொண்டே வருவதற்குக் காரணம் தனியார்மயம்தான். 1973-74-இல் சராசரியாக ஆண்டொன்றுக்கு ஒரு இந்தியக் குடிமகனுக்குச் சாப்பிடக் கிடைத்த தானியத்தின் அளவு 154.24 கிலோ. அது, 2004-05-இல் 132.58 கிலோவாக வீழ்ச்சியடைந்திருப்பதற்குக் காரணம் தனியார்மயம்தான். உணவுப் பொருளைப் பதுக்கும் பேர்வழிகளைத் தண்டிக்கும் சட்டம், ரிலையன்ஸ் ஃபிரெஷ் மீதோ, பிக் பஜார் மீதோ, ஹெரிடேஜ் பிரெஷ் மீதோ பாய மறுப்பதற்குக் காரணம் தனியார்மயம்தான். மூலப்பொருட்களின் விலை உயர்வினால் சிறுதொழில்கள் முடங்கி - கோவையில் மட்டும் 15 ஆயிரம் சிறு தொழில்கூடங்களில் 40 சதவீத ஆலைகள் உற்பத்தியை நிறுத்திவிட்டதாகக் கூறப்படுகிறது - தொழிலாளர்கள் வேலையிழந்து வருவதற்குக் காரணம் தனியார்மயம் தான்.

இத்தனியார்மயத் தாக்குதலைத் தேர்தல்கள் மூலம் வீழ்த்திவிட முடியாது. அப்படிச் சொல்லி ஓட்டுப் பொறுக்கிவரும் போலி கம்யூனிஸ்டுகளை விட, உலகமகா மோசடிப் பேர்வழிகள் வேறு யாரும் இருக்கவும் முடியாது!

● செல்வம்


இப்போது விற்பனையில்...

**விலைவாசி உயர்வுக்குக் காரணம் யார்?**




பசித்த வயிறையும் பட்டினிச் சாவையும் தம் பகற்கொள்ளைக்குப் பயன்படுத்தும் பன்னாட்டு நிறுவனங்களை நொறுக்காமல் பட்டினியை ஒழிக்க முடியாது; உணவு தானியத்திலும் ஊகபேரம் நடத்தும் பன்னாட்டு, இந்நாட்டுச் சூதாடிகளை ஒழிக்காமல் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை விளக்கி, உலக முதலாளித்துவத்துக்கும் தனியார்மயம்-தாராளமயம்-உலகமயம் எனும் மறுகாலனியாக்கக் கொள்கைகளுக்கும் எதிராகப் போராட அறைகூவும் பிரசுரம்.

வெளியீடு: ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. பு.ஜ.தொ.மு.

நன்கொடை: ரூ. 5/-

**பிரதிகள் கிடைக்குமிடம்:**

இரா. சீனிவாசன், புதிய கலாச்சாரம்,
18, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை,
அசோக்நகர், சென்னை - 600 083.
தொலைபேசி: 044-23718706



படிப்பகம்

www.padippakam.com

# தில்லைப் போராட்டம்:
# "தமிழர் கண்ணோட்ட"த்தின் அற்பவாதம்

**தில்லைப் போராட்டத்தில் ம.க.இ.க.வும் அதன் தோழமை அமைப்புகளும் அடைந்துள்ள வெற்றியைப் பூசி மெழுகும் "தமிழர் கண்ணோட்ட"த்தின் அற்பத்தனமான முயற்சி சந்தி சிரிக்கிறது.**

தில்லைச் சிற்றம்பல மேடையில் தமிழ் ஏறியதைத் தொடர்ந்து சில 'விரும்பத்தகாத' துணை விளைவுகளைச் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தீட்சிதர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மார்ச் 2 போராட்டத்தின் வெற்றிக்குப் பின் ஆறுமுகசாமி சிற்றம்பல மேடையேறிப் பாடிவிட்டு இறங்கும்போது, அங்கே கூடியிருக்கும் பல பக்தர்கள் அவரை வணங்கி அவரிடமிருந்து திருநீறும் வாங்குகிறார்கள்.

தீட்சிதர்களால் பக்தர்களைத் தடுக்கவும் முடியவில்லை; ஆறுமுகசாமிக்கு பக்தர்கள் வழங்கும் இந்த மரியாதையைச் சகிக்கவும் முடியவில்லை. எனவே, புழுங்குகிறார்கள். தங்களது 'ஏரியாவுக்குள்' அத்து மீறி நுழைந்த ஒருவன் தங்களுக்கு மட்டுமே உரித்தான திருநீறு வழங்கும் 'அத்தாரிட்டி'யையும் பறித்துக் கொண்டுவிட்டதை எண்ணி வயிறு வெந்து துடிக்கிறார்கள்.

தமிழுக்கும் தமிழர் உரிமைக்கும் தம்மையே வாளும் கேடயமுமாக நியமித்துக் கொண்டுள்ள தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சியினரும்கூட தீட்சிதர்களைப் போலவே தீராத சூலை நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஏப்ரல் 2008 ''தமிழர் கண்ணோட்டம்'' இதழில் கி.வெங்கட்ராமன் எழுதியுள்ள கட்டுரையைப் படிக்கும்போது நமக்குத் தெரியவருகிறது.

''இந்திய தேசியர்களும், மறைமுகப் பார்ப்பனீயர்களும், துக்ளக் சோ வுக்கு இணையான சூழ்ச்சிக்காரர்களுமான ம.க.இ.க.வினர், தமிழ் மக்களின் உரிமையை நிலைநாட்ட ஒரு போராட்டம் நடத்தி வெற்றியும் பெற்று விட்டார்களே, இந்த 'விபரீதம்' நேர்ந்தது எப்படி?'' என்ற கேள்விக்கு விளக்கமளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஒருபுறம்.

''சிதம்பரம் நகரில் தமது அமைப்பின் கிளை கூட இல்லாதவர்கள், 'நம்ம ஏரியாவில்' (இரண்டு பொருளிலும்) நுழைந்து கொடி நாட்டியிருக்கிறார்களே, த.தே.பொ.க.வின் சிதம்பரம் நகரக்கிளை என்ன செய்து கொண்டிருந்தது?'' என்ற கேள்விக்குத் தன்னிலை விளக்கமளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் மறுபுறம்.

இந்தக் கேள்விகளை அவர்களது வாசகர்கள் எழுப்பினார்களா என்று நமக்குத் தெரியாது. ஆனால் அவ்வாறு எழுப்பக்கூடுமென்று அஞ்சி, அத்தகைய கேள்விகளிலிருந்து தப்பிப்பதற்கு கட்டுரையாளர் செய்திருக்கும் தந்திரங்கள் மட்டும் அந்தக் கட்டுரை முழுவதும் துலக்கமாகத் தெரிகிறது.

'இது ஒன்றும் பெரிய வெற்றி அல்ல' என்று காட்ட வேண்டும். ஆனால் வெளிப்படையாக அப்படி எழுதி விடக்கூடாது. ம.க.இ.க.வின் பங்களிப்பை பெருந்தன்மையுடன் அங்கீகரிப்பது போலத் தெரிய வேண்டும். ஆனால் இதனை அவர்கள் மட்டும் சாதித்து விடவில்லை என்று வாசகர்களுக்கு உணர்த்த வேண்டும். 'நாங்கள்தான் செய்தோம்' என்று மார்க்சிஸ்டு கட்சிக்காரர்களைப் போல ஒரே வரியில் பச்சையாகப் போஸ்டர் அடித்து ஒட்டி மாட்டிக் கொள்ளக் கூடாது. அதே விசயத்தைக் கரைத்து நான்கு பக்கங்களாக்கி, வெளிர் பச்சையாக வெளிப்படுத்த வேண்டும். இப்படியொரு இலக்கணத்தை மனதில் வகுத்துக் கொண்டு, அது வெளித் தெரிந்துவிடாமல் இந்தச் சொல்லோவியத்தைத் தீட்டப் பெரிதும் முயன்றிருக்கிறார் கி.வெ.

**சிவனடியார் ஆறுமுகசாமி திருச்சிற்றம்பலத்தில் தேவாரம் பாடுவதற்காக, மனித உரிமைப் பாதுகாப்பு மையம் ஒருங்கிணைத்து நடத்திய பல்வேறு போராட்டங்களில் இருந்து இரு பதிவுகள்.**








படிப்பகம்

www.padippakam.com

விட்டுவிட்டார்கள்.

ஆயினும் இது மகத்தான முதல் கட்ட வெற்றி. இதற்குப் பிறகு தான் காலையில் பூசை முடிந்த பிறகு தீட்சிதர்களில் ஒருவர் சிற்றம்பல மேடையில் 'நடராசர் திருமுன்' பக்தர்கள் அனைவரின் காதில் விழும்படியாக தேவாரம் பாடுவது நடைபெற்றது.

தமிழ் நாட்டின் பிற

மேடையில் தமிழ் இனத்தின் குரலாக ஆறுமுகசாமி என்ற 79 வயது முதிய சிவனடியார் தேவாரம் பாடி, தமிழின உரிமையைப் பதிவு செய்திருக்கிறார்.

முன்பு தேவாரம் திருவாசகம் ஆகிய தமிழ் பக்திப் பாடல்களை சிற்றம்பல மேடையில் பாடினால் அம்பலம் தீட்டாகிவிடும் என்று மறுத்துவந்த தீட்சதர்கள் நிலைமையைச் சமாளிக்க ஆறுகால பூசைகளும் முடிந்தபிறகு தேவாரத்திலிருந்து சில வரிகளைப் பாடி தமிழிலும் பாடப்படுவதாகக் கதை பண்ணினார்கள்

10 தமிழர் கண்ணோட்டம் ஏப்ரல் 2008

**திருச்சிற்றம்பலத்தில் தேவாரம் பாடுவதற்காக 1987-இல் நடந்த போராட்டத்தின் முடிவு குறித்து, தமிழர் கண்ணோட்டம் - ஏப்ரல் 2008 இதழில் கி.வெங்கட்ராமன் (இடது ) மற்றும் முனைவர் த.ஜெயராமன் எழுதிய கட்டுரைகளில் முன்னுக்குப் பின் முரணான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.**

''சிற்றம்பலத்தில் தமிழ் பாடுவதற்கான போராட்டம் 1987-இலேயே துவங்கி விட்டது. உலகறிந்த தமிழறிஞர்கள் ஒன்றிணைந்து நடத்திய அப்போராட்டத்தில் தமிழ் காப்பணியின் தலைவர் மெய்யப்பனாரும் பங்கேற்றார். அமைச்சர் இராம.வீரப்பன் தலையிட்டுச் சமரசம் செய்தார். வேறு வழியின்றி, காலப்பூசையின் முடிவில் சிற்றம்பல மேடையில் தேவாரம் பாடப்படும் என்று தீட்சிதர்கள் ஒத்துக் கொண்டு கையொப்பமிட்டனர். ஆயினும் நம்முடைய தமிழறிஞர்கள் கவனக் குறைவாகவோ அல்லது அதற்கு மேல் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலைமையின் காரணமாகவோ யார் பாடுவது என்பது குறித்து வலியுறுத்தாமல் விட்டு விட்டார்கள்.''

''ஆயினும் இது மகத்தான முதல் கட்ட வெற்றி. இதற்குப் பிறகுதான் காலையில் பூசை முடிந்த பிறகு தீட்சிதர்களில் ஒருவர் சிற்றம்பல மேடையில் நடராசர் திருமுன் பக்தர்கள் அனைவரின் காதில் விழும்படியாக தேவாரம் பாடுவது நடைபெற்றது'' - என்று வரலாற்றை வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறார் கி.வெ.

தீட்சிதர்களுக்கு எதிரான போராட்டத்தின் வரலாறு 1987-இல் அல்ல, வள்ளலார் காலத்திலும் அதற்குமுன் நந்தன் காலத்திலுமே துவங்கிவிட்டது. அந்த வரலாற்றுக் காலத்தில் த.தே.பொ.க.வும் இல்லை, ம.க.இ.க.வும் இல்லை என்பதால் அந்த வரலாற்றை கி.வெ. நினைவு கூரவில்லை போலும்!

*''மார்ச் 2 போராட்டம் என்பது இரண்டாம் கட்ட வெற்றி மட்டுமே. மாபெரும் முதல் கட்ட வெற்றியை மறந்து விடாதீர்கள்!''* என்று வாசகர்களுக்குப் பணிவுடன் சுட்டிக் காட்டுவதுதான் இந்த வரலாற்றுணர்வின் நோக்கம். ஆனால், கி.வெ. குறிப்பிடும் இந்த மகத்தான *முதல் கட்ட வெற்றியை*, மூன்று பக்கம் தள்ளி அடுத்த கட்டுரையின் துவக்கத்திலேயே, (அதே தமிழர் கண்ணோட்டம் இதழில்) எள்ளி நகையாடுகிறார் முனைவர் செயராமன்.

*''சிற்றம்பல மேடையில் தமிழ் பாடினால் அம்பலம் தீட்டாகிவிடும் என்று மறுத்து வந்த தீட்சிதர்கள், நிலைமையைச் சமாளிக்க ஆறுகாலப் பூசைகளும் முடிந்த பிறகு தேவாரத்திலிருந்து சில வரிகளைப் பாடி, தமிழிலும் பாடப்படுவதாகக் கதை பண்ணினார்கள்''* என்று திரை கிழிக்கிறார் செயராமன்.

எது உண்மை? அனைவரின் காதில் விழும்படியாக தீட்சிதர்கள் தேவாரம் பாடியது உண்மையா, கதை பண்ணியது உண்மையா? ''நாங்க பாடிண்டுதான் இருக்கோம். நாஸ்திகாளும் நக்சலைட்டுகளும்தான் தேவையில்லாம பிரச்சினை பண்றாள்'' என்று துக்ளக் உள்ளிட்ட பல பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்கிறார்கள் தீட்சிதர்கள். அதாவது ''செயராமன் கூறுவது பொய், கி.வெ. கூறுவதுதான் உண்மை'' என்று வழிமொழிகிறார்கள் தீட்சிதர்கள். அல்லது தீட்சிதர்கள் கூறுவதை கி.வெ. வழிமொழிகிறார் என்று கொள்ளலாமா?

1987-இல் தமிழறிஞர்கள் கவனக்குறைவாக கோட்டை விட்டுவிட்டார்களாம்! ''தேவாரம் பாடமாட்டோம். அப்படியே பாடினாலும் நாங்கள்தான் பாடுவோம். நீங்கள் பாடக்கூடாது'' என்று தீட்சிதர்கள் கூறியதன் உட்பொருள் உலகறிந்த தமிழறிஞர்களுக்கு உரைக்கவில்லை போலும்! 'சூத்திரனைப் பாட விட மாட்டோம்' என்று தீட்சிதர்கள் கூறியதை அன்று ஏற்றுக் கொண்டது அவமானகரமான ஒரு சமரசம். ''தமிழுக்குத் தடையில்லை, நாங்க பாடிண்டுதான் இருக்கோம்'' என்று சொல்லித் தமிழனுக்குத் தடை விதிக்கவும், தங்களது தீண்டாமை ஆதிக்கத்தை நியாயப்படுத்தவும் அந்தச் சமரசம்தான் இந்தக் கணம் வரை தீட்சிதர்களுக்கு ஒரு கருவியாகப் பயன்பட்டு வருகிறது.

1987 முயற்சியை அலட்சியப் படுத்துவது நமது நோக்கமல்ல. ஆனால் மார்ச் 2 போராட்டத்தின் வெற்றி, ஏற்கெனவே செய்த தவறைப் பரிசீலிப்பதற்குப் பயன்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பரிசீலிப்பதுதான் தமிழினம் முன்னேறுவதற்கான வழி. ஆனால் மார்ச் 2 போராட்டத்தின் மீது வெள்ளையடிப்பதற்கான வழியை அல்லவா தேடுகிறார் கி.வெ.!

கி.வெ.யின் கருத்துப்படி 1987-இல் தமிழ் மீதான தீண்டாமையை அகற்றியது முதல் கட்ட வெற்றி. 2008-இல் தமிழன் மீதான தீண்டாமையை அகற்றியது இரண்டாம் கட்ட வெற்றி. தாடிக்கொரு சீயக்காய்; தலைக்குத் தனி சீயக்காய்! கி.வெ.யின் கண்ணோட்டத்தின்படி உலகறிந்த தமிழறிஞர்கள் தமிழ் மீதான தீண்டாமையை ஏற்கெனவே ஒழித்து விட்டார்கள். தமிழன் மீதான தீண்டாமை மட்டுமே எஞ்சியிருந்தது. அதை அகற்ற 1999-இல் ஆறுமுகசாமி வருகிறார்.

''ஆறுமுகசாமி தாக்கப்பட்டபோது அதனைக் கண்டித்து ஒரு அமைப்பு என்ற வகையில் இப்பிரச்சினையை மக்களிடையே தமிழ் காப்பணி முதன் முதலாக எடுத்துச் சென்றது''



படிப்பகம்

www.padippakam.com

என்று தன் கட்டுரையில் கி.வெ. குறிப்பிடுகிறார். அதாவது, இரண்டாம் கட்டப் போராட்டத்தையும் த.தே.பொ.க தான் துவக்கி வைத்திருக்கிறது.

அம்மட்டோ! அதன்பின் ''உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடத்த ஆறுமுகசாமியை வழக்குரைஞர் ராஜுவுக்கு அறிமுகம் செய்து வைத்ததும் நான்தான்'' என்றும் போகிற போக்கில் சொல்லி வைக்கிறார். இப்படியாக, தொடர் ஓட்டத்தின் கடைசி சுற்றில் ஓடும் பொருட்டு ம.க.இ.க.வினரிடம் 'கட்டை' ஒப்படைக்கப்பட்டது என்று இந்தச் சொல்லோவியத்தைப் புரிந்து கொள்ளலாம்.

(தன்னை ராஜுவிடம் அனுப்பி வைத்தவர் கடலூர் வழக்குரைஞர் நடராசன்தான் என்பதை கடந்த மார்ச் 29 அன்று சிதம்பரம் பொதுக்கூட்டத்தில் பேசிய ஆறுமுகசாமி குறிப்பிட்டார். ராஜுவும் இதனை உறுதி செய்தார். முக்கியத்துவம் வாய்ந்த இந்த 'வரலாற்று உண்மையை' நிறுவ இதற்கு மேல் வேறு ஆவணச் சான்றுகள் ஏதும் நம்மிடம் இல்லை)

இவையெல்லாம் மறுப்புரை எழுதும் தரத்துக்குக் கீழான வைகோ சமாச்சாரங்கள். சேதுக்கால்வாய்க்கு எதிராக ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் தடை வாங்கிய தருணத்தில், ''நான்தான் சேதுக்கால்வாய் பற்றி நாடாளுமன்றத்தில் முதன் முதலில் பேசினேன்'' என்று தமிழ் மக்களின் காதில் கத்திக் கொண்டிருந்தார் வைகோ. ''அப்படியானால் ஜெயலலிதாவை ஏன் கண்டிக்க மறுக்கிறாய்?'' என்று மக்கள் கேட்பார்களே என்பது கூட அவருக்கு உரைக்கவில்லை. 'உரைக்காது' என்பதுதான் இந்த மனோபாவத்தின் தனிச்சிறப்பான குணாம்சம்!

ஒரு போராட்டம் வெற்றி பெற்றபின், ''நாங்கள்தான் முதலில் துண்டறிக்கை போட்டோம், நான்தான் அறிமுகப் படுத்தினேன்'' என்றெல்லாம் வலிந்து எழுதித் தமது பாத்தியதையைப் பதிவு செய்து கொள்ள வேண்டிய அவல நிலை எதற்கு? தொடங்கியவர்களே முடித்து வைத்திருக்கலாமே! முழுவெற்றிக்கும் உரிமை கொண்டாடுவதற்கான வாய்ப்பைத் 'தியாகம்' செய்துவிட்டு, இப்போது அந்தத் தியாகத்தை இப்படிச் சந்து பொந்துகளில் புகுந்து பதிவு செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஏன் ஆளாகவேண்டும்?

**15.7.07 அன்று மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் தலைமையில் தேவாரம் பாடச் சென்ற ஆறுமுகசாமியும், தமிழ் ஆர்வலர்களும், புரட்சிகர அமைப்பினரும் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, 5.8.07 அன்று சிதம்பரம் நகரில் நடந்த கண்டன பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.வேல்முருகன்.** (கோப்புப் படம்).



**ஒரு போராட்டம் வெற்றி பெற்றபின், ''நாங்கள்தான் முதலில் துண்டறிக்கை போட்டோம், நான்தான் அறிமுகப்படுத்தினேன்'' என்றெல்லாம் வலிந்து எழுதி, தமிழர் கண்ணோட்டம் தமது பாத்தியதையைப் பதிவு செய்து கொள்ள வேண்டிய அவல நிலை எதற்கு? தொடங்கியவர்களே முடித்து வைத்திருக்கலாமே!**

''தமிழுக்காக நடந்த இப்போராட்டத்தில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியை ஏன் காணவில்லை?'' என்று யாராவது கேட்டார்களா, அல்லது கேட்கக்கூடும் என்று கி.வெ அஞ்சினாரா, தெரியவில்லை. ''ம.க.இ.க.வுடன் இணைந்து செயல்பட முடியாத சூழலில் த.தே.பொ.க.வும் தமிழ் காப்பணியும் இணையான இயக்கங்களை நடத்தி வந்ததாக''க் கூறி மடையடைக்கிறார்.

மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் ம.க.இ.க; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; வி.வி.மு. ஆகிய எமது அமைப்புகள் முன்நின்று செயல்பட்டன. முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் வி.வி.எஸ், பா.ம.க சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன், வி.எம்.எஸ், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் மாவட்டச் செயலர் காவியச்செல்வன், தி.க, கடலூர் தமிழ்ச் சங்கம் முதலானோர் தொடர்ந்து இணைந்து இயங்கி வந்திருக்கின்றனர். இவர்கள் யாருக்கும் இணைந்து இயங்க முடியாத சூழல் எற்படவில்லை.

அப்படியொரு சூழல் மார்க்சிஸ்டு கட்சிக்குத்தான் முதலில் ஏற்பட்டது. தீட்சிதர்களைப் 'பார்ப்பனர்கள்' எனக் குறிப்பிடுவதை ஆட்சேபித்து அவர்கள் வெளியேறினார்கள். அது அவர்களுக்குத் தலையாய கொள்கைப் பிரச்சினை. அவர்களது பார்ப்பன பாசத்தை நாடறியும். த.தே.பொ.க.வுக்கும், தமிழ் காப்பணிக்கும் என்ன பிரச்சினை? அவர்களுக்கும் அதுவேதான் பிரச்சினை.

இந்து அறநிலையத்துறை இணை ஆணையரும் முன்சீப் நீதிமன்றமும் தீட்சிதர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கியதை எதிர்த்து 2006-ஆம் ஆண்டு இப்பிரச்சினை தொடர்பான இயக்கம் தீவிரமடைந்திருந்த சூழ்நிலையில், தமிழ் காப்பணியில் இயங்கும் இராம. ஆதிமூலம், ''சிதம்பரம் நகர தமிழ்ப் பேரவை'' சார்பில் ''சேக்கிழார் செந்தமிழ் விழா'' நடத்தினார். அந்த விழாவில் ஆசியுரையும் அருளுரையும் வழங்க தீட்சிதப் பார்ப்பனர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இந்த அருவெறுக்கத்தக்க நடவடிக்கையை அம்பலப்படுத்தி 28.7.2006 அன்று எமது அமைப்பின் சார்பில் அந்தக் கூட்டத்திலேயே துண்டறிக்கை விநியோகித்தோம். தமிழையும் தமிழரையும் தீண்டத்தகாதவரென இழிவுபடுத்தும் தீட்சிதப் பார்ப்பனர்களை கொலுவேற்றிக் கொண்டாடும் இந்த வீடணத்தனத்தை எம்முடன் போராடிய அனைவருமே கண்டித்தனர். தீட்சிதர்களுடனும் ம.க.இ.க.வுடனும் ஒரே நேரத்தில் இணைந்து இயங்க முடியாமல் போன அந்தச் சூழல் இதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

**எந்தத் திருடன் மீது அரசு ஆணை போட்டதோ, அந்தத் திருடனுடனேயே பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலம் கோயிலின் மீது தீட்சிதன் கொண்டாடும் உரிமையை தமிழ் தேச பொதுவுடைமைக் கட்சி புதுப்பித்துத் தந்திருக்கிறது. ''ஆறுகாலமும் பாடலாம்'' என்ற அரசாணையை ''காலையில் மட்டும் பாடலாம்'' என்று பேசி முடித்திருக்கிறார்கள்.**

இந்தத் தவறு குறித்து தமிழர் கண்ணோட்டம் தன்னாய்வு எதையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு, த.தே.பொ.க. மற்றும் தமிழ் காப் பணியினர் சிதம்பரத்தில் அவசரம் அவசரமாக ஒரு பொதுக் கூட்டம் நடத்தினர். கடந்த நான்கு ஆண்டுகளில் இவர்கள் நடத்திய இந்தப் பொதுக்கூட்டம் ஒன்றுதான் கி.வெ. குறிப் பிடும் இணையான இயக்கம் போலும்!

இணையான இயக்கமோ, துணையான இயக்கமோ, இயக்கம் என்பதன் நோக்கம் என்ன? செயல் தானே? ''சிற் றம்பல மேடையில் பக்தர்கள் தேவாரம் பாடலாம்'' என்று 30.4.2007 அன்று அறநிலையத்துறை ஆணையரின் உத்தரவு வந்து விட்டது. ஆனால் ஆறுமுகசாமியும் அவர்களுடைய ஆட்களும் சிற்றம்பல மேடையேறுவதற்கு முன்சீப் நீதிமன் றத்தில் தீட்சிதர்கள் தடை வாங்கி வைத்திருந்தனர். அதைக் காட்டிப் பாடச்சென்ற அவரையும் உடன் சென்ற தோழர்க ளையும் கைது செய்தது போலீசு.

ஆறுமுகசாமியைத் தவிர மற்றவர்கள் யாருக்கும் தடை இல்லை. 8.6.2007 அன்றுதான் ஆணையரின் உத்தரவுக்கு உயர்நீதி மன்றத்தில் தடை வாங்கினார்கள் தீட்சிதர்கள். இந்த இடைப்பட்ட ஒரு மாதத்தில் த.தே.பொ.க.வினரோ, தமிழ் காப்பணியினரோ சிற்றம்பல மேடையேறிப் பாடியிருக் கலாமே! இணையான இயக்கம் என்பதில் இத்தகைய நடவ டிக்கைகள் சேராதோ!

மார்ச் 2-ஆம் தேதி போராட்டத்தன்று நடந்ததென்ன? அன்று கோயில் வாசலில் தோழர்கள் மீது மூர்க்கத்தனமாகத் தடியடி நடத்தி அனைவரையும் கைது செய்தது போலீசு. அதன்பின் நந்தன் நுழைந்த தெற்குவாயிலில், நந்தனைப் போலவே அநாதையாக அமர்ந்திருந்தார் ஆறுமுகசாமி. 'இணையாக' இயக்கம் எடுத்தவர்கள் யாரும் அவருக்குத் துணை வரவில்லை. மறுநாள் மாலை வரை தோழர்களின் போராட்டம் நீதிமன்றத்தில் தொடர்ந்தது. சிற்றம்பல மேடையோ தமிழனுக்காகக் காத்திருந்தது. 4-ஆம் தேதி வரை யாரையும் காணோம். இந்த மானக்கேடான நிலை மையைச் சகிக்க முடியாமல்தான், இறை நம்பிக்கையில்லாத தோழர்களை 5-ஆம் தேதியன்று காலை சிற்றம்பல மேடைக்கு அனுப்பினோம்.

இதனைக் கி.வெ எப்படி எழுதுகிறார்? ''தமிழில் வழிபாடு நடத்த வருபவர்களைத் தடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று 4-ம் தேதியன்று தமிழக அரசு உறுதியாக அறி வித்தது. இதைத் தொடர்ந்து 5.3.08 அன்று ம.க.இ.க. தோழர்கள் 5 பேர் காவல்துறை பாதுகாப்போடு சிற்றம்பல மேடையில் தேவாரம் பாடி அரசாணைப்படி உள்ள வழி பாட்டு உரிமையை நிலைநாட்டினர்''. ஏதோ ம.க.இ.க. தோழர்கள் தீட்சிதர்களுக்குப் பயந்து கொண்டிருந்ததைப் போலவும், அரசு அறிவிப்பு வந்ததைத் தொடர்ந்து, தைரியம் பெற்று போலீசு பாதுகாப்புடன் பாடச் சென்றதைப் போலவும் நைச்சியமாகச் சித்தரிக்கிறார் கி.வெ.

போராட்டம் வெற்றி பெற்ற பின்னரும் தாங்கள் நடத்திய இணையான இயக்கத்தை அவர் விவரிக்கிறார். பக்தர்கள் தமிழில் வழிபாடு நடத்தும் உரிமையை இடையீடு இல் லாமல் செயல்படுத்தும் தேவை எழுந்ததாம். உடனே த.தே.பொ.க. சார்பில் 11.3.2008 அன்று காவல்துறை அதிகா ரிகள் முன்னிலையில் தீட்சிதர்களுடன் பேச்சுவார்த்தை நடத் தினார்களாம். 12.3.08 முதல் நாள்தோறும் காலையில் 7.30 முதல் 8 மணி வரை பக்தர்கள் தமிழில் பாடி வழிபடலாம் எனவும், அதற்கு தீட்சிதர்கள் எந்த வகையிலும் இடையூறு செய்யக் கூடாது எனவும் உடன்படிக்கையானதாம். த.தே.பொ.க. நகரச் செயலாளரும் பட்டு தீட்சிதரும் இந்த உடன்படிக்கையில் கையெழுத்து போட்டார்களாம். இதனைத் தொடர்ந்து 12 முதல் 15-ஆம் தேதி வரை சிவனடி யார்கள் போலீசு பாதுகாப்போடு கம்பீரமாக தெளிந்த இசையில் தேவாரம்- திருவாசகம் பாடினார்களாம்!

இதை மானக்கேடு என்பதா, பச்சைத் துரோகம் என்பதா? ஆறு காலப் பூசைகள் முடிந்த பின்னரும் அடுத்த அரை மணி நேரம் பக்தர்கள் தேவாரம் பாடலாம் என்பது தீட்சிதர்கள் மீது அரசாங்கம் போட்டிருக்கும் ஆணை. இதை தீட்சிதர்கள் தடுத்தால் எதிர்த்து மோதவேண்டும். அல்லது அவர்கள் மீது போலீசில் புகார் கொடுத்து சிறைக்கு அனுப்ப வேண்டும். இரண்டுக்கும் தெம்பில்லாத பட்சத்தில் சும்மாயிருக்க வேண்டும்.

இணையான இயக்கம் நடத்தியவர்களால் எப்படி சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கமுடியும்? இந்த வர லாற்று நிகழ்வில் தங்களது முத்திரையைப் பதிக்க வேண்டாமா? எந்தத் திருடன் மீது அரசு ஆணை போட்டதோ, அந்தத் திருடனுடனேயே பேச்சுவார்த்தை நடத் தியதன் மூலம் கோயிலின் மீது தீட்சிதன் கொண்டாடும் உரிமையை இவர்கள் புதுப்பித்துத் தந்திருக்கிறார்கள். ''ஆறு காலமும் பாடலாம்'' என்ற அரசாணையை ''காலையில் மட்டும் பாடலாம்'' என்று பேசி முடித்திருக்கிறார்கள். அதாவது, நாம் போராடிப் பெற்ற உரிமையை அவர்கள் பேச் சுவார்த்தை நடத்தி, ஆறில் ஒரு பங்காக வெட்டியிருக் கிறார்கள்.

பிறகு போலீசு பாதுகாப்புடன் 'கம்பீரமாக' வழிபட் டார்களாம்! மார்ச் 5-ஆம் தேதி பாடத்தெரியாமல் பாடிய ம.க.இ.க.காரர்களைப் போல அல்லாமல், 'தெளிந்த இசை' யுடன் தேவாரம் பாடினார்களாம்!

இதனை 'மகத்தான மூன்றாம் கட்ட வெற்றி' என்று கி.வெ. குறிப்பிட்டிருக்க வேண்டும். தன்னடக்கம் கருதித் தவிர்த்து விட்டார் போலும்! தமிழ் மக்களுக்கு த.தே.பொ.க. பெற்றுத் தரக்கூடிய 'நான்காம் கட்ட வெற்றி' எப்படி இருக்கும் என்று நினைக்கும்போதே நெஞ்சு நடுங்குகிறது! மறுபடியும் நந்தன் விட்ட இடத்திலிருந்து நாம் தொடங்க வேண்டியிருக்குமோ?

● தொரட்டி


படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் சக்தி எழுந்தது!
# சிறப்புப் பொருளாதார மண்டலம் வீழ்ந்தது!

**சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நாட்டை விட்டே துரத்தியடிக்க முடியும் என்பதற்கு கோவா மக்களின் போராட்டம் முன்னுதாரணமாக விளங்குகிறது.**

கோவா என்றாலே கடற்கரை, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், கொண்டாட்டங்கள் என்றுதான் நமக்கு அடையாளம் காட்டப்படுகிறது. இந்த முதலாளித்துவச் சித்தரிப்புக்கு மாறாக, இனிமேல் கோவா என்றால் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை விரட்டியடித்த மாநிலம் என்றுதான் நாம் அடையாளம் காண வேண்டும்.

நமது நாடு முழுவதும் இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கெதிராக (சிபொம) இங்கொன்றும் அங்கொன்றுமாகப் போராட்டங்கள் நடைபெற்று வரும் வேளையில், கிராம மக்கள், படித்த நடுத்தர வர்க்கம், பொறியாளர்கள், கிறித்துவ சபை, ஊடகங்கள் என அனைவரும் ஓரணியில் இணைந்து போராடி இந்த வெற்றியைப் பெற்றுள்ளனர். அம்மாநிலத்தில் இதுவரை அனுமதியளிக்கப்பட்ட அனைத்து சி.பொ.ம.க்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட 7 சி.பொ.ம.க்களின் அங்கீகாரமும் இரத்து செய்யப்பட்டுள்ளது. அத்துடன், இனிமேல் சி.பொ.ம.வைப் பற்றிப் பேசவேமாட்டோம் என மாநில அரசை உறுதியளிக்க வைத்திருக்கிறது, இம்மக்கள் எழுச்சி.

உள்ளூர் மக்கள் அனைவரும் சி.பொ.ம. விரோதி மஞ்ச் என்னும் அமைப்பின் கீழும், படித்த நடுத்தர வர்க்கத்தினரும் தொழில் வல்லுநர்களும் கோவா பச்சாவ் அபியான் (கோவாவைக் காப்போம் இயக்கம்) எனும் அமைப்பின் கீழும் திரண்டு போராடினார்கள்.

இப்போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் வெர்னா என்னும் கிராமத்தைச் சேர்ந்த சார்லஸ் பெர்னாண்டஸ், மாண்டிரோ மற்றும் லுத்தோலிம் எனும் கிராமத்தைச் சேர்ந்த ஆலன் ஃபல்லேரியா ஆகிய மூவரும் பொறியாளர்கள். இவர்களுடன் பீட்டர் காமா எனும் ஒப்பந்தக்காரரும் இணைந்து சி.பொ.ம.வை எதிர்த்து இயக்கத்தை நடத்தியுள்ளனர்.

கோவா சட்டசபைக்குக் கடந்த முறை நடந்த தேர்தலின் போது, அப்பகுதி எம்.எல்.ஏ.வால் ஏழைகளுக்கு இலவச வீட்டுவசதித் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தின் விவரங்களைக் கேட்டு இவர்களில் மாண்டிரோ என்பவர், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனுப் போட்டார். அப்போதுதான் வெர்னா ஊரிலுள்ள தொழிற்பேட்டைப் பகுதியில் ரஹேஜா கார்ப்பரேசன் எனும் தனியார் நிறுவனத்தின் மென்பொருள் சி.பொ.ம.விற்காக 106 ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கியிருந்த விசயம் தெரிய வந்தது. அது வரை சி.பொ.ம. என்றால் என்ன என்றே தெரியாத இவர்கள், தொடர்ச்சியாகத் தகவல் அறியும் மனுக்களைப் போட்டு சி.பொ.ம. குறித்தும், அரசின் சட்டங்கள் குறித்தும் படித்துள்ளனர்.




**''எங்கள் மண்ணை அந்நியருக்குத் தாரைவார்க்க அனுமதியோம்!'' - சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராக கோவா மக்களின் விடாப்பிடியான போராட்டம்.**

மனுக்களுக்கு மட்டும் 18,000 ரூபாய் வரை செலவிட்ட இவர்கள், சி.பொ.ம. வானது எவ்வாறு வெளிநாட்டினரின் நேரடி ஆதிக்கத்தின் கீழ் குட்டி அரசாக இந்திய நிலப்பரப்புக்கு உள்ளேயே இயங்கப் போகிறது என்பதை அறிந்ததும் மனம் குமுறினர். இதுபற்றிக் கூறும்போது ''இந்த மாநிலத்தின் பூர்வகுடிகளான நாங்கள், எங்களது சொந்த நாட்டுக்குள்ளேயே திடீரென அந்நியர்களாக வாழ வேண்டிய சூழலுக்கு தள்ளப்படுவதை அறிந்ததும் அதிர்ச்சியாக இருந்தது'' என்கிறார் மாண்டிரோ.


படிப்பகம்

www.padippakam.com

முதலில் இவர்கள் இனம் கண்ட ரஹேஜா கார்ப்பரேச னின் சி.பொ.ம. விற்கான விண்ணப்பம், சரிவர நிரப்பப்படா மலும் கம்பெனியின் முத்திரை கூட இல்லாமலும் இருந்த போதிலும், முதலமைச்சரின் சிபாரிசின் பேரில் அரசு உடனடி யாக சி.பொ.ம.வுக்கு அனுமதி அளித்திருந்தது.

உடனடியாக தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங் கள் பலவற்றை மாநிலம் முழுவதிலும் நடத்தி சி.பொ.ம.வின் அபாயங்களை விளக்கி மாண்டிரோவும், 'கோவா பச்சாவ் அபியான்' அமைப்பினரும் மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கினர்.

இவர்களது பிரச்சாரம் சி.பொ.ம. வால் பாதிக்கப்பட்ட மக்களிடையே மட்டுமின்றி, அதனால் பாதிக்கப்படாத கிரா மங்களிலும் நல்ல பலனைத் தந்தது. முதல்கட்டமாக, சி.பொ.ம. விரோதி மஞ்ச் இயக்கத்தினர் 200 பேர்களைத் திரட்டிக் கொண்டு வெர்னாவில் ரஹேஜா நிறுவனத்தின் சி.பொ.ம.விற்குள் பேனர்களுடன் முழக்கமிட்டபடி நவம்பர் 3, 2007 அன்று நுழைந்தனர். அரசு முறைப்படி அனுமதி வழங்கும் முன்னரே கட்டுமானப் பணிகளைத் தொடங்கி இருந்தது அந்த மண்டலம். 4 மாதக் கட்டு மானப் பணிகள் ஏற்கெனவே முடிந்து இருந்ததும், பல இடங்களில் பூமியைத் துளைத்து ஆழ்துளைக் கிணறு களை அமைத்திருந்ததும் தெரிய வந்தது. இவை அனைத்தையும் சி.பொ.ம. விரோதி மஞ்ச் இயக்கத்தி னர் வீடியோவில் பதிவு செய்ததுடன் கட்டுமானப் பணிகளைத் தொடர வேண்டாம் என அங்கிருந்தவர் களை எச்சரித்துவிட்டு வந்துவிட்டனர்.

அதற்குப் பின் இம்மண்டலத்தை விரட்டி அடிக் கும் போராட்டம் தீவிரமானது. முன்னாள் எம்.எல்.ஏ. மஹந்தி சல்தானாவும் கோவா பச்சாவ் அபியானும் இதில் இணைந்தவுடன் கோவா முழுக்க போராட்டங் கள் பற்றி எரியத் தொடங்கின. மக்கள் திரள் போராட் டம் தீவிரமடையவே, கோவா முதல்வரான திகம்பர காமத், மாநிலம் முழுவதிலும் உள்ள இம்மண்டலங் களின் செயல்பாட்டை நிறுத்தி வைப்பதாக அறிவித் தார். முதல்வரின் அறிவிப்பு வந்தவுடேனேயே கோவா பச்சாவ் அபியான், சி.பொ.ம. விரோதி மஞ்ச் அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 250 தொண்டர்கள் வெர்னா சி.பொ.ம.வுக்குள் நுழைந்து அங்கிருந்த பொறியாளர்கள், காவலாளிகள் அனைவரையும் வேலையை நிறுத்தச் சொல்லி வற்புறுத்தினர். கட்டுமானத் தொழிலாளர் களை வேலை செய்ய விடாமல் தடுத்து அப்பகுதியில் இருந்து வெளியேறச் செய்தனர். வெர்னாவில் இருந்து சி.பொ.ம. விரட்டப்பட்டு விட்டது.

இதே நேரத்தில், சிப்லா எனும் மருந்து தயாரிப்பு நிறுவ னத்தின் சி.பொ.ம., கோவாவின் பொந்தா வட்டத்தில் உள்ள கெரீம் எனும் ஊரில் உருவாக்கப்பட இருந்தது. அடர்த்தி யான காடுகளும் வற்றாத ஓடைகளும் நிறைந்த புத்ஹாம் குன்றுப்பகுதியில் அமைந்திருக்கும் அவ்வூரில், மருந்து தயா ரிப்பு நிறுவனத்திற்கென்றே தனி சி.பொ.ம., இந்தியாவி லேயே முதல்முறையாக உருவாக்கிடத் திட்டமிடப்பட்டது. காடுகளை அழித்து நிறுவப்பட இருந்த இம்மண்டலத்தின் வேலைகள் மிகவும் ரகசியமாக நடந்து வந்தன. கடந்த டிசம் பர் 7 தேதி இரவு, கட்டுமானப் பொருட்களைக் கொண்டு வந்த வாகனம் ஒன்று மரத்தில் மோதி விபத்துக்குள்ளான தோடு, மின் தடையையும் ஏற்படுத்தியதால், மக்கள் மத்தி யில் சி.பொ.ம.வுக்காக நடைபெற்றுவந்த பணிகள் தெரிய வந்தன. உடனே வெர்னா, பாஞ்சிம் கிராம மக்கள் இதற்கெதி ரான போராட்டத்தைத் தொடங்கினர். டிசம்பர் 8, 2007 அதி காலையிலேயே 600-க்கும் மேற்பட்டோர் திரண்டு வந்து சி.பொ.ம.வுக்குள் நுழைந்தனர். கட்டுமானப் பணிகள் முழு வதும் நிறுத்தப்பட்டு, தொழிலாளர்கள் முழுவதும் வெளியே றும்வரை அப்பகுதியைவிட்டு நகர முடியாது எனப் போரா டிய மக்களை, அங்கு காவலுக்குப் போடப்பட்டிருந்த போலீசுப் படையால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. இறுதி யில் அரசு பணிந்தது. கட்டுமானப் பணிகள் அப்படியே நிறுத் தப்பட்டதுடன் தொழிலாளர்கள் தங்களது உபகரணங்களு டன் வெளியேற்றப்பட்டார்கள்.

இவ்விரண்டு போராட்டங்களும் ஓட்டுக் கட்சிகளால் நடத்தப்படவில்லை. சுற்றுச் சூழலைக் காப்போம் எனும் முழக்கத்தின் கீழ் திரட்டப்பட்ட மக்களுடன், நடுத்தர வர்க் கம்கூடத் தன்னை இணைத்துக் கொண்டு போராடி இருக்கின் றது. இவர்களின் போராட்டத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என் பது இல்லை. எனினும் ஏகாதிபத்திய, தரகு முதலாளிகளின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கோவாவிலும், மேற்குவங்கம் நந்திகிராமிலும் மக்கள் திரண்டெழுந்து தம்மை நாசமாக்க வரும் சிறப்புப் பொருளாதார மண்டலங் களை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டங்களை நடத்தி அதில் வெற்றியும் பெற்று வருகின்றனர்.



சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிட வரும் அதிகாரிகளை முற்றுகையிட்டுப் போராடும் கோவா மக்கள்.

ஆனால், தமிழ்நாட்டிலோ நான்குநேரி, தேன்கனிக் கோட்டை, செய்யாறு, எண்ணூர் என அடுத்தடுத்து சி.பொ.ம.ங்களை உருவாக்க ஒப்பந்தங்கள் போடப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே பல மண்டலங்கள் செயல்படத் தொடங்கி விட்டன. ஆனால், இங்கு இதை எதிர்த்து எந்த ஓட்டுக்கட்சியும் வாயைத் திறப்பதில்லை. மக்களோ இவை எல்லாம் வளர்ச்சித் திட்டங்கள் என மாயையில் மூழ்கிக் கிடக் கின்றனர். சி.பொ.ம.க்களின் பின்னுள்ள அரசியலையும் அவை உருவாக்க இருக்கும் எண்ணற்ற கொடிய விளைவு களையும் மக்களிடம் விளக்கி அவர்களை அணிதிரட்டிப் போராடினால், இத்தகைய சி.பொ.ம.க்களை நாட்டை விட்டே விரட்டி முடியும் என்பதை கோவா மற்றும் நந்தி கிராம மக்களின் போராட்டங்கள் நிரூபிக்கின்றன.

• அன்பு



படிப்பகம்

www.padippakam.com

# தீவிரவாத ஒழிப்பும் போலீசின் அத்துமீறல்களும்

## குண்டு வெடிப்புகள் தொடர்பான பல்வேறு வழக்குகளில் அப்பாவி முசுலீம்கள் சிக்கவைக்கப்பட்டிருப்பது அம்பலமாகி வருகிறது.

*நீதிபதி: எனது மேசையின் மீதுள்ள ஆவணங்கள், ''இவர் முக்தர் அல்ல'' எனத் தெளிவாகக் காட்டுகின்றன. ஆகையால், இவரின் உண்மையான பெயர் என்ன?*

*போலீசு அதிகாரி: அஃப்டாப் ஆலம் அன்சாரி என்பது இவரின் உண்மையான பெயர்.*

*நீதிபதி: நீங்கள் தவறான நபரைக் கைது செய்துள்ளீர்கள் என்பதுதான் இதன் பொருள். இந்தக் கொடூரமான தவறு எப்படி நடந்தது?*

*நீதிபதியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் போலீசு அதிகாரி மௌனமாக நிற்கிறார்.*

— இது ஏதோவொரு திரைப்படத்தின் திரைக்கதை வசனம் அல்ல. கடந்த ஆண்டு (2007) நவம்பர் மாதம் உ.பி.யில் நடந்த குண்டு வெடிப்பு தொடர்பாக நீதிமன்றத்தில் நடந்த உண்மையான விசாரணை இது.

இந்த விசாரணையின் முடிவில் அஃப்டாப் ஆலம் அன்சாரி, கொல்கத்தா நகரைச் சேர்ந்த கூலித் தொழிலாளி என்பதும், உ.பி.யில் நடந்த குண்டு வெடிப்புக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதும் நிரூபணமாகி, அவர் விடுதலை செய்யப்பட்டார்.

அப்பாவி அஃப்டாப் தீவிரவாதியாக உருமாற்றம் செய்யப்பட்ட கதையோ, புலனாய்வு என்ற பெயரில் போலீசார் நடத்திவரும் அத்துமீறல்களையும், அவர்களின் அடிமுட்டாள்தனத்தையும் ஒரு சேர அம்பலப்படுத்துகிறது. ''உ.பி.யில் நடந்த குண்டு வெடிப்பு தொடர்பாக முகம்மது காலித், தாரிக் குவாஸ்மி என்ற இரு தீவிரவாதிகளைக் கைது செய்து உ.பி. போலீசு விசாரணை நடத்தியபொழுது, அவர்கள் உ.பி. குண்டு வெடிப்பின் மூளையாகச் செயல்பட்டவன் 'முக்தர் என்ற ராஜு என்ற அஃப்டாப்' என்றும்; அவன் கோரக்புரைச் சேர்ந்தவன் என்றும் சாட்சியம் அளித்தார்களாம். கொல்கத்தாவைச் சேர்ந்த அஃப்டாபையும் முக்தர் எனச் செல்லமாக அழைக்கும் பழக்கம் இருந்ததாலும், அவரும் கோரக்புரைச் சேர்ந்தவர் என்பதாலும் இந்த இரண்டு பொருத்தங்களை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, கூலித் தொழிலாளி அஃப்டாபைக் குண்டு வைக்கும் தீவிரவாதியாகக் குற்றஞ் சுமத்திக் கைது செய்திருக்கிறது, உ.பி. போலீசு.

இனி இந்தியாவிலேயே பிறந்து, வளர்ந்து, வசித்துவரும் பின்லேடன்கள்கூட, போலீசாரின் புலனாய்வு திறனை எண்ணிக் கொஞ்சம் உஷாராகத்தான் இருக்க வேண்டும்; ஏதோ நகைச்சுவைக்காகவோ, அப்பாவிகளைப் பயமுறுத்துவதற்காகவோ இதனைச் சொல்லவில்லை. அப்பாவி முசுலீம்களைத் தீவிரவாதிகளாக முத்திரை குத்துவதோடு, குண்டு வைப்புகளை போலீசாரே ''செட்-அப்'' செய்வதும் பல்வேறு வழக்கு விசாரணைகளின் பொழுது அம்பலமாகியிருக்கிறது.

''தில்லியைச் சேர்ந்த முகம்மது மொயரிஃப் கயாமர், இர்ஷத் அலி என்ற இருவரும் ''அல் பதார்'' இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் என்றும்; அவர்களிடமிருந்து 2 கிலோ எடையுள்ள ஆர்.டி.எக்ஸ் வெடிகுண்டு மருந்தும், சில கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதாகவும் கூறி, அவர்களை பிப். 9, 2006 அன்று கைது செய்ததாக''ப் பத்திரிகைகளுக்கும், அந்த இருவரின் பெற்றோர்களுக்கும் தில்லி சிறப்புப் போலீசும், மைய அரசின் உளவுத் துறையும் தகவல் கொடுத்தன. இவ்வழக்கு விசாரணையின்பொழுது, போலீசாரின் சாட்சியங்களில் பல ஓட்டைகள் இருப்பதனைக் கண்டறிந்த தில்லி உயர்நீதி மன்றம், இவ்வழக்கை சி.பி.ஐ. விசாரிக்கு மாறு உத்தரவு பிறப்பித்தது.

சி.பி.ஐ. விசாரணையில், ''கயாமர் டிச.22, 2005 அன்று அவரது வீட்டில் இருந்து அடையாளம் தெரியாத சிலரால் கடத்தப்பட்டதும்; இர்ஷத் அலி, அதற்கு பத்து நாட்கள் முன்னதாகவே காணாமல் போய்விட்டதும்; அவர்கள் இருவரும் தில்லி போலீசு மற்றும் உளவுத்துறையால் சட்டவிரோதக் காவலில் வைத்துச் சித்திரவதை செய்யப்பட்டதோடு, ஆர்.டி.எக்ஸ் மருந்து மற்றும் கைதுப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டது என்பதெல்லாம் தில்லி சிறப்புப் போலீசாரே ''செட்-அப்'' செய்து நடத்திய நாடகம் என்பதும்'' அம்பலமானது. கயாமரும், இர்ஷத் அலியும் அப்பாவிகள் என்பது தெரிந்து போனாலும் அவர்கள் இன்றுவரை சிறைக் கைதிகளாகத்தான் இருந்து வருகின்றனர்.

அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்ட சில தினங்கள் கழித்து, மும்பய் போலீசார் முகம்மது அப்ரோஸ் என்பவரைக் கைது செய்தனர். ''முகம்மது அஃப்ரோஸ் கொடிய தீவிரவாதி என்றும்; விமானத்தை ஏவுகணை போலப் பயன்படுத்தி, இங்கிலாந்திலும், ஆஸ்திரேயாவிலும் தாக்குதல் நடத்த அஃப்ரோஸ் திட்டமிட்டிருந்ததாகவும்'' பத்திரிகைகளுக்கு போலீசார் செய்தி கொடுத்தனர். முகம்மது அஃப்ரோஸின் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்த, ஒரு போலீசு குழு இங்கிலாந்துக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் பறந்து போனது. போலீசாரின் இந்த நாடக பாணி முனைப்புகள் அனைத்தும் விசாரணையின்பொழுது நீர்க்குமிழி போல வெடித்துப் போயின. அஃப்ரோஸைத் தீவிரவாதி என நிரூபிக்க போலீசாரால் ஒரு சிறு தடயத்தைக் கூட காட்ட முடியவில்லை என்பதோடு, அவ்வழக்கு போலீசாரால் புனையப்பட்ட பொய்வழக்கு என்பதும் அம்பலமானது.

ராசஸ்தான் மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற அஜ்மீர் தர்காவில் அக்.11, 2007 அன்று நடந்த குண்டு வெடிப்பில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். இக்குண்டுவெடிப்பு நடந்தவுடனேயே, ''வங்காள தேசத்தைச் சேர்ந்த ஹர்கத்-அல்-ஜிகாத் அமைப்புதான் இக்குண்டு வெடிப்பை நடத்தியிருப்பதாகவும், அவ்வமைப்பு பள்ளிவாசல்கள், மதரசாக்களை மையமாக வைத்து இயங்குவதாகவும்'' போலீசார் அடித்துச் சொன்


படிப்பகம்

www.padippakam.com

னார்கள். தாங்கள் சொன்னதை நிரூபிப்பது போல, மகாராஷ்டிரா, ஜார்கண்ட், உ.பி., தில்லி ஆகிய மாநிலங்களில் உள்ள பல்வேறு பள்ளிவாசல்களிலும், மதரசாக்களிலும் தேடுதல் வேட்டை நடத்தி பல முசுலீம் மத குருமார்களையும், மதரசா ஆசிரியர்களையும் கைது செய்தனர். ஆனால், ஆஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பையும், கைது செய்யப்பட்டவர்களையும் இணைப்பதற்கு ஒரு ஆதாரத்தைக் கூட உருவாக்க முடியாமல் போனதால், கைது செய்யப்பட்டவர்கள் கடும் சித்திரவதைக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்கு மாநில போலீசாரின் கையில் இருந்து நழுவி சி.பி.ஐ. வசம் போய்விடக் கூடாது என்பதற்காகவே போலீசார் அவசரக்குடுக்கைத்தனமாக நடந்து கொண்டதாக முதலாளித்துவப் பத்திரிகைகளே இவ்வழக்கு விசாரணையை அம்பலப்படுத்தியுள்ளன.

ஆஜ்மீர் தர்கா குண்டு வெடிப்புக்கு முன் நடந்த ஹைதராபாத் குண்டு வெடிப்பிலும் ஹர்கத்-அல்-ஜிகாத் தொடர்புபடுத்தப்பட்டதோடு 20 இசுலாமிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த இளைஞர்களை அக்குண்டு வெடிப்போடு தொடர்புபடுத்த போதிய ஆதாரம் சிக்காததால், ஹைதராபாத் போலீசார் தங்களின் மானத்தைக் காத்துக் கொள்ள, அவ்விளைஞர்கள் அரசுக்கு எதிராகப் போர் தொடுக்கத் திட்டமிட்டதாகக் குற்றஞ்சுமத்தி, அவர்களைப் புதிய வழக்கில் சிக்க வைத்தனர். இப்புதிய வழக்கிற்கு போலீசார் காட்டிய ஆதாரம், அவ்விளைஞர்களிடம் இருந்து 'கைப்பற்றப்பட்ட' குஜராத் இனக்கலவரம் தொடர்பான ஒளிக் குறுந்தகடுகள்தான்!

மும்பையில் உள்ள காட்கோபர் பகுதியில் 2002-ஆம் ஆண்டு நடந்த குண்டுவெடிப்பு தொடர்பாக க்வாஜா யுனுஸ் என்ற கணினிப் பொறியாளர் கைது செய்யப்பட்டார். வளைகுடா நாடுகளில் வேலை செய்துவிட்டு இந்தியா திரும்பியவர் என்பதால், க்வாஜா யுனுஸ் மீது போலீசாருக்குப் பெருத்த சந்தேகம் இருந்தது. சனவரி 7, 2002 அன்று க்வாஜா யுனுஸ் சந்தேகத்திற்கு இடமான முறையில் இறந்து போனார். யுனுஸை விசாரணைக்காக மும்பையில் இருந்து அவுரங்காபாத்துக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்த பொழுது, அவர் தங்களிடமிருந்து தப்பியோடி விட்டதாக போலீசார் தெரிவித்தனர்.

ஆனால், இம்மர்மச் சாவு குறித்து போலீசார் நடத்திய விசாரணையில், க்வாஜா யுனுஸ் போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்டது அம்பலமானது. இக்கொட்டடிக் கொலை தொடர்பான வழக்கு விசாரணை மும்பய் உயர்நீதி மன்றத்தில் ஐந்து ஆண்டுகளாக நடந்து வருகிறது. "யுனுஸைக் கொன்றது தொடர்பாக இரகசிய போலீசாரால் குற்றஞ் சுமத்தப்பட்ட பத்து உயர் போலீசு அதிகாரிகள், வழக்கில் இருந்து பின்னர் ஏன் விடுவிக்கப்பட்டனர்?" என்ற நீதிமன்றத்தின் கேள்விக்கு, மதச்சார்பற்ற காங்கிரசு கூட்டணி அரசாங்கம் பதில் தராமல் கள்ள மௌனம் சாதிக்கிறது. இக்குண்டு வெடிப்பு தொடர்பாக, "தடா"வின் கீழ் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டது தனிக்கதை.

முசுலீம் தீவிரவாதம் மக்களுக்கு எதிரானதல்ல என்பதோ, முசுலீம் தீவிரவாதிகள் குண்டு வெடிப்புகள் போன்ற அழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்பதோ நமது வாதமல்ல. ஆனால், அனைத்துக் குண்டு வெடிப்புகளுக்கும் முசுலீம் தீவிரவாதத்தை மட்டுமே குற்றவாளியாக்குவதும்; வகைதொகையின்றி அப்பாவி முசுலீம்களைக் கைது செய்து சித்திரவதை செய்வதும், போலி மோதல் கொலைகளில் அழித்தொழிப்பதும்; போலீசும், அதிகார வர்க்கமும் முசுலீம் சமூகத்தையே குற்றப் பரம்பரையினர் போல நடத்துவதும் ஏன் என்பதுதான் நமது கேள்வி.



உ.பி. தலைநகர் லக்னோவில் உள்ள சிவில் உரிமை நீதிமன்ற வளாகத்தினுள் நடந்த குண்டு வெடிப்பு.

போலீசு உள்ளிட்ட அரசு இயந்திரம் முழுவதும் காவிமயமாகிவிட்டதன் அறிகுறி என்று இந்த அத்துமீறல்களை நாம் குறிப்பிடுகிறோம். ஆனால், இந்துமதவெறி பாசிஸ்டுகள் மட்டுமின்றி, நடுத்தர வர்க்கத்தினர் கூட, கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் தான் தீவிரவாதத்தை ஒழிக்க முடியும் என வாதிட்டு, இந்த அத்துமீறல்களை நியாயப்படுத்துகின்றனர். காவிமயமான இந்த அரசு பயங்கரவாதம் ஒரு புறம் அப்பாவி முசுலீம்களின் வாழ்க்கையையும், உயிரையும் பறித்துவிடுவதோடு, மறுபுறம் முசுலீம் தீவிரவாதம் வளர்வதற்கான வளமான சூழலைதான் ஏற்படுத்திக் கொடுக்கிறது.

முசுலீம் தீவிரவாதம் வளரவில்லை என்றால், அரசு பயங்கரவாதமும், இந்து மதவெறி பயங்கரவாதமும் தமது இருத்தலை நியாயப்படுத்திக் கொள்ள முடியாது என்பதல்லவா உண்மை!

• தனபால்



படிப்பகம்

www.padippakam.com

## தமிழக விவசாயத் துறை:

# பன்னாட்டு நிறுவனங்களின் தரகன்!

**"வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை" என்ற திட்டம் தமிழக விவசாயிகளைப் பன்னாட்டு நிறுவனங்களின் கொத்தடிமைகளாக்க உதவுகிறது.**

வரலாறு காணாத அளவுக்கு விவசாய உற்பத்தியில் பின்னடைவு; மிரள வைக்கும் அளவுக்கு உணவு உற்பத்தியில் தேக்கம்; புவிசூடேற்றத்தின் விளைவாக நிச்சயமற்ற பருவகாலங்கள்; விவசாயத்தையே விட்டு விரட்டப்படும் விவசாயிகள். இதன் ஊடாகவே விவசாயத்திற்கு மானிய வெட்டு; இடுபொருட்களின் விலை கிடுகிடு உயர்வு; மண் வளம் இழப்பு; நீர் பற்றாக்குறை என்று தொடர்தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறது ஒட்டு மொத்த விவசாயம்.

தொடரும் இந்தத் தீராத சிக்கலிலிருந்து மீள, ஒப்பந்த (காண்டிராக்ட்) விவசாயம் செய்யுமாறு விவசாயிகளுக்கு வழிகாட்டுகிறது, இந்திய அரசு. ஒப்பந்த விவசாயத்தை ஊக்குவிப்பதை 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கொள்கையாகவே அறிவித்திருக்கிறது, மன்மோகன் சிங் அரசு. ''விதையும் உரமும் பன்னாட்டு முதலாளிகள் கொடுப்பார்கள்; விளைபொருளுக்கான விலையையும் முன்கூட்டியே அவர்கள் தீர்மானித்து விடுவார்கள்; நிலமும் உழைப்பும் மட்டுமே விவசாயிக்குச் சொந்தம்'' - இதுதான் ஒப்பந்த விவசாயம்.

இதன்படி, பஞ்சாப் மாநிலத்தில் பெப்சி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பாசுமதி நெல்லைப் பயிரிட்டார்கள் விவசாயிகள். பன்னாட்டு கம்பெனிகளுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு கடுகும் உருளைக்கிழங்கும் பயிரிட்டார்கள். ஆனால், விளைந்த நெல்லும் கடுகும் கிழங்கும் தரமில்லை என்று கூறி ஒப்பந்தப்படி விலைதர மறுத்து ஏய்த்தன பன்னாட்டு நிறுவனங்கள். ஒப்பந்த விவசாயிகளோ போண்டியாகிப் போனார்கள். விவசாயிகளின் அதிருப்தியும் குமுறலும் போராட்டமாக வெடிக்கத் தொடங்கியதும், இப்போது இந்திய ஆட்சியாளர்கள் இன்னுமொரு மோசடி உத்தியுடன் களத்தில் இறங்கியுள்ளார்கள். அதுதான் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (Agricultural Technology Management Agency - ATMA) என்கிற திட்டம்.

இத்திட்டத்தின்படி, பன்னாட்டு நிறுவனங்களின் ஒப்பந்த விவசாயத்துக்கான தரகனாக இந்திய அரசின் விவசாயத் துறை செயல்படும்; இடைத்தரகர்களை ஒழித்து, மோசடிகள் ஏதுமின்றி ஒப்பந்த விவசாயிகளைப் பாதுகாக்கும்; விளைபொருளுக்கு நியாயவிலை கிடைப்பதை உத்தரவாதம் செய்யும். தோற்றத்தில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் ஏற்பாடாக இத்திட்டம் அறிவிக்கப்பட்டாலும், இதன் பின்னே விவசாயிகளைக் கொத்தடிமைகளாக்கி விவசாயத்தை நாசமாக்கும் மிகப் பெரிய சதி அரங்கேறி வருகிறது.

கடந்த நிதியாண்டு (2007 ஏப்ரல்) முதற்கொண்டு தமிழகத்தில் ''வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை'' (Agricultural Technology Management Agency - ATMA) என்ற திட்டம், பாதிக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மீதம் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் ஏப்ரல் 2008 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டமானது, நவம்பர் 1998-ஆம் ஆண்டு முதல் உலக வங்கி நிதியுடன் செயல்பட்டு வரும் தேசிய விவசாய தொழிற்நுட்ப திட்டத்தின் ஒரு அங்கமாகும். ''வேளாண் தொழிற்நுட்ப மேலாண்மை முகமை'' திட்டம் ஆரம்பத்தில் ஏழு மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த ஏழு மாநிலங்களில் கிடைத்த படிப்பினைகளையும் அனுபவங்களையும் கணக்கில் கொண்டு, அனைத்து மாநிலங்களுக்கும் நிதியுதவியுடன் உலகவங்கி பரிந்துரை செய்தது. இதன் தொடர்ச்சியாகத்தான் தமிழகம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் இத்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் அரசின் விவசாயம், தோட்டப்பயிர், கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, வேளாண் பொறியியல், மீன் வளர்ப்பு மற்றும் விவசாய பொருட்கள் விற்பனை துறைகளின் பணிகள் திருத்தியமைக்கப்படுகின்றன. இதன் ஊடாகவே மாநில மற்றும் மைய அரசின் விவசாய ஆய்வு நிறுவனங்களின் பணியும் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

அண்மைக் காலம் வரை விவசாயம் சார்ந்த அரசு துறைகளின் பணி விவசாய இடுபொருட்கள் / சேவை அளித்

**நவீனக் கொத்தடிமைகள்: ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டத்தில், பன்னாட்டு-உள்நாட்டு ஏகபோக முதலாளிகளின் ஏஜெண்டாகச் செயல்படும் விவசாயத்துறையின் அதிகாரிகளுடன் ஒப்பந்த விவசாயிகள்.**





படிப்பகம்

www.padippakam.com

தல், விவசாய உற்பத்தியை கணக்கிடுதல், விவசாய விரிவாக்க பணிகள் (ஆலோசனைகள் வழங்குதல், புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் பரப்புதல்) மேற்கொள்ளுதல், அரசின் திட்டங்களைச் செயல்படுத்தல், மைய-மாநில அரசுகளின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப விவசாய உற்பத்தியை நடைமுறைப்படுத்தல் ஆகியவைகளே ஆகும். இனி மேல் இந்த அரசுத்துறைகள் ''வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை'' திட்டத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட புதிய பணிகளை மேற்கொள்ளும். அவை:



**''வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை'' திட்டம், தரகு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. என்ன விளைவிக்க வேண்டும்; எவ்வளவு விளைவிக்க வேண்டும்; எப்படி விளைவிக்க வேண்டும்; என்ன விலைக்கு விற்கலாம்; எங்கு விற்கலாம் – என அனைத்தையும் தரகு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களே தீர்மானிக்கின்றன.**

1. சந்தையின் தேவையைப் புரிந்து அதற்கான அல்லது அதற்கு ஒத்த விரிவாக்க பணிகளை திட்டமிட வேண்டும். (Market led extension services) (சந்தையின் தேவை என்பது உள்ளூர் சந்தையை அல்ல; மாறாக பன்னாட்டு மற்றும் தரகு முதலாளிகள், நகர்புற மேட்டுக்குடியினர், மேலைநாடுகளின் தேவை).

2. சந்தை தேவை அடிப்படையில் விவசாய பொருட்கள் வாரியாக 10 முதல் 20 விவசாயிகள் கொண்ட குழுக்களை அமைத்தல். உதாரணத்திற்கு ஒரு நிறுவனத்திற்கு கத்தரிக்காய் தேவைப்படுகிறது. இதை கணக்கில் கொண்டு குறிப்பிட்ட புவியமைப்புப் பகுதியில் கத்தரிக்காய் உற்பத்தி செய்ய விவசாயிகளை அணிதிரட்டி கத்தரிக்காய் உற்பத்தியாளர் சங்கம் உருவாக்க வேண்டும்.

3. உற்பத்தி பொருள் வரியாக உருவாக்கப்படும் குழுக்களை அந்த குறிப்பிட்ட விவசாய பொருள் உற்பத்தியில் களப்பயிற்சி, விழிப்புணர்வு முகாம், கண்டு உணர் சுற்றுலா, செயல் விளக்கப் பண்ணைகள், கையேடுகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகத் தேர்ச்சியடையச்செய்ய வேண்டும்.

4. பயிற்றுவிக்கப்பட்ட விவசாயி குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருளை, பன்னாட்டு மற்றும் தரகு முதலாளிகள் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக, விவசாயி குழுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையே ஒப்பந்தங்களை உருவாக்குதல்.

5. ஒப்பந்த விவசாயம் மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு ஏதுவாக விவசாயிகளை அணிதிரட்டி பங்கேற்க வைத்தல்.

6. எங்கெல்லாம் அரசின் விவசாயம் சார்ந்த துறைகள் பலவீனமாக உள்ளதோ, அங்கெல்லாம் மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பங்கேற்க வழி வகை செய்வது.

7. இத்திட்டத்திற்காக மாவட்டந்தோறும் ஒதுக்கப்படும் ஒட்டுமொத்த நிதியில் குறைந்தபட்சம் 10 சதவீதமாவது தனியார் நிறுவனங்கள் / தன்னார்வ குழுக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். இதற்கு ஏற்றது போல், விவசாய அலுவலர்கள் மாவட்டத் திட்டத்தை வரையறுக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விசயத்தை இன்னும் விளக்கமாகப் புரிந்து கொள்ள, கடந்த ஆண்டு முதல் ''வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை'' திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வேலூர் மாவட்டத்தைப் பார்ப்போம். இத்திட்டம் செயல்பட ஆரம்பித்தவுடன் விவசாய துறையின் பணிகள் தலைகீழாக மாற ஆரம்பித்துவிட்டன. பல ஆயிரக்கணக்கான கோழிப் பண்ணைகளை வைத்திருக்கும் ''சாந்தி பார்சூன்'' என்ற ஒப்பந்த விவசாய நிறுவனத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய களத்தில் இறங்கி வேலை செய்ய ஆரம்பித்து விட்டனர் விவசாய அலுவலர்கள்.

இந்நிறுவனத்திற்குச் சொந்தமாக கோழிப்பண்ணைகள் பரவலாக தமிழகத்தில் உள்ளன. இக்கோழிபண்ணைகளுக்குத் தீவனமாகத் தேவைப்படும் மக்காசோளத்தை ஆந்திராவில் கொள்முதல் செய்து பண்ணைகளுக்கு விநியோகித்து வந்தனர். இதனால் கூடுதல் செலவு ஆகியது. இந்தப் பிரச்சினையை சாந்தி பார்சூன் நிறுவனம் விவசாய துறையின் பார்வைக்குக் கொண்டு வந்து, மக்காசோளத்தை உள்ளூரில் உற்பத்தி செய்து கொடுக்க ஏற்பாடு செய்தால், கொள்முதல் செய்து கொள்கிறோம் என்றது.

சந்தையின் தேவையை உணர்ந்த வேலூர் மாவட்ட விவசாயத் துறை, மக்காசோளம் உற்பத்தி செய்ய ஆர்வம் உள்ள விவசாயிகளை அடையாளம் கண்டது. இந்த விவசாயிகளை (10 முதல் 20 நபர்கள் உள்ளடக்கிய) பகுதி வாரியாக மக்காசோள உற்பத்தியாளர்கள் குழுவாகத் திரட்டியது. இப்படி பல குழுக்கள் அமைக்கப்பட்டன. விவசாய துறை, இந்த மக்காசோள உற்பத்தியாளர்கள் குழுக்களுக்கு மக்காசோள உற்பத்தி பற்றி களப்பயிற்சி, விழிப்



படிப்பகம்

www.padippakam.com

புணர்வு முகாம், கண்டு உணர் சுற்றுலா, கையேடு மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பயிற்சி அளித்தது. இப்படி தயார் செய்யப்பட்ட குழுக்களை சாந்தி பார்சூன் நிறுவனத்தின் ''ஒப்பந்த மக்காசோள உற்பத்தி'' திட்டத்துடன் விவசாயத்துறை இணைத்துள்ளது. இதன் மூலம் சாந்தி பார்சூன் நிறுவனம் தனது கோழிப் பண்ணைகளுக்குத் தேவையான மக்கா சோளத்தை ஒரே வட்டாரத்தில் குவிமையமாகக் கொள் முதல் செய்து கொள்கிறது.



''வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை''த் திட்டத்தால் சுயசார்பு முற்றாக அழிந்து, நாட்டின் ஒவ்வொரு மாவட்டமும் ஒற்றைப் பயிரை விளைவிக்கும் மாவட்டமாக மாற்றப்பட்டு விடும். கால்நடை வளர்ப்பு அழியும். நிலம் மலடாகும். நாட்டின் உணவுத் தன்னிறைவுத் திறன் அடியோடு அழியும்.

ஒப்பந்த விவசாயத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் உற்பத்திக்குத் தேவையான விவசாயிகளைக் கண்டறிதல், அவர்களைப் பயிற்றுவிப்பது, மற்றும் தொடர்ந்து ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் கண்காணித்தல் பணிகளை ஒப்பந்த விவசாயத்தில் பங்கேற்கும் நிறுவனங்கள் செய்ய வேண்டும். ஆனால், இங்கு இப்பணிகள் அனைத்தையும் வேளாண்துறை மேற்கொள்கிறது. மேலும், உற்பத்தியை ஒரே வட்டாரத்தில் குவிமையமாக்கித் தருகிறது. இதனால் சாந்தி பார்சூன் நிறுவனத்திற்கு கொழுத்த இலாபம். இதைத்தவிர, வேலூர் மாவட்ட விவசாயத் துறை, வாழை உற்பத்தியாளர்களைச் சங்கமாக்கி நேரடி இணைய தள (on line spot trading) வர்த்தக நிறுவனத்துடன் விவசாயிகளை இணைக்கிறது. இவற்றின் தொடர்ச்சியாக, ரிலையன்ஸ் நிறுவனத்துடன் கூட்டு வைப்பதற்கான ஏற்பாடுகளும் நடந்தேறி வருகின்றன.

இப்படிப் பன்னாட்டு மற்றும் தரகு முதலாளிகளின் தேவையை உணர்வுபூர்வமாக புரிந்து கொண்டு, அவர்களின் ஒரு அங்கமாக செயல்பட்டு வருகிறது வேலூர் மாவட்ட விவசாயத் துறை. இந்தச் செயற்பாட்டை வேளாண் அறிவியல் நிபுணர்கள் பாராட்டுகின்றனர்; வேலூர் ''மாதிரி''யை அனைத்து மாவட்டத்தினரும் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தவும் செய்கின்றனர்.

கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களிலும் இந்த போக்கே முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறது. பீகார் மாநிலத்தில் ''வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை'' திட்டத்தின் கீழ் விவசாயத் துறையானது தரகு முதலாளிகளின் சங்கமான சி.ஐ.ஐ. கூட்டமைப்பு, வைத்தியநாத் ஆயுர்வேத பவன், ஆயுர்வேத்கிரி ஹெர்பல்ஸ், அமர்பள்ளி புட்ஸ், பமீர் அக்ரோ வென்சர்ஸ், டீசன்ட் எண்டர்பிரைசஸ் போன்ற பல்வேறு நிறுவனங்களின் தேவையை பூர்த்தி செய்யக் களப்பணிகளைச் செய்து வருகிறது. மேலும், பீகார் அரசின் விவசாயத் துறை எங்கெல்லாம் பலவீனமாக இருக்கிறதோ, அங்கெல்லாம் களப்பணிகளை மேற்கொள்ள பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளன.

ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கிக்கு உதவியாக ஆந்திரா, சட்டீஸ்கர், ஒரிசா மற்றும் அரியானா மாநிலங்களில் கால்நடைகளுக்கான ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை மாநிலங்களின் கால்நடை பராமரிப்புத் துறை நடைமுறைப்படுத்திக் கொடுக்கிறது. மாவட்டந்தோறும் மைய அரசு நிதியுதவியுடன் செயற்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையங்கள், தனியார் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. இந்நிலையங்கள் மான்சாண்டோ-மஹிகோவின் பி.டி. இரக பருத்தியை விவசாயிகள் மத்தியில் பிரபலமாக்கும் வேலையைச் செய்ய ஆரம்பித்துள்ளன. இதற்கான களப்பணிகள் நடந்தேறிய வண்ணம் உள்ளன. பஞ்சாப் மாநிலத்தின் விவசாயப் பல்கலைக்கழகம் மற்றும் விவசாயத் தொழில்நிறுவன சங்கத்தின் உதவியுடன் பெப்சி குளிர்பான நிறுவனம், ஒப்பந்த தக்காளி விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறது.

இப்படி நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ''வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை'' திட்டம், தரகு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. இத்திட்டத்தில் இணைக்கப்படும் விவசாயிகளோ சுதந்திரத்தை இழந்து ஒப்பந்த விவசாயக் கொத்தடிமைகளாக மாற்றப்படுகின்றனர். என்ன விளைவிக்க வேண்டும்; எவ்வளவு விளைவிக்க வேண்டும்; எப்படி விளைவிக்க வேண்டும்; என்ன விலைக்கு விற்கலாம்; எங்கு விற்கலாம் - என அனைத்தையும் பன்னாட்டு நிறுவனங்களே தீர்மானிக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களின் தேவையை பூர்த்தி செய்ய அரசின் விவசாயத் துறை ''கமிசன் வாங்காத ஏஜெண்டு''களாகச் செயல்படுகிறது.

இவைகளெல்லாம் ஒருபுறமிருக்க, மைய, மாநில வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆய்வுப் பணிகள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. நம் நாட்டு ஆய்வு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கும் உலக வங்கி, அமெரிக்க நிதி உதவி (USAID), போர்டு மற்றும் ராக்பெல்லர் பவுண்டேசன்கள், பன்னாட்டு வளர்ச்சித் துறை மற்றும் பல பன்னாட்டு நிறுவனங்களே வேளாண் ஆய்வைத் தீர்மானிக்கின்றன. மேலும்,


படிப்பகம்

www.padippakam.com

பன்னாட்டு நிதியுதவியுடன் நடத்தப்படும் ஆய்வில் பங்கேற்று, பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புடன் நெருங்கிய உறவை உருவாக்கிக் கொள்வதை பெருமைக்குரிய செயலாகக் கருதுகிறார்கள், நம் நாட்டு விஞ்ஞானிகள். இதன் அடிப்படையில்தான், சிறு சலனம் கூட இல்லாமல் தமிழ்நாடு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகமானது, மாண்சான்டோ மற்றும் அமெரிக்க நிதி உதவி (USAID) ஆகியவற்றுடன் கூட்டு வைத்து பி.டி. கத்தரிக்காய்க்கான கள ஆய்வை மேற்கொண்டு வருகிறது.

இந்தப் பின்னணியில், ''வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை'' திட்டம் அனைத்து ஆய்வு நிறுவனங்களின் பணிகள் ''சந்தையின் தேவை''யைப் பூர்த்தி செய்வதை நோக்கி இருக்க வேண்டும் என்று வரையறுக்கிறது. தற்சமயம் ஆய்வு நிறுவனங்களின் பணி என்பது ஏகாதிபத்தியங்களுக்கான சேவையாகத்தான் உள்ளது. ''வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை'' திட்டத்தின் வழியாக ஏகாதிபத்தியங்களுக்கான சேவையை மேலும் தீவிரப்படுத்தி வருகிறது. இதற்காக அரசு ஆய்வு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களுடன் கூட்டாகச் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

அன்று, இதே ஒப்பந்த விவசாயத் திட்டப்படி ஆங்கிலேய காலனியாதிக்கவாதிகள் வங்காளத்து விவசாயிகளையும் சந்தால் பழங்குடியினரையும் அவுரிச் செடி பயிரிடுமாறு கட்டாயப்படுத்தினார்கள். அது, காலனியாதிக்கம். இன்று, ஒப்பந்த விவசாயத் திட்டத்தின்படி, பன்னாட்டுக் கம்பெனிகளின் தேவைக்கேற்ப பயிரிடுமாறு இந்திய விவசாயிகள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இது, மறுகாலனியாதிக்கம்.

இத்திட்டத்தின் விளைவாக, நாட்டின் விவசாயமே பன்னாட்டு முதலாளிகளின் இரும்புப் பிடிக்குள் சிக்கிவிடும். சுயசார்பு முற்றாக அழிந்து, நாட்டின் ஒவ்வொரு மாவட்டமும் ஒற்றைப் பயிரை விளைவிக்கும் மாவட்டமாக மாற்றப்பட்டு விடும். கால்நடை வளர்ப்பு அழியும். நிலம் மலடாகும். எதைப் பயிரிடுவது என்பதைப் பன்னாட்டு முதலாளிகளே தீர்மானிப்பதால், நாட்டின் உணவுத் தன்னிறைவு அடியோடு அழியும்.

● சுடர்

## கொசாவோ:

# தேசிய இன விடுதலையா? ஏகாதிபத்தியங்களின் ஏவலாட்சியா?

**செர்பிய இனவெறி ஆதிக்கத்திலிருந்து மீள, அமெரிக்க-ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் தயவில் தன்னைச் சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்டுள்ள கொசாவோவின் விடுதலை உண்மையானதா? ஊனமானதா?**

ஐரோப்பா கண்டத்தின் பால்கன் பிராந்தியத்திலுள்ள சின்னஞ்சிறு நாடான செர்பியாவிலிருந்து, அதன் தெற்கு மாநிலமான கொசாவோ கடந்த பிப்ரவரி 17-ஆம் நாளன்று தன்னைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளது. இதனை அமெரிக்காவும் சில ஐரோப்பிய நாடுகளும் வரவேற்று, கொசாவோ நாட்டை அங்கீகரித்துள்ளன. அதேநேரத்தில் ரஷ்யாவும் செர்பியாவும் கொசாவோவின் தனிநாடு பிரகடனத்துக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதோடு, அத்தனி நாட்டை அங்கீகரிக்க மறுத்துள்ளன. இதேபோல, சிங்கள இனவெறி பிடித்த இலங்கை பாசிச அரசும் கொசாவோ விடுதலைக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. சீனா, இந்தியா ஆகிய நாடுகள் கொசாவோவை அங்கீகரிக்கத் தயக்கம் காட்டுகின்றன. மறுபுறம், சில தமிழினவாதிகள் கொசாவோவின் விடுதலையையும், தனிநாடு பிரகடனத்தையும் வரவேற்று ஆதரிக்கின்றனர்.

செர்பியாவின் இனவெறி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வந்த கொசாவோவின் விடுதலையைப் பாட்டாளி வர்க்கம் ஆதரிப்பதா, அதன் தனிநாடு பிரகடனத்தை வரவேற்பதா என்ற விவாதத்துக்குள் நுழையும் முன், கொசாவோ பற்றிய எதார்த்த நிலைமைகளை - வரலாற்றுப் பின்னணிகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இரண்டாம் உலகப் போரின்போது பாசிச இட்லரின் ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்பற்றாளர்களும் ஒன்றிணைந்து போராடி, அளப்பரிய தியாகத்துடன் நாட்டு விடுதலையைச் சாதித்து, புதிய முற்போக்கான அரசுகளை நிறுவினர். இவற்றில் செக்கோஸ்லாவாக்கியா நாடானது செக், ஸ்லாவாக் எனுமிரு

**கொதிக்கும் எண்ணெய்ச் சட்டியிலிருந்து தப்பிக்க எரியும் அடுப்பில் விழுந்த அவலம்: 'சுதந்திர' நாடாக அறிவிக்கப்பட்டதை வரவேற்றுக் கொண்டாடும் கொசாவோ இன மக்கள்.**





படிப்பகம்

www.padippakam.com




தேசங்களைக் கொண்ட அரசாக இருந்தது. யூகோஸ்லாவிய நாடானது. செர்பியா, குரேஷியா, ஸ்லோவேனியா, மாசிடோனியா, மாண்டி நிக்ரோ, போஸ்னியா ஹெர்சகோவினா, கொசாவோ ஆகிய தேசிய இனங்களைக் கொண்ட நாடாக உருவானது.

1990-களில் சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்து, அமெரிக்க வல்லரசின் தலைமையிலான ஏகாதிபத்திய உலகின் சூழ்ச்சிகள் - சதிகளால் பல தேசிய அரசுகளாகப் பிளவுபட்டுச் சிதைந்தது. அதன் தொடர்ச்சியாக செக்கோஸ்லாவாக்கியா நாடானது, செக், ஸ்லோவாக் எனுமிரு நாடுகளாக உடைந்தது. பல தேசிய இனங்களின் கூட்டரசாக உருவான யூகோஸ்லாவியாவில் செர்பிய ஆதிக்கம் படிப்படியாக அதிகரித்ததாலும், பெயரளவிலான சோசலிச நாடுகள் கூட நீடிக்கக் கூடாது என்ற ஏகாதிபத்திய உலகின் சூழ்ச்சிகள் - சதிகளுக்கேற்ப தேசிய இன வெறி தூண்டிவிடப்பட்டதாலும், ஐக்கியப்பட்ட அந்நாடு பல கூறுகளாகச் சிதைந்து இன்று உலக வரைபடத்தில் யூகோஸ்லாவியா என்ற நாடே காணாமல் போய்விட்டது.

1991-ஆம் ஆண்டில் யூகோஸ்லாவியாவிலிருந்து ஸ்லோவேனியா மற்றும் குரேஷியா ஆகிய இரு தேசிய இனங்கள் பிரிந்து தனி அரசுகளாயின. 1992-இல் போஸ்னியா ஹெர்சகோவினா பிரிந்தது. அதைத் தொடர்ந்து, 2007-இல் மாண்டி நிக்ரோ தன்னைத் தனிநாடாக அறிவித்துக் கொண்டது. எஞ்சிய பகுதிகள் செர்பியா என்றழைக்கப்பட்டு வந்தது. தற்போது செர்பியாவிலிருந்து பிரிந்து, கொசாவோ தன்னைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளது.

பல தேசிய இனங்களின் ஐக்கியப்பட்ட ஒன்றியமாக யூகோஸ்லாவியா விளங்கிய காலத்திலேயே தமது மேலாதிக்கத்தைத் திணித்து வந்த செர்பியர்கள், இதர தேசிய இனங்கள் பிரிந்து செல்லத் தொடங்கியதும் அப்பட்டமான கிறித்துவ மதவெறியையும் செர்பிய பெருந்தேசிய இன வெறியையும் கட்டவிழ்த்து விட்டு சிறுபான்மைத் தேசிய இனங்களின் மீது போர் தொடுத்து ஒடுக்கினர். ''அகண்ட செர்பியா'' எனும் தேசிய இனவெறியோடு செர்பியர்கள் நடத்திய காட்டுமிராண்டிதனத்தால் யூகோஸ்லாவியா இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது. செர்பியாவின் ஒரு மாகாணமாக இருந்த கொசாவோவில், செர்பிய இனவெறி ஒடுக்குமுறையை எதிர்த்து அம்மக்கள் ஆயுதமேந்திப் போராடி வந்தனர்.

கொசாவோவின் எல்லையிலுள்ள அல்பேனிய மக்களே கொசாவோவில் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் இனத்தால் அல்பேனியர்கள்; மதத்தால் இஸ்லாமியர்கள். எனவே, செர்பிய இனவெறி ஒடுக்குமுறையிலிருந்து மீள, அல்பேனிய நாட்டுடன் கொசாவோ மாகாணத்தை இணைக்கக் கோரி போராடி வந்தனர். பால்கன் பிராந்தியத்தில் காலூன்றி தனது மேலாதிக்கத்தை நிறுவத் துடித்துக் கொண்டிருந்த அமெரிக்க வல்லரசு, கொசாவோ மக்களின் போராட்டத்தை ஆதரித்து ஊக்குவித்தது. ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் பாலஸ்தீனத்திலும் முஸ்லீம் மக்களை அன்றாடம் கொன்று குவித்து வரும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள், கொசாவோவில் அல்பேனிய இன முஸ்லீம்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்தனர்.

கொசாவோ மக்களைக் காப்பது என்ற பெயரில் ஏகாதிபத்திய கூட்டமைப்பின் (நேட்டோ) படைகள் குவிக்கப்பட்டன. மனித உரிமைகளை மீறிவிட்டதாகக் குற்றம் சாட்டி செர்பியா மீது குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்திப் போர் தொடுத்தன. கொசாவோவிலிருந்து செர்பியப் படைகள் வெளியேற்றப்பட்டு, ஏகாதிபத்தியங்களின் கைப்பாவையான ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வை திணிக்கப்பட்டது. கொசாவோ விடுதலைப் படை, அமெரிக்க விசுவாசக் கூலிப் படையாகச் சீரழிக்

**கொசாவோ விடுதலைப் படை: அமெரிக்காவால் சீரழிக்கப்பட்ட படை.**




படிப்பகம்

www.padippakam.com

கப்பட்டது. கொசாவோவில் அமெரிக்க இராணுவத் தளம் நிறுவப்பட்டது. அமெரிக்க-ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் போர்த் தாக்குதலில் செர்பியா மீண்டெழ முடியாதபடி நிலைகுலைந்து போனது.

இதன் தொடர்ச்சியாகவே கொசாவோ விடுதலைப் படையின் தலைவரான ஆசிம்தாசி, கடந்த பிப்ரவரி 17-ஆம் நாளன்று கொசாவோவின் தலைநகர் பிரிஸ்தினாவில் நடந்த நாடாளுமன்றக் கூட்டத்தில், கொசாவோவைத் தனியொரு நாடாக பிரகடனப்படுத்தியுள்ளார். இதனை அமெரிக்காவும் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலான ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளும் அங்கீகரித்துள்ளன. அவற்றின் நோக்கம், கொசாவோ மக்களின் நியாயமான சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து ஆதரிப்பதல்ல; மாறாக, தமது மேலாதிக்கத்தை நிறுவுவதேயாகும்.



**கொசாவோ சுதந்திரக் கொண்டாட்டத்தில் கோலோச்சும் அமெரிக்கக் கொடிகள்: துயரத்தின் முடிவா? தொடக்கமா?**

இதற்கேற்ப கொசாவோ நாடாளுமன்றத்துக்குப் பெயரளவுக்கே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. முக்கிய விவகாரங்கள் அனைத்தையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அவைதான் முடிவு செய்யும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 2000 பேர் கொண்ட படையை அனுப்பி கொசாவோவைப் 'பாதுகாத்து கண்காணிக்கும்'. இதுதவிர, 16,000-க்கும் மேற்பட்ட அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியப் படைகள் (நேட்டோ) கொசாவோவில் நிலை கொண்டு அந்நாட்டைப் 'பாதுகாக்கும்!'

கொசாவோ தனிநாடாக அறிவிக்கப்பட்டதும், அம்மாகாணத்தின் வடபகுதியிலுள்ள செர்பிய இனத்தினர் இதனை ஏற்க மறுத்து, தாங்கள் செர்பியாவுடன் இணையப் போவதாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அதனை ஆதரிக்கும் செர்பியாவுக்கு ரஷ்ய ஏகாதிபத்தியம் துணையாக நிற்கிறது. செர்பியா, தனது இழந்த மாகாணமாகிய கொசாவோவை மீட்கப் போர் தொடுக்க முனையும். அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் துணையோடு கொசாவோ தனது தனிநாடு நிலையைத் தக்கவைத்துக் கொள்ளப் போராடும். ஆக, மீண்டும் பால்கன் பிராந்தியத்தில் இரத்த ஆறு ஓடப் போவது நிச்சயமாகி விட்டது.

அல்பேனியாவுடன் இணைய வேண்டும் என்பதுதான் கொசாவோ மக்களின் விருப்பமாகவும் போராட்டமாகவும் இருந்தது. தனது மேலாதிக்க நோக்கங்களுக்கு இது ஏற்புடையதாக இல்லாததால், கொசாவோவை தனிநாடாக்கியுள்ளது அமெரிக்கா. மேலும் கொசாவோ மக்கள் இதுவரை பயன்படுத்தி வந்த கொடியைக்கூட ஐரோப்பிய ஒன்றியம் மாற்றியமைத்துள்ளது. ஆக, கொசாவோ ஒரு சுதந்திர நாடல்ல; அது ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்துக்கான களம்; அவற்றின் மேலாதிக்க ஆட்டத்துக்கான பகடைக்காய் என்பது தெளிவாகி விட்டது.

இருப்பினும், இது கொசாவோ தேசிய இனத்தின் விடுதலை என்று ''சமூகநீதித் தமிழ்த் தேசம்'' எனும் தமிழினவாத பத்திரிகை குதியாட்டம் போடுகிறது. ''எப்படியோ, செர்பியர்களின் கொடுமைகளிலிருந்து கொசாவோ முஸ்லீம்கள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள் என்பதே ஆறுதல்'' என்று இங்குள்ள இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கொசாவோ தனிநாடாகியுள்ளதை வரவேற்கிறார்கள். இப்படித்தான் அமெரிக்க ஏற்பாட்டின்படி, இந்தோனேஷியாவிலிருந்து கிழக்கு திமோர் தனிநாடாக 'விடுதலை' அடைந்ததையும் இனவாதிகள் வரவேற்று ஆதரித்தனர்.

ஆனால், இவையெல்லாம் தேசிய இன விடுதலையோ, சுயநிர்ணய உரிமையோ அல்ல. மாறாக, இத்தகைய 'சுதந்திரம்', 'விடுதலை'களால் அமெரிக்க-ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் சீவி சிங்காரிக்கப்பட்டு, வலுப்படுத்தப்பட்டுள்ளன; அவற்றின் மேலாதிக்கத்துக்கு உதவுபவையாக அமைந்துள்ளன. ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்தக் கூடிய, அதன் மேலாதிக்கத்துக்கு புறக்காவல் அரண்களாக அமைந்துள்ள இத்தகைய 'விடுதலை'களை ஆதரிப்பதானது, தேசிய இன விடுதலைக்கே எதிரான ஏகாதிபத்திய கைக்கூலித்தனமாகும். தேசிய இனங்களின் உரிமையையும் ஜனநாயகத்தையும் மதிக்கும் சைவப்புலியாக ஏகாதிபத்தியம் மாறிவிட்டதாகக் காட்டி ஏய்க்கும் துரோகத்தனமாகும்.

மேலும் தனது பெருந்தேசிய இனவெறி நலன்களுக்கு எதிரானது என்பதாலேயே கொசாவோ விடுதலையை சிறீலங்கா அரசு எதிர்க்கிறது. சிங்கள இனவெறி பாசிச ஒடுக்குமுறையை எதிர்ப்பது என்ற பெயரால், கொசாவோவின் 'விடுதலை'யை ஆதரிப்பது முற்போக்கானதாகி விட்டது.

பொன் விலங்கைப் பூட்டிக் கொண்டாலென்ன, எப்படியோ இரும்பு விலங்கு போனால் போதும் என்று நியாயவாதம் பேசி ஏகாதிபத்திய வலையில் சிக்கிக் கொள்வது தேசிய இன விடுதலையாகாது; ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று போராடாமல், எந்தவொரு தேசிய இன விடுதலையையும் சாதிக்கவும் முடியாது. இந்த அரிய படிப்பினைகளை உலகிற்கு உணர்த்திவிட்டு, அமெரிக்க-ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் கண்காணிப்புப் பிடியில் சிக்கித் தவிக்கிறது, கொசாவோவின் 'தேசிய இன விடுதலை'!

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

## திபெத்திய கலகம்:

# தேசிய இனவிடுதலைப் போரா?

**கடந்த மார்ச் இறுதியில் திபெத்தில் நடந்த கலகம், சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் அல்ல. சீன ஆட்சியாளர்கள் மீதான திபெத்திய மக்களின் அதிருப்தியை பிற்போக்கு சக்திகள் அறுவடை செய்து கொண்டு ஆதாயமடைகின்றன.**

கடந்த மார்ச் மாதத்தில், உலகத்தின் கூரை என்றழைக்கப்படும் திபெத்தில் சீன ஆட்சியாளர்களுக்கு எதிராக வெடித்த கலவரம், இதுவரை கண்டிராத மூர்க்கத்தனத்துடன் நடந்துள்ளது. இக்கலவரத்தை ஒடுக்க சீன இராணுவம், போராடிய திபெத் மக்களையும் புத்த மத குருமார்களையும் மிருகத்தனமாகத் தாக்கியது என்றும் மீண்டும் கலவரம் வெடிக்கும் சூழல் நிலவுவதாகவும் செய்திகள் வருகின்றன. சீன இராணுவம் நடத்திய தாக்குதலிலும் துப்பாக்கிச் சூட்டிலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

திபெத்தின் புத்தமத அரசரான தலாய்லாமா, 1959 மார்ச் 10-ஆம் நாளன்று சீனாவின் 'அடக்குமுறை'யிலிருந்து தப்பித்து இந்தியாவில் தஞ்சம் புகுந்த நாளை, 'திபெத்திய விடுதலைக்கான எழுச்சி நாளாக' அவரது விசுவாசிகள் கடைபிடித்து வருகின்றனர். சீனாவில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடக்கவிருப்பதால், உலகின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் தலாய்லாமாவின் ஆதரவாளர்கள் மார்ச் 10-ஆம் தேதி முதலாக போராட்டங்களைத் தீவிரமாக நடத்தி வந்தனர். இதில் திபெத்திய உழைக்கும் மக்களும் கணிசமாகப் பங்கேற்றுள்ளனர். இப்போராட்டங்கள், அரசு அலுவலகங்களும் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டு மிகப் பெரிய வன்முறைக் கலவரமாகத் தீவிரமடைந்ததும், சீன அரசு இராணுவத்தை ஏவிக் கொடூரமாக ஒடுக்கியுள்ளது.

இந்தக் கலவரத்துக்கு தலாய்லாமாதான் காரணம் என்று குற்றம் சாட்டுகின்றனர், சீனாவின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள். திபெத் விவகாரத்தில் பொறுமையைக் கடைபிடிக்குமாறு உபதேசிக்கிறது, அமெரிக்கா. இந்திய அரசோ, நீண்டகாலமாகவே திபெத், சீனாவின் ஓர் அங்கம்தான் என்று ஒருபுறம் கூறிக் கொண்டே, மறுபுறம் தலாய்லாமாவை ஆதரித்து சீனாவுக்கு எதிரான சீர்குலைவு வேலைகளை இரகசியமாகச் செய்து வருகிறது. அகண்ட பாரத லட்சியத்துடன் இந்திய தேசிய இனங்களை துப்பாக்கி முனையில் ஒடுக்குவதையே நோக்கமாகக் கொண்ட இந்துவெறி பாசிஸ்டுகளின் தலைமைத் தளபதியான அத்வானி, திபெத் தேசிய இன மக்களின் மீது சீன அரசு காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையை ஏவியுள்ளதாகக் கூப்பாடு போடுகிறார். திபெத், சீனாவின் ஓர் அங்கம்தான் என்று கூறும் இடது-வலது போலி கம்யூனிஸ்டுகள், தற்போதைய கலவரம் சீனாவின் ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் பிரிவினைவாத சதி என்று சாடி, சீன அரசின் அடக்குமுறையை நியாயப்படுத்துகின்றனர். தமிழினப் பிழைப்புவாதிகளோ, திபெத்திய போராட்டத்தைத் தேசிய இன உரிமைப் போராட்டமாகச் சித்தரித்து சீன அரசின் அடக்குமுறையை எதிர்க்கின்றனர்.

எங்கெல்லாம் அடக்குமுறைக்கெதிராக மக்கள் போராடுகிறார்களோ, அங்கெல்லாம் அப்போராட்டத்தை ஆதரிப்பது புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் கடமை என்ற அடிப்படையில், திபெத்தில் நடக்கும் போராட்டத்தை நாம் ஆதரிப்பதா? அல்லது இது பிளவுவாத - பிரிவினைவாத சதிச் செயல் என்று சீன அரசின் அடக்குமுறையை நியாயப்படுத்துவதா?

சீனாவில் முதலாவதாக தோழர் மாவோ தலைமையிலான கம்யூனிஸ்டுகளின் ஆட்சி நடந்தது. தற்போது, கம்யூனிச முகமூடி அணிந்த அதிகார வர்க்க முதலாளித்துவ ஆட்சி நடக்கிறது.

சீனாவின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் உலகமயமாக்கலுக்கு ஏற்ப உழைப்புச் சுரண்டலைத் தீவிரப்படுத்தி வருவதாலும், ஆட்குறைப்பு - தகுதியற்றவர்களை நீக்குவது முதலான நடவடிக்கைகளாலும் அந்நாட்டில் வறுமையும் வேலையின்மையும் பெருகி வருகிறது. தொழிற்கூடங்களில் கொத்தடிமைத்தனம் தலைவிரித்தாடுகிறது. விவசாயம் நாசமாக்கப்பட்டு, ஏற்றுமதி அடிப்படையான விவசாய உற்பத்தி திணிக்கப்பட்டுள்ளதால், வேலையிழந்து வாழ்விழந்த விவசாயிகள் பெருநகரங்களில் குவிகின்றனர். விவசாயிகளும் தொழிலாளர்களும் கேடுகெட்ட சீன முதலாளித்துவக் கொடூ...

**சீனாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை புறக்கணிக்கக் கோரியும், திபெத்தை விடுதலைச் செய்யக் கோரியும் இந்தியாவில் வாழும் திபெத்திய இளைஞர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.**






படிப்பகம்

www.padippakam.com



திபெத் தலைநகர் லாசாவில் இராணுவ வாகனங்களைத் தீ வைத்து - கல்லெறித் தாக்குதல் நடத்தும் தலாய்லாமாவின் ஆதரவாளர்கள்.

கோலாட்சிக்கு எதிராக தன்னெழுச்சியான கலகங்கள் - கிளர்ச்சிகளில் ஈடுபடுவதும், இவற்றை சீன முதலாளித்துவ ஆட்சியாளர்கள் மிருகத்தனமாக ஒடுக்குவதும் தொடர்கிறது.

சீனாவின் மைய மாநிலங்களிலேயே இந்த நிலைமை என்றால், ஒப்பீட்டு ரீதியில் பின்தங்கிய திபெத் பிராந்தியத்தின் நிலைமை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. உலகமயமாக்கலுக்கு ஏற்ப திபெத்தில் பெருந்திட்டங்களும், சுற்றுலா-போக்குவரத்துத்துறை வளர்ச்சியும் நடந்துள்ள போதிலும் அவற்றின் பலன்கள் மக்களுக்கானதாக அல்லாமல், சீன முதலாளித்துவ கும்பலும் பன்னாட்டு ஏகபோக கும்பலும் ஆதாய மடைவதாகவே உள்ளன. உலக முதலாளித்துவத்தின் நலன்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப திபெத்தின் உற்பத்தியும் பொருளாதாரமும் கலாச்சாரமும் மாற்றப்பட்டு வருவதால், அங்கு வறுமையும் வேலையின்மையும் ஏற்றத்தாழ்வுகளும் சமூக முறைகுலைவுகளும் தீவிரமாகி வருகின்றன.

இந்நிலையில், திபெத்திய மக்களின் அதிருப்தியைச் சாதகமாக்கிக் கொண்டு, எதிர்ப்புரட்சி லாமா கும்பல் இழந்த சொர்க்கத்தை மீட்க, சீன அரசின் ஒடுக்குமுறை எதிர்ப்பு எனும் முகமூடியுடன் கலகத்தில் இறங்கியது. இதற்குமுன் நடந்த கலகங்களைப் போலின்றி, கடந்த மார்ச் இறுதியில் திபெத் தலைநகர் லாசாவில் நடந்த கலகத்தில் கணிசமான அளவுக்கு உழைக்கும் மக்களும் சீன அரசுக்கெதிரான போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். இது, உலக முதலாளித்துவத்தின் தேவைகளுக்கேற்ப திபெத்தின் பொருளாதாரமும் கலாச்சாரமும் சிதைக்கப்படுவதால் ஏற்பட்டுள்ள அதிருப்தியும் குமுறலும்தானே தவிர, இது திபெத்தின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் அல்ல. சீன முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டங்களைக் கட்டியமைத்து தலைமையேற்க அங்கு புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சி இல்லாத நிலையில், திபெத்திய மக்களின் அதிருப்தியை பிற்போக்கு சக்திகள் அறுவடை செய்து கொண்டு, தமது நோக்கங்களுக்கு ஏற்பத் திசைதிருப்பி ஆதாயமடைகின்றன.

தேசிய இன விடுதலைக்கான நோக்கத்துடன் செயல்படும் அமைப்பு எதுவும் திபெத்தில் இல்லை. தற்போதைய கலகத்தை ஏகாதிபத்திய கைக்கூலிகளான தன்னார்வக் குழுக்களே கட்டியமைத்து வழிநடத்தியுள்ளன. திபெத்திய இளைஞர் காங்கிரசு, திபெத்திய மகளிர் கழகம், கு-சு-சும் திபெத்திய இயக்கம் (முன்னாள் அரசியல் கைதிகளின் இயக்கம்), திபெத்திய தேசிய ஜனநாயகக் கட்சி, சுதந்திர திபெத்துக்கான (இந்தியாவிலுள்ள) மாணவர் இயக்கம் - ஆகிய ஐந்து பெரிய தன்னார்வ நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்து நன்கு திட்டமிட்டு இக்கலகத்தை நடத்தியுள்ளன. சீனாவில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடக்கும் தருணத்தில் இதைச் செய்ததன் மூலம் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன.

ஒருபுறம், கம்யூனிச முகமூடி அணிந்த சீன முதலாளித்துவ ஆளும் கும்பல். மறுபுறம் தேசிய இன முகமூடி அணிந்த திபெத்திய பிற்போக்குக் கும்பல். இவற்றிலே எந்தத் தரப்பின் நியாயத்தை ஏற்க முடியும்? அரசு எந்திரத்தைக் கையில் வைத்துள்ள சீன ஆளும் கும்பலின் மிருகத்தனமான ஒடுக்குமுறையை எதிர்க்க வேண்டும்; ஏனென்றால், அதுதான் மிகக் கொடிய அரசு பயங்கரவாத அடக்குமுறை என்று மதிப்பிட்டு, திபெத்திய பிற்போக்குக் கும்பலின் எதிர்ப்புரட்சி கலகத்தை நியாயப்படுத்த முடியுமா? இந்தியாவாலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தாலும் ஆதரித்து ஊட்டி வளர்க்கப்படும் கைக்கூலி லாமா கும்பலை தேசிய இனப் போராளிகளாகக் கருத முடியுமா?

முடியாது. இரண்டுமே ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்யக்கூடிய, ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்தக் கூடிய பிற்போக்குக் கும்பல்கள்தாம். அவற்றிலே இடதுசாரி-வலதுசாரி, முற்போக்கு-பிற்போக்கு என்று எடைபோட்டு பார்த்து எந்தத் தரப்பையும் ஆதரிக்க முடியாது.

திபெத்திய லாமா கும்பலின் கலகத்தைப் போலவே 1980-களில் பஞ்சாபில் பிந்தரன்வாலே தலைமையிலான சீக்கிய மதவெறி பயங்கரவாத கும்பல், தேசிய இன முகமூடியுடன் இந்திய அரசுக்கு எதிராக பயங்கரவாதத் தாக்குதலில் இறங்கியது. அன்று பிரதமராக இருந்த பாசிச இந்திரா, அரசு பயங்கரவாதத்தை ஏவி அக்கும்பலை மிருகத்தனமாக ஒடுக்கினார். இவற்றிலே எந்தத் தரப்பின் நியாயத்தை ஏற்க முடியும்? இரண்டுமே பாசிச பிற்போக்குக் கும்பல்கள்; இவ்விரு தரப்பையும் நிராகரித்து, இருதரப்புக்கும் எதிராகப் போராடுவதன் மூலமே ஜனநாயகத்தையும் நியாயமான தேசிய இன உரிமையையும் நிலைநாட்ட முடியும் என்ற நிலைப்பாட்டுடன் அன்று கம்யூனிசப் புரட்சியாளர்கள் பிரச்சார-போராட்டங்களில் ஈடுபட்டனர். ஆனால் சில போலி புரட்சியாளர்களும் சில இனவாதக் குழுக்களும் காலிஸ்தான் பயங்கர

ஒருபுறம், கம்யூனிச முகமூடி அணிந்த சீன முதலாளித்துவ ஆளும் கும்பல். மறுபுறம் தேசிய இன முகமூடி அணிந்த திபெத்திய பிற்போக்குக் கும்பல். இரண்டுமே ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்யக்கூடிய, ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்தக் கூடிய பிற்போக்குக் கும்பல்கள்தாம். அவற்றிலே இடதுசாரி – வலதுசாரி, முற்போக்கு–பிற்போக்கு என்று எடைபோட்டு பார்த்து எந்தத் தரப்பையும் ஆதரிக்க முடியாது.


படிப்பகம்

www.padippakam.com

வாத கும்பலின் கலகத்தை தேசிய இன உரிமைக்கான போராட்டமாகச் சித்தரித்து, அதை ஆதரித்து, அரசு பயங்கரத்தை மட்டும் எதிர்த்தன. பிற்காலத்தில், தமது நிலைப்பாட்டை இரகசியமாகக் கைகழுவின.

இதேபோல, சீனாவில் 1989-இல் "ஜனநாயக ஆட்சி முறை"யைக் கோரி மாணவர்கள் போராடியபோது, அதை சீன முதலாளித்துவ ஆட்சியாளர்கள் மிருகத்தனமாக ஒடுக்கியபோது, சீன மாணவர் போராட்டம் நியாயமானது, ஜனநாயக உரிமைகளுக்கானது என்று பத்திரிகைகளும் குட்டி முதலாளித்துவவாதிகளும் துதிபாடினர். ஆனால் சீன மாணவர் போராட்டம் மக்கள் ஜனநாயகத்துக்கானதல்ல; கேடுகெட்ட முதலாளித்துவ ஜனநாயகத்துக்கானதுதான். ஏகாதிபத்தியங்களின் ஆதரவுடன் அப்பட்டமான முதலாளித்துவத்தை நிறுவத் துடிக்கும் சீன ஆளும் கும்பலின் ஒரு பிரிவும், அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நிலைநாட்டியுள்ள போலி கம்யூனிச ஆளும் கும்பலும் நடத்திய மோதல்தான் சீன மாணவர் போராட்டமாக வெளிப்பட்டது. இரு தரப்புமே முதலாளித்துவத்தின் இரு வேறுபட்ட கும்பல்களாக உள்ள நிலையில் அவற்றில் எதை பாட்டாளி வர்க்கம் ஆதரிக்க முடியும்? இவ்விரு தரப்பையும் நிராகரித்து, இரு தரப்புக்கும் எதிராகப் போராடுவதன் மூலமே மக்கள் ஜனநாயகத்தையும் சோசலிசத்தையும் சீன மக்கள் சாதிக்க முடியும் என்ற நிலைப்பாட்டையே அன்று கம்யூனிசப் புரட்சியாளர்கள் மேற்கொண்டனர்.



இந்தியாவில் வாழும் திபெத்திய புத்தமதத் துறவிகள் சீன அரசைக் கண்டித்து, இமாச்சலப் பிரதேசத்திலுள்ள தர்மசாலாவில் இருந்து தில்லி வரை நடத்திய பாத யாத்திரை: திபெத்தியர்களின் போராட்டங்களுக்கு ஆதரவு கொடுக்கும் இந்தியா, ஈழ ஆதரவுப் போராட்டங்களை ஒடுக்குகிறது.

திபெத்தில் தற்போது நடந்துள்ள கலகமும் அதற்கெதிராக சீன அரசின் ஒடுக்குமுறையும் இந்த வகைப்பட்டதுதான். இருப்பினும் இதற்கு தேசிய இனச் சாயம் பூசி இனவாத பிழைப்புவாதிகள் ஆதரிக்கக் கிளம்பியுள்ளனர். அதிலும் தலாய்லாமா கும்பலமானது அப்பட்டமான ஏகாதிபத்தியக் கைக்கூலி கும்பல் என்று உலகெங்கும் அம்பலமான பின்னரும், வலிந்து சென்று அக்கும்பலை ஆதரிக்கின்றனர். இதற்காக, தோழர் மாசேதுங்கை ஆக்கிரமிப்பாளனாகக் கொச்சைப்படுத்தி இழிவுபடுத்தவும் அவர்கள் தயங்கவில்லை. வரலாற்றுப் புரட்டுகளுடன், திபெத் போராட்டத்தை ஆதரிப்பதுதான் மார்க்சிய-லெனினியம் என்று வேறு ஏய்க்கக் கிளம்பியுள்ளனர்.

1949-இல் சீனாவில் தோழர் மாசேதுங் தலைமையில் புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்று, நிலப்பிரபுத்துவமும் ஏகாதிபத்தியமும் தூக்கியெறியப்பட்டு உழைக்கும் மக்கள் விடுதலை அடைந்தனர். உழைக்கும் மக்களின் புதிய அரசியல் அதிகாரத்தைக் கொண்டு, நாட்டின் பல பகுதிகளில் நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மைக்கு எதிரான போராட்டங்களில் இறங்கி, விவசாயிகள் தமது புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவினர். சீனாவின் ஒரு பகுதியாக நீடித்து வந்த திபெத்தில், புத்தமத குருமார்களான லாமாக்களின் கொடூர கொத்தடிமைத்தனமான ஆட்சிக்கு எதிராக விவசாயிகள் போராடி வந்த சூழலில், இதர பகுதிகளில் நடந்ததைப் போலவே திபெத் மக்களின் விடுதலைக்கு 1950-இல் சீன செஞ்சேனை உதவியது. செஞ்சேனையின் உதவியோடு திபெத்திய மக்கள் லாமாக்களின் கொடுங்கோலாட்சியை வீழ்த்தி, அடிமைத்தளைகளை அறுத்தெறிந்தனர். அரண்டு போன லாமா கும்பல் 1951-இல் சீனத் தலைநகர் பெய்ஜிங்குக்கு ஓடிவந்து, சீன அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி திபெத்தில் அமைதியான முறையில் விவசாய சீர்திருத்தங்களைச் செய்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

ஆனால், மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற உள்ளிருந்தே சதிகளைச் செய்துவந்த லாமா கும்பல், 1959-இல் ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சி கலகத்தில் இறங்கியது. கம்யூனிஸ்டுகளைக் கொலை செய்தும், அரசு அலுவலகங்கள் - பள்ளிகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் வெறியாட்டம் போட்டது. அக்கும்பலை ஒடுக்க சீன செஞ்சேனை திபெத்தில் நுழைந்ததும், தலைமைக் குருவும் மத அரசருமான தலாய் லாமா தனது விசுவாசிகளுடன் இந்தியாவில் தஞ்சமடைந்தார். இன்னும் சில லாமா கும்பல்கள் மேற்கத்திய நாடுகளுக்குத் தப்பியோடின. திபெத்திய விவசாயிகள், விவசாயப் புரட்சிக் கமிட்டிகளை நிறுவி நிலச்சீர்திருத்தத்தையும் ஜனநாயகத்துக்கான இயக்கத்தையும் தொடர்ந்து நடத்தி மக்கள் அதிகாரத்தை நிறுவினர். 1965-இல் திபெத்திய தேசிய இனத்தின் விருப்பப்படி, சீனாவின் சுயாட்சி உரிமை பெற்ற பிரதேசமாக திபெத் மாறியது. 1970-களில் சீனாவில் நடந்ததைப் போலவே திபெத்திலும் கலாச்சாரப் புரட்சி நடந்து, திபெத்திய உழைக்கும் மக்கள் பழைய மரபுகள் - மூட நம்பிக்கைகளை விட்டொழித்து புத்த மடாலயங்களை பள்ளிக் கூடங்களாக மாற்றியமைத்தனர்.

மறுபுறம், இந்தியாவில் தஞ்சமடைந்த லாமா கும்பலுக்கு கொடைக்கானல், பெங்களூரு மற்றும் இமாசலப் பிரதேசம், உ.பி. மாநிலங்களில் எஸ்டேட்டுகளும் பழத்தோட்டங்களும் அளித்து ஆதரித்த நேரு அரசு, உ.பி.யின் தர்மசாலாவில் லாமா கும்பல் தனது தலைமை நிலையத்தை நிறுவிக் கொள்ளவும் உதவியது. தலாய்லாமா, "வெளிநாட்டில் வாழும் திபெத்திய அதிபர்" என்று பட்டம் சூட்டிக் கொண்டார். திபெத் விவகாரத்தை வைத்து கம்யூனிச சீனாவை சீர்குலைக்கத் துடித்த அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்தியங்



படிப்பகம்

www.padippakam.com

கள், லாமா கும்பலுக்கு இரகசியமாக ஆயுத உதவிகள் செய்து உசுப்பி விட்டன. 'ஆசிய ஜோதி' நேரு அரசு இதற்கு உடந்தையாகச் செயல்பட்டது. லாமா கும்பல் திபெத்தில் நுழைந்து பாலங்கள் - சாலைகளைக் குண்டு வீசித் தகர்ப்பது, பயிர்களை அழிப்பது முதலான நாசவேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது. அதன்பிறகு நேருவின் வாரிசு இந்திரா ஆட்சியில், அமெரிக்க கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. உதவியுடன் எஸ்.எஃப்.எஃப் என்ற பெயரில் சிறப்பு எல்லைக் காவல்படை உருவாக்கப்பட்டு, உ.பி. மாநிலம் டேராடூனுக்கு அருகே சக்ரடா மலைப்பகுதியில் லாமா கும்பலுக்கு இந்திய அரசு ஆயுதப் பயிற்சி அளித்து சீனாவுக்கு எதிராக ஏவியது. பாசிச இந்திரா கொலை மீதான விசாரணையின் போது, இந்த உண்மைகள் வெளிவந்து நாடெங்கும் நாறியது.

சீனாவில் கம்யூனிச கட்சியையும், ஆட்சியையும் உள்ளிருந்தே முதலாளித்துவ கும்பல் கைப்பற்றி, அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நிலைநாட்டிய பிறகு, 1979-இல் தலாய் லாமாவின் மூத்த சகோதரரான கியாலோதோண்டுப், சீன ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். 1980-களிலும் 1990-களிலும் பின்னர் 2002-இலும் இரு தரப்பும் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தின.

சீன முதலாளித்துவப் பாதையாளரான டெங்சியாவோ பிங் முன்வைத்த ''ஒருநாடு; இரு வேறு பொருளாதார முறைகள்'' என்ற கொள்கைப்படி, பிரிட்டிஷ் காலனியாக இருந்த ஹாங்காங்கும், போர்ச்சுகீசிய காலனியாக இருந்த மாகாவ்வும் முந்தைய தமது அரசியல்-பொருளாதார முறைகளுடன் சீனாவுடன் இணைந்துள்ளன. அதேபாணியில் திபெத்தும் நீடிக்க வேண்டும் என்று கோருகிறது, லாமா கும்பல். ஆனால், திபெத் நீண்ட நெடுங்காலமாக சீனாவுடன் ஐக்கியப்பட்டுள்ள நிலையில், அதை மீண்டும் ஐக்கியப்படுத்த வேண்டியதில்லை. மேலும், லாமாக்கள் கோரும் முந்தைய அரசியல்-பொருளாதார நிலைமை என்பது நிலப்பிரபுத்துவ கொடுங்கோலாட்சியாகும். அந்தக் காட்டுமிராண்டித்தனத்தை நாகரிக உலகம் ஏற்காது'' என்று சீன அரசு 2004-இல் வெளியிட்ட திபெத் பற்றிய வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

**எங்கேயாவது, யாராவது தேசிய இன உரிமை என்ற முகமூடியுடன் கிளம்பிவிட்டால் போதும், உடனே அதை ஆதரிக்க வேண்டும் என்பதுதான் தமிழின பிழைப்புவாதிகளின் கொள்கையாகி விட்டது. போதாக்குறைக்கு, இப்பிழைப்புவாதத்தையே மார்க்சிய-லெனினியம் என்று கூறி ஏய்க்கவும் இவர்கள் கிளம்பியுள்ளனர்.**

அதாவது, சீன அதிகார வர்க்க முதலாளித்துவ ஆட்சியாளர்கள், அப்பட்டமான முதலாளித்துவ அரசியல் - பொருளாதார முறைகளை ஏற்கின்றனர். லாமாக்கள் கோரும் நிலப்பிரபுத்துவ கொடுங்கோன்மை அரசியல் - பொருளாதார முறைகளை ஏற்கத் தயாராக இல்லை.

''தனிநாடு'', ''சுதந்திர திபெத்'' கோரிக்கைகளைக் கைவிடுவதாக அறிவித்துள்ள தலாய்லாமா, சீனாவுடன் ஐக்கியப்பட்ட சுயாட்சி உரிமை கோருகிறார். அந்த சுயாட்சி என்பது சீன அரசின் தலையீடற்ற ஆட்சியதிகாரம் என்கிறார். அதாவது, நிதி, இராணுவம் முதலானவற்றில் சீன அரசுடன் ஐக்கியப்படும் அதேசமயம், ஆட்சியதிகாரம் தம்மிடமே இருக்க வேண்டும்; அரசு வடிவம் தம்மாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும் என்கிறார். இதுதவிர, குயின்ஹைய், கன்சு, சிச்சுவான், யுன்னான் மாநிலங்களில் திபெத்தியர்கள் வாழும் பகுதிகளை திபெத் சுயாட்சிப் பிரதேசத்துடன் இணைக்க வேண்டும் என்பது லாமாக்களின் கோரிக்கை. வரலாற்று ரீதியாக, திபெத் மொழி பேசும் இப்பகுதிகள் திபெத்திய ஆட்சியின் கீழ் இருந்ததில்லை என்றும், சீனாவிலுள்ள 50-க்கும் மேற்பட்ட சிறிய தேசிய இனங்கள் மொழி அடிப்படையில் தனித்தனி சுயாட்சிப் பிரதேசங்களைக் கோரினால் சீன சமுதாயத்தில் பிளவையும் மோதலையுமே ஏற்படுத்தும் என்றும் சீன அரசு இதனை ஏற்க மறுக்கிறது.

இவ்விரு தரப்புக்குமிடையே நிலவும் அதிகாரத்துக்கான இந்த தகராறு, அமெரிக்கா தலைமையிலான் ஏகாதிபத்தியங்களுக்கும் சீன முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்குமிடையிலான உறவைப் பொருத்து பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமாகத் தீர்க்கப்படலாம்; அல்லது பகை நிலைக்கும் செல்லலாம். இதிலே எந்தத் தரப்பு வெற்றி பெற்றாலும், அது ஏகாதிபத்திய உலகக் கட்டமைவைப் பலவீனப்படுத்தப் போவதில்லை; மாறாக, பலப்படுத்துவதாகவே உள்ளது.

எதிர்ப்புரட்சி பிற்போக்குக் கும்பலின் தலைவரான தலாய்லாமாவின் கைக்கூலித்தனத்திற்காக, ஏகாதிபத்திய உலகம் அவருக்குச் சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கி கொண்டாடிய பின்னரும், அவரை வலிந்து துதிபாடி ஆதரிக்கிறார், தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சியின் செயலரான திருவாளர் பெ.மணியரசன். ஏகாதிபத்தியங்களின் கைக்கூலியாகச் செயல்பட்டாலும், ''விடுதலை

**அமெரிக்க நாடாளுமன்றத்தின் சபாநாயகர் நான்சி பெலோஸி, தலாய்லாமாவுடன் இணைந்து தர்மசாலாவில் பத்திரிகையாளர்களைச் சந்திக்க வருகிறார்.**





படிப்பகம்

www.padippakam.com

கோருவோருக்கு விடுதலை கூடி வர வேண்டும் என்ற நோக்கமிருக்கும்... அந்த லட்சிய வேட்கையை, நேர்மையைக் கொச்சைப்படுத்தக் கூடாது'' என்று கூச்சமின்றி வக்காலத்து வாங்குகிறார். இதே வழியில் அமெரிக்காவுடன் இணக்கம் கண்டு 'ஒருவகை' தன்னாட்சியைப் பெற்றுள்ள குர்திஷ் 'எடுபிடி சுயாட்சி'யை வரவேற்கிறார். நாளை, இந்திய மேலாதிக்கவாதிகளுடன் இணக்கம் கண்டு துரோகிகள் தலைமையில் ஈழத்தில் 'ஒருவகை' தன்னாட்சி மலர்ந்தாலும், அதையும் மணியரசன் போன்ற பிழைப்புவாதிகள் ஆதரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எங்கேயாவது, யாராவது தேசிய இன உரிமை என்ற முகமூடியுடன் கிளம்பிவிட்டால் போதும், உடனே அதை ஆதரிக்க வேண்டும் என்பது தான் இத்தகைய இனவாத பிழைப்புவாதிகளின் கொள்கையாகி விட்டது. போதாக்குறைக்கு, இப்பிழைப்புவாதத்தையே மார்க்சிய-லெனினியம் என்று கூறி ஏய்க்கவும் இவர்கள் கிளம்பியுள்ளனர். ஆனால், இதற்கும் மார்க்சிய - லெனினியத்துக்கும் ஒட்டுமில்லை, உறவுமில்லை.

''... ஒவ்வொரு தேச விடுதலை இயக்கத்தையும், எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் ஒவ்வொரு குறிப்பிட்ட வழக்காற்றிலும், பாட்டாளி வர்க்கம் ஆதரித்தே தீரவேண்டும் என்று இதற்குப் பொருளல்ல. ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்துவதாக இருக்கக் கூடிய, தூக்கியெறிவதாக இருக்கக் கூடிய தேசவிடுதலை இயக்கங்களை தவறாமல் ஆதரிக்க வேண்டும் என்பதே இதன் பொருள். குறிப்பிட்ட சில ஒடுக்கப்பட்ட நாடுகளில் நடக்கும் தேச விடுதலை இயக்கங்கள், பாட்டாளி வர்க்க இயக்க வளர்ச்சியின் நலன்களுடன் மோதுபவையாக உள்ள நிகழ்வுகள் எழக்கூடும். அத்தகைய சந்தர்ப்பங்களில், அவற்றுக்கு ஆதரவு தருவது என்ற பிரச்சினைக்கு அறவே இடமில்லை'' என்கிறார் தோழர் ஸ்டாலின். ***(பார்க்க: ''லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்'' என்ற நூல்)***

- இதுதான் தேசிய இன விடுதலை குறித்த மார்க்சிய-லெனினியக் கோட்பாடு. மணியரசன் முன்வைப்பது மார்க்சிய-லெனினியம் அல்ல, மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டி ஏய்க்கும் அயோக்கியத்தனம்!

● பாலன்

# பசுவின் புனிதம் ஓட்டுப் பொறுக்கும் தந்திரம்

**பா.ஜ.க., கர்நாடகச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற இந்து மதவெறியைத் தூண்டி விடுகிறது.**

இந்து மதவெறியர்கள் எங்கெல்லாம் காலூன்றத் திட்டமிடுகிறார்களோ அங்குள்ள சிறுபான்மையினரை வம்புக்கிழுத்துத் தகராறை உருவாக்குவதற்காகப் பல உத்திகளைக் கையாளுகின்றனர் உள்ளூர் மசூதியில் வம்படியாகக் காவிக்கொடி ஏற்றுவது, பாகிஸ்தான் கொடியை பள்ளிவாசலில் ஏற்றி உள்ளனர் என்று வதந்தியைப் பரப்புவது, பாகிஸ்தான் அணி கிரிக்கெட்டில் வெற்றி பெறும்போது இங்குள்ள முசுலீம்கள் வெடி வெடிக்கிறார்கள் என்று புரளி கிளப்புவது - இப்படிப் பல உத்திகளைக் கையாண்டு மக்களை மதரீதியில் பிளந்து கலவரத்தின் மூலம் வேரூன்றுவது என்பதைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

இவர்களின் சதிச்செயல்களில் ஒன்றுதான், 'இந்துக்கள் தெய்வமாக வணங்கும் கோமாதாவை (!) முசுலீம்கள் உயிரோடு தோலை உரித்துக் கொல்கின்றனர்' என்று வதந்தியைப் பரப்பி இந்துக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தி, கலவரத்தை உருவாக்குவது. விரைவில் தேர்தல் நடைபெற உள்ள கர்நாடகத்தில், கோமாதா கொல்லப்படுவதாக பொய்ப் பிரச்சாரத்தை இந்துவெறியர்கள் தொடர்ச்சியாக செய்து வருகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் 4-ஆம் தேதி, கர்நாடக மாநிலத்தின் சிக்மகளூர் மாவட்டம், சாந்திபுரா பகுதியில், ஒரு பசு மாட்டைக் கொன்றதற்காக பஜ்ரங் தள் வெறியர்கள் ஜெயராம் என்ற ஒரு தலித்தையும், இரண்டு முசுலீம்களையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். 500 பேர் முன்னிலையில் சுமார் இரண்டு மணி நேரம் அவர்களை அடித்துப் படுகாயப்படுத்தியதுடன், அவர்களை நிர்வாணப்படுத்தி, மாட்டிறைச்சியைத் தலையில் வைத்து ஊர்வலமாக இழுத்து வந்துள்ளனர்.

சாந்திபுராவில் இருக்கும் முசுலீம் பெரியவர் குனியமுடு, தனது வீட்டு விழாவொன்றில் மாட்டிறைச்சி விருந்து பரிமாறுவதற்காக ஒரு பசுவை விலைக்கு வாங்கியுள்ளார் என்பதைத் தெரிந்து கொண்டு, அவரையும் அவரது

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

பஜ்ரங் தள் குண்டர்களால் தாக்கப்படும் தாழ்த்தப்பட்டவரான ஜெயராம்




படிப்பகம்

www.padippakam.com

# சி.ஐ.டி.யு.:

# தொழிற்சங்கமா? குண்டர் படையா?

**கொ**ல்கத்தா நகரைச் சேர்ந்த மின்சார ஒப்பந்தத் தொழிலாளர்கள், தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் செய்வதாக இருந்தனர். இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காகத் துண்டுப் பிரசுரங்களை மக்களிடையே விநியோகித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு 5 லாரிகளில் ஒரு கும்பல் வந்திறங்கியது. பிரச்சாரம் செய்து கொண்டிருந்த தொழிலாளர்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கத் தொடங்கியது. இரத்தம் சொட்டச் சொட்ட அவர்கள் சிதறி ஓடியும், அவர்களைத் துரத்திக் கொலைவெறியுடன் தாக்கியது. இத்தாக்குதலில் ராம் பர்வேஸ்சிங் என்ற தொழிலாளி உயிரிழந்தார். 15 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெறுகின்றனர். பட்டப்பகலில் பொதுமக்கள் முன்னிலையில் இப்படி ஈவிரக்கமின்றி ஒருவரை அடித்துக் கொன்றது ஏதோ ரவுடிக் கும்பல் அல்ல. தொழிலாளி வர்க்கத் தோழனாகத் தன்னைப் பற்றிப் பீற்றிக் கொள்ளும் சி.ஐ.டி.யு.வின் குண்டர்கள்தான் அவர்கள்.

கொல்கத்தாவுக்கும், அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கும் மின்சாரம் வழங்கும் ''கல்கத்தா மின் விநியோகக் கழகத்து''க்காக ஒப்பந்த அடிப்படையில் மின்கம்பிகள் பதிக்கும் பணியில் கடந்த 20 ஆண்டுகளாக ஈடுபட்டு வரும் இந்தத் தொழிலாளர்களை, அரசு மின்சார ஊழியர்களாக அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் முக்கியக் கோரிக்கை. உயர் அழுத்த மின்கம்பிகளை நிலத்தடியில் புதைக்க மண்ணைத் தோண்டும் இவர்கள் தவறுதலாக ஏற்கெனவே பதிக்கப்பட்டுள்ள மின்கம்பிகளைத் தொட்டுவிட நேரும்போது கருகிச் சாகும் அபாயம் மிக்க வேலையைச் செய்பவர்கள். இவர்களை மின்சாரத் தொழிலாளர்களாக அங்கீகரித்தால் மட்டுமே தினசரி ஊதியமாக ரூ. 225-ம், பணிக்காலத்தில் உயிர் இழப்பின் இழப்பீட்டுத் தொகையாக ரூ. 5 லட்சமும் இவர்களுக்குக் கிடைக்கும். இதுவரை அவர்களை அரசு, கட்டுமானத் தொழிலாளர்களாக மட்டுமே அங்கீகரித்து வந்துள்ளதால், இப்போது கிடைக்கும் தினக்கூலி ரூ. 110 மட்டுமே. இழப்பீட்டுத் தொகையோ ரூ. 1.5 லட்சம்தான்.

இந்தத் தொழிலாளர்கள், 'கல்கத்தா மின்விநியோகக் கழக ஒப்பந்தத் தொழிலாளர் சங்கம்' எனும் அமைப்பின் கீழ் திரண்டு இக்கோரிக்கையை வைத்துப் போராடியதற்காகத்தான் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளனர். சி.ஐ.டி.யு.வில் சேராமல் சுயேச்சையான தொழிற்சங்கம் கட்டி, வேலைநிறுத்தம் செய்யத் துணிந்தமைக்காகத்தான் இந்தக் கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர், பாட்டாளி வர்க்கத்(!) தொழிற்சங்கத்தினர்.

சுயேச்சையான தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மீது தாக்கிக் கொலை செய்த குற்றத்துக்காக சி.ஐ.டி.யு. அமைப்பைச் சேர்ந்த கௌரங் தத்தா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

''இயல்பாகவே ஆலை அதிபர்களின் ஆதரவாளர்களாக அரசு இருப்பது வழக்கம். 30 வருடங்களாக முதலாளித்துவ அரசை நடத்தி வரும் சி.பி.எம். அரசில் சி.ஐ.டி.யு.வும் அரசின் நீட்சியாக மாறிவிட்டது. தொழிலாளர் போராட்டம் என்பதெல்லாம் சி.ஐ.டி.யு.வின் செயல் திட்டத்திலேயே இல்லை. தொழிலாளர் பிரச்சினை என்று வரும்போதெல்லாம், சி.ஐ.டி.யு. தொழில் அதிபர்களின் நலனைக் கருத்தில் கொண்டே பேரம் பேசி வருகிறது'' என்று சர்மிஸ்தா சவுத்ரி எனும் பெண் தொழிற்சங்கவாதி குற்றம் சாட்டுகிறார்.



மேற்கு வங்க மின்சாரத் துறை ஊழியர்களாக அங்கீகரிக்கக் கோரிப் போராடி வரும் கொல்கத்தா மின்விநியோகக் கழக ஒப்பந்தத் தொழிலாளர்கள் மீது சி.ஐ.டி.யு. குண்டர்கள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட தொழிலாளி ராம் பர்வேஷ் சிங் மற்றும் படுகாயமடைந்த லால், ராம்ஜி பஸ்வான். (கீழ்படம்)





படிப்பகம்

www.padippakam.com

**தொழிலாளர் போராட்டம் என்பதெல்லாம் சி.ஐ.டி.யு.வின் செயல் திட்டத்திலேயே இல்லை. தொழிலாளர் பிரச்சினை என்று வரும் போதெல்லாம், சி.ஐ.டி.யு. தொழில் அதிபர்களின் நலனைக் கருத்தில் கொண்டே பேரம் பேசி வருகிறது.**

''தொழிலாளர்களின் பாதுகாப்பு நன்றாகவே உள்ளது. நாங்கள் சி.ஐ.டி.யு. வுடன் நெருக்கமாக செயல்படுகிறோம்'' என்று ஒப்பந்தத்தின் பேரில் மின்கழகத்துக்கு ஆட்களை அமர்த்தும் முதலாளிகளில் ஒருவரான அபாஸ் சாட்டர்ஜி, சி.ஐ.டி.யு. செய்து வரும் கருங்காலி வேலைக்கு நற்சான்று வழங்குகிறார்.

ஒரு மாநிலத்தின் தலைநகரில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் மாற்றுத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை வெறிகொண்டு தாக்கிக் கொலை செய்யத் துணிந்த சி.பி.எம். கட்சியினர், ஊடகங்களே உட்புக முடியாத நந்திகிராமில் எவ்வளவு அட்டூழியங்களைச் செய்திருப்பார்கள்? இவர்கள் நந்திகிராமில் நடத்திய கொலை, கொள்ளை, கற்பழிப்புகளை 'இந்திய புரட்சிகர ஜனநாயக முன்னணி' எனும் மனித உரிமை அமைப்பு தனது அறிக்கையில் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளது.

மின்வாரிய ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யக் கோரி, தமிழ்நாட்டில் சி.ஐ.டி.யு. பேரணி, ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறது. இதே கோரிக்கையை முன்வைத்துக் கொல்கத்தாவில் போராடும் தொழிலாளர்களைத் தாக்க சி.ஐ.டி.யு. குண்டர்களை ஏவுகிறது. கைதேர்ந்த பாசிஸ்டுகளுக்கே உரிய வகையில் செயல்பட்டு வரும் இந்தக் கருங்காலிகளைக் களத்தில் இறங்கி முறியடிக்காமல் தொழிலாளி வர்க்கம் தன்னைக் காத்துக் கொள்ள முடியாது என்பதையும், வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் இனி சி.ஐ.டி.யு.வில் இயங்க முடியாது என்பதையும் கொல்கத்தாவில் நடந்துள்ள கொலை நிரூபித்துக் காட்டிவிட்டது.

● செங்கதிர்

32-ஆம் பக்கத் தொடர்ச்சி...

வீட்டில் அப்போதிருந்த மற்ற இருவரையும் பிடித்து இழுத்து வந்து தாக்கியவர்கள் யாரோ முன்பின் தெரியாத நபர்கள் அல்லர். குனியமுடுவிடம் பலகாலம் நட்புடன் இருந்த அவரது பக்கத்து வீட்டுக்காரரின் பேரனும், தற்போது பஜ்ரங் தளத்தின் தலைவராக இருப்பவனுமான சுந்தரேச கௌடாதான். தாக்கப்பட்டவர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஜெயராம் என்பவர். இந்துவெறியர்கள் ஜெயராம் மீது கடுமையான கோபத்துடன் ''ஒட்டு மொத்த இந்துக்களின் துரோகி'' எனச் சொல்லிச் சொல்லி அடித்துள்ளனர்.

இச்சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து, முதிகெரே என்ற பக்கத்து ஊரிலுள்ள ஓர் உணவு விடுதியில் மாட்டிறைச்சி பரிமாறியதற்காக அதன் முதலாளியை பஜ்ரங் தளைச் சேர்ந்தவர்கள் மிரட்டியுள்ளனர். அதற்கு இரண்டு நாள் கழித்து ஹெலன் மேரி என்ற பள்ளித் தலைமையாசிரியரை, மதம் மாற்ற முயற்சித்ததாகக் கூறித் தாக்கியுள்ளனர். தேர்தல் தேதி நெருங்க நெருங்க, சாதாரண விசயங்களைக் கூட ஊதிப் பெரிதாக்கி அதற்கு மதச்சாயம் பூசி மக்களை மோதவிடுவது கர்நாடகத்தில் வாடிக்கையாகி வருகிறது.

இதே பசுமாட்டு விவகாரத்தை வைத்துத்தான் கடந்த 2006-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மங்களூர், பரங்கிப்பேட்டை, உல்லால் போன்ற நகரங்களில் முசுலீம்களுக்கெதிராக தாக்குதல்களை நடத்தினர்.

பசுமாட்டைக் கொன்றதற்காக தலித்துகளைத் தாக்குவதும், கொல்வதும் இது முதல்முறையன்று. சில வருடங்களுக்கு முன்பு ஹரியானா மாநிலத்தில் இறந்து போன பசுத்தோலை உரித்ததற்காக 5 தலித்துகள் அடித்துக் கொல்லப்பட்டனர். அப்போது பேட்டியளித்த விசுவ இந்து பரிசத்தின் துணைத்தலைவர் கிரிராஜ் கிஷோர், 'ஒரு பசுவின் உயிரைவிட 5 தலித்துகளின் உயிர் பெரிதில்லை' என்று திமிராகக் கூறினார்.

'பசுவைக் கொல்லக் கூடாது' எனக் கட்டளையிடும் இந்துவெறியர்கள், அமெரிக்காவிற்குப் பிழைக்கச் சென்ற தங்களது வாரிசுகள், அங்கே தினசரி கோமாதா கறி தின்பதற்கு வருந்துவ தொன்றுமில்லை. மாடுகளை வெட்டிக் கொன்று அவற்றின் தோல்களைப் பத னிடும் தொழிலை நடத்துபவர்களிடம் நன்கொடை வாங்கிக் கொள்ளவும் இவர்கள் கூச்சப்படுவதில்லை.

பசுமாட்டைத் தெய்வமாக வணங்கு வது பார்ப்பனிய மதத்தில் மட்டும்தான் வழக்கமாக உள்ளது. பார்ப்பனியத்தின் நம்பிக்கையை பிற மக்கள் மீதும் இவ் வாறு வன்முறைத் தாக்குதல்கள் மூலம் திணித்து முசுலீம்கள், தலித்துகளின் உணவுப் பழக்கத்தையே குற்றச்செயல் என்ற கருத்தை உருவாக்கி வருகின்ற னர். ஒரு மனிதன் எதைச் சாப்பிடலாம் எதைச் சாப்பிடக் கூடாது என்பதை முடிவு செய்வதைக் கூட இந்து பாசிஸ்டு கள் தீர்மானிக்கும் நிலை உருவாகிறது



**பஜ்ரங் தள்ளால் தாக்கப்பட்ட பாவாவின் உடலில் ஏற்பட்ட காயங்களைக் காட்டுகிறார், குனியமுடு.**

சிக்மகளூர் பகுதியில் மாட்டுத் தோலை உரிப்பதைத் தொழிலாகச் செய்துவரு ஆயிரக்கணக்கான தலித்களும், மு லீம்களும், பிழைப்பதற்கு இனி என்ன செய்ய முடியும்?

கர்நாடகத்தில் சிறுபான்மையி ருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் எ ராக இந்துவெறியர்கள் தாக்குதல் நட துவதை அம்மாநிலத்திலிருக்கும் எந் ஓட்டுக் கட்சியும் கண்டிக்க முன்வ வில்லை. பெயரிலே மதச்சார்பின்மை யைக் கொண்டிருக்கும் ஜனதா தளம கட்டும், இந்திய அளவில் மதவெறிக் மாற்றாகத் தன்னைக் காட்டிக் கொ ளும் காங்கிரசாகட்டும் இத்தாக்குத களை மவுனமாக ஆதரிப்பதன் மூல இந்துவெறி ஓட்டுக்களைப் பொறுக் மதவெறியில் குளிர்காயவே காத்து கிடக்கின்றன.

● அழ

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

– இந்த உண்மைகளை விளக்கியும், பா.ஜ.க.வை தமிழகத்திலிருந்தே விரட்டியடிக்க அறைகூவியும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் வீச்சாகப் பிரச்சாரத்தை மேற்கொண்டு, அதன் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களையும் கொடும்பாவி எரிப்புப் போராட்டங்களையும் நடத்தின. 3.4.08 அன்று தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் இனவெறி பாசிஸ்டுகளான எடியூரப்பா, வட்டாள் நாகராஜ், அத்வானி ஆகியோரின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டத்துடன் தொடங்கிய இவ்வமைப்புகளின் போராட்டம், அடுத்தடுத்து ஓசூர், உடுமலை, தர்மபுரி, திருப்பூர், திருவாரூர், திருச்சி, கடலூர், கோவை என பரவலாக பல பகுதிகளிலும் 7.4.08 வரை நடந்தது. சென்னையில் 5.4.08 அன்று பா.ஜ.க. தலைமை நிலையத்தை முற்றுகையிட்டுப் போராடிய இவ்வமைப்பின் தோழர்களைக் கைது செய்த போலீசு, பின்னர் விடுவித்தது.

பொதுவில் கன்னட இனவெறியை எதிர்த்து ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் நடந்து வந்த நிலையில், இனவெறியைத் தூண்டும் இந்துவெறி பா.ஜ.க. கும்பலை இனங்காட்டி, அக்கும்பலை தமிழகத்திலிருந்து விரட்ட மக்களுக்கு அறைகூவி நடத்தப்பட்ட புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரமும் கொடும்பாவி எரிப்பு ஆர்ப்பாட்டங்களும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

—பு.ஜ. செய்தியாளர்கள்.


## இப்போது விற்பனையில்...




### லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்

— ஸ்டாலின்

ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியுமான சகாப்தத்தின் மார்க்சியம்தான் லெனினியம். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கோட்பாடுகளும் செயல்தந்திரங்களுமே லெனினியம். போலி கம்யூனிஸ்டுகளும் போலி புரட்சியாளர்களும் இவற்றை இருட்டடிப்பு செய்து திரித்துப் புரட்டிவரும் இன்றைய சூழலில், கம்யூனிசப் புரட்சியாளர்கள் ஒவ்வொருவரும் கற்றுத் தேர வேண்டிய மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளைத் தொகுத்தளிக்கும் நூல்.

கீழைக்காற்று வெளியீடு — விலை: ரூ. 75/-

### ஒரு கம்யூனிச துரோகியின் மரண சாசனம்




போலி கம்யூனிச சி.பி.எம். கட்சியின், நூற்றாண்டு விழா காணும் துரோகத் தலைவரான பி.ராமமூர்த்தி எழுதி வெளியிட்ட, ''ஆரிய மாயையா? திராவிட மாயையா? விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்'' என்ற நூலின் மீதான அரசியல்-சித்தாந்த விமர்சனம். இருபது ஆண்டுகளுக்கு முன்பு புதிய ஜனநாயகம் இதழில் வெளிவந்த தொடர்கட்டுரைகளின் தொகுப்பு.

புதிய ஜனநாயகம் வெளியீடு — விலை: ரூ. 40/-


**நூல்கள் கிடைக்குமிடம்:**

**கீழைக்காற்று வெளியீட்டகம்**

10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை,
சென்னை – 600 002. தொலைபேசி: 044-28412367



## தில்லைச் சமரில் வென்றது தமிழ்!
## –காட்சிப் பதிவுகள்.




–இது மார்ச் 2 போராட்டத்தின் நேரடிக் காட்சிப் பதிவு.

நந்தன் முதல் வள்ளலார் வரை அனைவரையும் தீக்கிரையாக்கிய தீட்சிதக் கும்பல், வீழ்த்தப்படும் காட்சியை விவரிக்கும் வரலாற்று ஆவணம்.

செஞ்சட்டைத் தொண்டர்கள் சிவனடியாரை அழைத்து வரும் பேரணி...
தடுத்து நிற்கும் தீட்சிதர்கள்...
போர்க்களமாகும் சிற்றம்பல மேடை....
ஆலயவாயிலில் தோழர்கள் மீது போலீசு தடியடி.....

அனைத்தையும் உங்கள் கண் முன்னே விரிக்கும் ஓர் ஆவணப்படம்.

ஒளிக்குறுந்தகடு (DVD)
விலை: ரூ.50
(அஞ்சல் செலவு தனி)

**வெளியீடு:**
மனித உரிமைப் பாதுகாப்பு மையம், கடலூர்.

**கிடைக்குமிடங்கள்:**

புதிய கலாச்சாரம்,
16, முல்லைநகர் வணிக வளாகம், அசோக் நகர்
2வது நிழற்சாலை,
சென்னை. 600 083
தொலைபேசி:
044 2371 8706
கைபேசி: 99411 75876

கீழைக்காற்று
10, அவுலியா தெரு,
சென்னை.600 002
தொலைபேசி:
044 2841 2367




படிப்பகம்

www.padippakam.com
PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# தீண்டாமைச் சுவர்: தமிழகத்தின் இழிவு

மதுரை மாவட்டம் - உத்தப்புரம் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள், மேல்சாதியினர் வசிக்கும் தெரு வழியாகச் செல்வதைத் தடுப்பதற்காக, அக்கிராம மேல்சாதியினர் சுவரொன்றை எழுப்பி, காலனியையும் ஊரையும் தனித்தனியாகப் பிரித்திருப்பதோடு, கடந்த ஏப்ரல் மாதத்தில் அச்சுவற்றில் மின் வேலிகளையும் பதித்து, மின்சாரத்தையும் பாய்ச்சியுள்ளனர். இன்று நேற்றல்ல; இத்தீண்டாமைச் சுவர் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக இருந்து வருகின்றது.

இச்சுவற்றில் மின்சாரம் பாய்ச்சப்படுவதை "ஹிந்து" நாளிதழ் (ஏப்.17) அம்பலப்படுத்திய பிறகுதான், தமிழக அரசு 'விழித்துக் கொண்டு' அச்சுவருக்கு அருகாமையில் செல்லும் மின்சாரக் கம்பிகளை அப்புறப்படுத்தி, சுவற்றில் மின்சாரம் பாய்ச்சப்படுவதைத் தடுத்தது. எனினும், அத்தீண்டாமைச் சுவரை அப்புறப்படுத்தத் தமிழக அரசு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இத்தீண்டாமை குற்றத்திற்காக ஒரு மேல்சாதி வெறியனைக் கூடத் தமிழக அரசு கைது செய்யவில்லை.



உத்தப்புரம் கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பையும் மேல்சாதி தெருவையும் பிரித்துக் கட்டப்பட்டுள்ள தீண்டாமைச் சுவரும், அதில் பதிக்கப்பட்டுள்ள மின்வேலியும்.

பேருந்து நிறுத்தத்தையும் மேல்சாதித் தெருவையும் பிரித்துக் கட்டப்பட்டுள்ள மற்றொரு சுவர்.



மாறாக, அமைதிக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து, தனது ஆதிக்கசாதி விசுவாசத்தைத் தான் காட்டிக் கொண்டது.

உத்தப்புரம் கிராமத் தாழ்த்தப்பட்டோர், அக்கிராமத்திலுள்ள தேநீர்க் கடைகளுக்கு அருகில் கூடச் செல்ல முடியாது; மேல்சாதியினர் வசிக்கும் தெருக்களில் நடமாட முடியாது; கிராமக் கோயில் திருவிழாக்களில் உரிமையோடு பங்கெடுத்துக் கொள்ள முடியாது; கிராமத்திடலையோ, சுடுகாட்டையோ பயன்படுத்த முடியாது. இதற்கும் மேலாக, அக்கிராமப் பேருந்து நிறுத்தத்தில் உள்ள திண்டில் தாழ்த்தப்பட்டோர் அமருவதைச் சகித்துக் கொள்ள முடியாத மேல்சாதி வெறியர்கள், பேருந்து நிறுத்தத்தையும், மேல்சாதித் தெருவையும் பிரிக்கும் வண்ணம் மற்றொரு சுவரையும் எழுப்பியுள்ளனர். இதன் மூலம், தாழ்த்தப்பட்டோர் பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்திருக்கும் "அத்துமீறலை" தெருவில் இருந்து பார்க்க முடியாதபடி தடுத்துள்ளனர்.

இத்தீண்டாமைச் சுவரையும், இது போன்ற வன்கொடுமைகளையும் அனுமதித்துக் கொண்டு, "சமூக நீதி" பற்றி வாய்கிழியப் பேசுவதற்குத் தமிழகத்திற்கு அருகதையுண்டா?

படிப்பகம்